Computer Today

பெப்ரவரி 2011

# கம்ப்யூட்டர் டுடே

கணினிப் பிரியர்களின்
கனவுச் சஞ்சிகை

தகவல் தொழில்நுட்ப மாத இதழ் விலை: 50/-



## கட்டற்ற இணைப்பாவனைக்கு அகலப்பட்டை இணைப்பு


## கணினியில் சில Video கோப்புகள் இயங்க மறுப்பதேன்?

## யுனிக்கோட் என்றால் என்ன?


NHM WRITER

## பேஸ்புக் பாதுகாப்பு வழிகள்

இலங்கையின் முதலாவது தேசிய தமிழ் கணினிச் சஞ்சிகை




ஆண், பெண்
இருபாலருக்கும்
அனுபவம் வாய்ந்த
ஆசிரியர்களால்
மும்மொழிகளிலும்
பயிற்சிகள்
வழங்கப்படுகின்றன...






குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவாக
சாரதி அனுமதிப் பத்திரம் பெறுவதற்கு

# கிருபா லேணர்ஸ்

Reg No: D9/589 அரச அங்கீகாரம் பெற்ற சாரதிப் பாடசாலை

கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 4353, 0777225292
0715364822

கிளை : மகாத்மா வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 3006560,
0718799190

கிளை : ஐயனார் வீதி, கச்சேரி
அருகில், கிளிநொச்சி.
தொ.பே.: 021 2285505,
0777238600



# உள்ளே...







பாஸ்வேர்ட் பாதுகாப்பு?

உயிர் காத்த பேஸ்புக்







ஒரு இரகசிய REFOG உளவாளி






பேஸ்புக்கை வேகமாகப் பயன்படுத்த குறுக்குவிசைகள்



Windows இன் பாஸ்வேர்ட்டை உடைக்கலாம்

தொழில் வங்கி

இலகுவான e-mail Form ஒன்றை அமைப்பது எவ்வாறு?





## கம்ப்யூட்டர் ருடே

**கணினிப் பிரியர்களின் கனவுச் சஞ்சிகை**

அச்சிட்டு வெளியிடுபவர்கள் :

**'Uthayan IT Island'**
**359, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**தொலைபேசி: 021 5677600**

ஆசிரியர் பீடம்

ஆசிரியர் : சி.அனுராஜ்
ஆசிரியர் குழு : ம.அருள்குமரன்
த.தவரூபன்
சி.கிஷோகுமார்
சு.பிரதீப்


**கம்ப்யூட்டர் ருடேயில் உங்கள் ஆக்கங்கள் பிரசுரமாக வேண்டுமா?**

தெளிவான கையெழுத்தில்

**கம்ப்யூட்டர் ருடே**
**359, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**




அல்லது

info@computertoday.lk or
ComToday@uthayan.com எனும் மின்னஞ்சலுக்கு அனுப்பிவைக்கவும்.

கம்ப்யூட்டர் ருடேயில் பிரசுரமாகும் ஆக்கங்களை ஆசிரியரின் அனுமதியின்றி பகுதியாகவோ முழுமையாகவோ மறுபிரசுரம் செய்ய இயலாது.

# கம்ப்யூட்டர் ருடே

பெப்ரவரி 2011

வாசகர்களுக்கு வணக்கம்!

இலங்கையில் இருந்து வெளிவந்த முதலாவது தமிழ் தகவல் தொழில்நுட்பச் சஞ்சிகையான "**கம்ப்யூட்டர் ருடே**"யின் இன்னுமொரு இதழில் மூலம் எனது வாசகர்களாகிய உங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சியடைகிறோம்.

"கரைகள் ஓய்வை விரும்பினாலும்;
அலைகள் விடுவதில்லை.
மரங்கள் ஓய்வை விரும்பினாலும்;
காற்று விடுவதில்லை.
ஓடி ஓடி ஒழிந்தபோதும்;
வாழ்க்கை விடுவதில்லை."

அதே போன்றுதான், நாங்கள் சஞ்சிகையை நிறுத்த நினைக்கும் போதெல்லாம் வாசகர்களாகிய நீங்களும் எம்மை விடுவதாயில்லை.

"**கம்ப்யூட்டர் ருடே**" 2000 ஆம் ஆண்டு ஆவணி மாதம் தனது முதலாவது இதழுடன் தகவல் தொழில்நுட்பத்தில் தமிழ்மொழி மூலமான பயணத்தை ஆரம்பித்தது. அன்றிலிருந்தே வாசகர்களது பெரும் வரவேற்பைப் பெற்றிருந்தது. இருந்தபோதும் நாட்டில் நிலவிய விரும்பத்தகாத சூழ்நிலைகள் காரணமாகச் சஞ்சிகையினைத் தொடர்ந்து வெளியிடாது இடைநிறுத்த வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளானோம்.

காலத்தின் தேவைகருதி "**கம்ப்யூட்டர் ருடே**"யினை மீண்டும் வெளியிடுகிறோம். இதனை வெளியிடுவதற்கு முழுப் பொறுப்பையும் ஏற்றுள்ள "உதயன்" நிறுவனத்திற்கு, ஆசிரியர் பீடம் மற்றும் வாசகராகிய உங்கள் அனைவரது சார்பிலும் நன்றிகள் கூறுகின்றோம்.

வாசகர்களாகிய உங்களின் நன்மை கருதி அனைவரதும் தேவைகளை பூர்த்திசெய்யும் முகமாகத் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த தற்போதைய நிலவரங்களையும், செய்திகளையும் தாங்கி வருவதுடன் பாடசாலை மாணவர்களுககுமான தகவல் தொழில்நுட்பப் பாடத்திட்டத்திற்கு ஏற்பவும் தொடர்கள் அமையும்.

இனிவரும் காலத்தில் தொடர்ச்சியாக மாதாந்தம் உங்களைக் "**கம்ப்யூட்டர் ருடே**" இதழின் ஊடாக சந்திப்போம் என்று உறுதி கூறிவிடைபெறுகிறோம்.

அன்புடன்

ஆசிரியர்.

## புத்தகத்தின் உள்ளே!


♦ தேடிப்பார்ப்போம் - தெரிந்துகொள்வோம் 3
♦ All Player 4
♦ வீடியோக்களை தரவிறக்கம் செய்ய... 4
♦ Facebook பாதுகாப்பு வழிகள் 5
♦ Yahoo பாவனையாளரைக் கவர புதிய முயற்சி 7
♦ Microsoft Office 2007: MS Word 9
♦ பாஸ்வேர்ட் பாதுகாப்பு? 12
♦ தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் 13
♦ கணினிக் கவிதை - 01 16
♦ கட்டற்ற இணையப்பாவனைக்கு அகலப்பட்டை இணைப்பு 17
♦ மென்பொருள் அறிமுகம் 19
♦ மைக்ரோசொப்ட் - பில்கேட்ஸ் 20
♦ உங்கள் தகவல்களை பாதுகாக்க உதவுகிறது QR Code தொழில்நுட்பம் 22
♦ கூகுளின் புதிய வசதி 23
♦ உங்கள் புத்தகங்களை நீங்களே இணையம் மூலம் அச்சிட்டு - வெளியிட்டு - விற்பனையும் செய்யலாம்! 24
♦ கணினியில் சில Video கோப்புகள் இயங்க மறுப்பதேன்? 25
♦ php with MySQL 27
♦ யுனிக்கோட் என்றால் என்ன? 29
♦ Photoshop CS4 34
♦ Windows இன் பாஸ்வேர்ட்டை உடைக்கலாம் 36
♦ மைக்ரோசொப்ட் வழங்கும் இலவச மென்பொருள் 37
♦ REFOG ஒரு இரகசிய உளவாளி 38
♦ பேஸ்புக்கை வேகமாக பயன்படுத்த... 40
♦ மின்வணிகம் [e-commerce] 41
♦ Google Chrome... 45
♦ சைபர் கிருமினல்கள் உள்நுழையலாம் உங்கள் தகவல்கள் திருடப்படலாம் 46 48


வாசகர்களே!

உங்களது ஆக்கங்கள், கருத்துகள் அனைத்தையும் நாம் ஆவலுடன் எதிர் பார்க்கிறோம்.

அடுத்த இதழ் ஆரோக்கியமாக வெளிவர உங்களது பங்களிப்பு மிக அவசியம்.


தொடர்புகளுக்கு:


**359, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**தொலைபேசி: 021 5 677 600**

info@computertoday.lk

# Wi-fi தொழில்நுட்பம்

WiFi தொழில்நுட்பம் இன்று எமது நாட்டிலும் பரவலான பயன்பாட்டுக்கு வந்திருக்கிறது. பொதுவாக Laptop, PDA Phone போன்றவற்றிலும், அலுவலகங்களிலும் இந்தத் தொழில் நுட்பம் பயன்படுத்தப்படுகிறது. பழைய முறையான Wired Network ஐக் காட்டிலும் இது சுலபமான முறையாகும். இதனை நிறுவுதலும் இயக்க நிலைக்குக் கொண்டுவருதலும் சிக்கலில்லாத தன்மையைக் கொண்டுள்ளமை இதன் சிறப்பம் சமாகும்.




இந்த Wireless Network – WiFi ஆனது 802.11 Network எனவும் அழைக்கப்படுகிறது.

Wireless Network ஆனது வானொலி, தொலைக்காட்சி மற்றும் செல்லிடப்பேசிகள் போல ரேடியோ அலைகளைப் பயன்படுத்தி இயங்குகிறது. இதைத் தொழில்நுட்ப வழக்கில் Two Way Radio Communication என அழைக்கலாம். இதன் தகவல் எல்லை சாதாரணமாக 100 மீற்றர்கள் வரை இருக்கும்.

ஒரு கணினியில் உள்ள Wireless Network Adapter ஆனது அதன் அருகில் உள்ள Wireless Access Point உடன் எப்போதும் தொடர்பில் இருக்கும். அது கணினியின் சமிக்ஞைகளை ரேடியோ அலைகளாக மாற்றி (Coding) தன்னிடமுள்ள Antenna மூலமாக Wireless Access Point அல்லது Router இற்கு அனுப்பி வைக்கிறது. Router ஆனது அந்த அலைகளைத் திரும்பவும் கணினிச் சமிக்ஞைகளாக மாற்றி (Decoding) இணையத்துடன் தொடர்பு கொள்கிறது. அதேபோல, இணையத்திலிருந்து தகவல்களைப் பெற்றபின் அவற்றை ரேடியோ அலைகளாக மாற்றி (Coding) தன்னிடமுள்ள Antenna மூலமாக கணினியின் Wireless Network Adapter இற்கு அனுப்பிவைக்கிறது. Wireless Network Adapter ஆனது அவற்றைத் திரும்பவும் கணினிச் சமிக்ஞைகளாக மாற்றி (Decoding) திரையில் நமக்கு காண்பிக்கிறது.

இந்த ரேடியோ அலைகளின், அலைவரிசை 2.4 GHz – 5 GHz ஆகும். இது சாதாரண ரேடியோ அலைகளைவிடவும் அதிக வீச்சைக் கொண்டது. இந்தக் கூடுதல் அலைவரிசை வீச்சு அதிகப்படியான தகவல்களைப் பரிமாற உதவுகிறது.

Wireless Network – WiFi அல்லது 802.11 Network எனப்படும் இந்தத் தொழில்நுட்பப் பிரயோகத்தின் சில அடிப்படை வகைகள் பற்றிப் பார்ப்போம்.

**802.11a** - இதன் அலைவரிசை 5 GHz வரை இருக்கும். செக்கனுக்கு 54 Mbps வரை தகவல் பரிமாற்றம் செய்யும் திறன் வாய்ந்தது. இது Orthogonal Frequency Division Multiplexing (OFDM) என்ற தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ரேடியோ அலைகளைப் பல அலைக்கற்றைகளாகப் பிரித்துக் கையாள்வதால் தகவல் இழப்பின்றியும் நல்ல வேகத்துடனும் இது இயங்குகிறது.

**802.11b** – இதன் அலைவரிசை 2.4 GHz வரை இருக்கும். செக்கனுக்கு 11 Mbps வரை தகவல் பரிமாற்றம் செய்யும் திறன் வாய்ந்தது. இது Complementary Code Keying (CCK) Modulation என்ற தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துகிறது.

**802.11g** – இதன் அலைவரிசை 2.4 GHz வரை இருக்கும். ஆனால் செக்கனுக்கு 54 Mbps வரை தகவல் பரிமாற்றம் செய்யும் திறன் வாய்ந்தது. இதுவும் Orthogonal Frequency Division Multiplexing (OFDM) தொழில்நுட்பத்தையே பயன்படுத்துகிறது.

**802.11n** – இதுவும் 802.11g இணைப்பைப் போன்றதுதான். ஆனால் இதன் வேகம் 802.11g – ஐ விட மூன்று மடங்கு அதிகம். கிட்டத்தட்ட 140 Mbps. இது Multiple Input - Multiple Output (MIMO) என்ற தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துகிறது.

பொதுவாக நாம் பயன்படுத்தும் Wireless வலையமைப்பிற்கு ஒரு பெயர் இருக்கும். இதனை SS ID (Service Set Identifier) என்பர். பொதுவாக இது Wireless Router இன் தயாரிப்பாளரின் பெயரிலேயே இருக்கும். தேவைப்படுமானால் இதை நாம் மாற்றிக் கொள்ளலாம். ஒவ்வொரு Wireless Routerக்கும் ஒரு Channel இருக்கும். இந்த Channel இன் அடிப்படையிலேயே தகவல் பரிமாற்றம் நடைபெறும். ஒரு வேளை நாம் இரண்டு Wireless Router களைப் பயன்படுத்தினால் இரண்டிற்கும் தனித்தனியே வேறு வேறு Channel களைப் பயன்படுத்தவேண்டும். இல்லையென்றால் தகவல் பறிமாற்றத்தில் சில குறைபடுகள் ஏற்படும்.

அத்தோடு நம்முடைய Wireless Router களை Secure Mode இலேயே Configure செய்து வைக்கவேண்டியது அவசியம். இல்லையென்றால் வெளியார்கள் நம்முடைய வலையமைப்பை நாம் அறியாமலேயே உபயோகிக்கக்கூடும்.

WiFi Protected Access – WPA, Wired Equivalency Privacy – WEP போன்றவை Wireless Security இன் சில வகைகள். இனி WiFi பற்றி யாராவது கேட்டால் வெளுத்து வாங்கவேண்டியதுதான், இல்லையா?

# All Player

போலந்து நகரில் இருந்து புறப்பட்ட புதிய புயல் All player. எந்த ஒரு வீடியோ வடிவையும் இயக்க இது உதவும். திரைப்படத்திற்கான சரியான சப் ரைட்டிலை தானாகவே இணையத்திலிருந்து தரவிறக்கும் ஆற்றல் இதற்கு உண்டு.




கணினியில் திரைப்படங்களைக் கண்டு மகிழும்போது சப் ரைட்டிலுடன் காண விருப்பமா?

யூ டியுப் தளத்திலிருந்து விடியோவை நம் கணினியில் தரவிறக்குவதற்கும் இதை பயன்படுத்தலாம். விண்டோஸ் இயங்கு தளத்தில் இயங்கும். திரைப்படத்தின் சப் ரைட்டி லுக்கான ஒலிவடிவை உச்சரிக்கும் ஆற்றல் இதற்கு உண்டு.

http://www.allplayer.org/download

# கேள்விக்கென்ன பதில்



கம்ப்யூட்டர் ருடே வாசகர்களுக்கு ஒரு சவால்!

கீழே கேட்கப்பட்டுள்ள வினாவுக்கு உங்களுக்குப் பதில் தெரியுமா? இல்லை, பதிலைத் தேடி உங்களால் அறிந்துகொள்ள இயலுமா?

கேள்விக்கான பதிலைக் கண்டுபிடித்துவிட்டீர்கள் என்றால், உடனே எங்கள் முகவரிக்கு பதிலைத் தெளிவாகவும் விரிவாகவும் எழுதி அனுப்புங்கள்.

இந்த மாதத்துக்கான கேள்வி:

**DNS Computer என்றால் என்ன?, அது இயங்கும் தொழில்நுட்பத்தை விளக்குக?**

உங்கள் பதில்கள் வந்துசேர வேண்டிய முகவரி:

**கம்ப்யூட்டர் ருடே**
**கேள்விக்கென்ன பதில்,**
**359, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**



## வீடியோக்களை தரவிறக்கம் செய்ய அருமையான மென்பொருள்

வீடியோக்களை தரவிறக்கம் செய்ய நாம் பெரும்பாலும் நாடுவது Youtube தளம் ஆகும். இந்த தளத்தில் வீடியோக்களை தரவிறக்கம் செய்ய பல வழிகள் உள்ளன. நாம் என்னத்தான் முயன்றாலும் ஒருசில தளங்களில் உள்ள வீடியோவை மட்டும் நம்மால் தரவிறக்கம் செய்யவே முடியாது. ஆனால் இவை எல்லாவற்றுக்கும் மேலாக இணையத்தில் கிடைக்கும் வீடியோகள் அனைத்தையும் தரவிறக்கம் செய்ய ஒரு அருமையான மென்பொருள் உள்ளது அதுதான் All Video Downloader. இந்த மென்பொருளின் மூலம் சுமார் 280 தளங்களில் உள்ள வீடியோக்களை தரவிறக்கம் செய்ய முடியும் என அந்த நிறுவனம் கூறியுள்ளது.




இந்த மென்பொருளை இணையத்தில் இருந்து பதிவிறக்கி நிறுவிக்கொள்ளவும், பின் இந்த அப்ளிகேஸனை திறக்கவும். தோன்றும் விண்டோவில் வீடியோ URL யை உள்ளிட்டு Download என்னும் பொத்தானை அழுத்தவும். பின் வீடியோ டவுண்லோட் ஆக தொடங்கும். இந்த மென்பொருள் சப்போர்ட் செய்யக்கூடிய வீடியோ பைல் வகைகள். avi, .wmv, .mpeg1, .mpeg2, .mp4, .mov, .flv, iPod™, iPod Touch™, iPad™, iPhone™, Psp™, Ps3 ™, DVD.

இந்த மென்பொருளானது மிகவும் பயனுள்ளதாக இருக்கும். அனைத்து தளங்களில் உள்ள வீடியோக்களையும் , இந்த மென்பொருள் மூலமாக தரவிறக்கம் செய்ய முடியும்.

http://www.allvideodownloader.com/

# facebook பாதுகாப்பு வழிகள்

சமுதாய இணையத்தளமாக மிக வேகமாக வளர்ந்துவரும் பேஸ்புக்கின் பாவனையாளர்களின் எண்ணிக்கை தொடர்ந்து உயர்ந்து கொண்டிருந்தாலும், அது ஓரளவிற்கு பயமுறுத்தும் தளமாகவே பலரால் கருதப்படுகிறது.

இந்த தளத்திற்கும் இதனை நிர்வகிப்பவர்களுக்கும், நீங்கள் யார், உங்கள் நண்பர்கள் யார், உங்களுக்கு என்ன பிடிக்கும், நீங்கள் எங்கே வசிக்கிறீர்கள் என்பதில் இருந்து நீங்கள் இப்போது எங்கே இருக்கிறீர்கள் என்பதுகூடத் தெரியும்.

பன்னாட்டளவில் 50 கோடி பேர் பேஸ்புக்கில் உறுப்பினர்களாக உள்ளனர். மனித சமுதாய வளர்ச்சியில் இத்தனை பேர் இணைப்பில் இருப்பது இதுவே முதல் முயற்சியாகும். பலர் இதனில் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கின்றனர். ஆனால் சிலருக்கு இது ஒரு மகிழ்ச்சியும், பயமும், வருத்தமும் கலந்த ஓர் அனுபவமாக உள்ளது. தனிநபர் தகவல் பாதுகாப்பு குறித்து இவர்கள் கவலைப்படுகின்றனர்.

இதனால்தான் அண்மையில் அமெரிக்க அரசாங்கம், தனது உறுப்பினர்கள் குறித்த தகவல்களை எந்த அடிப் படையில் இன்னொரு நிறுவனத்திற்கு பேஸ்புக் அளித்தது என்று கேட்டு நோட்டீஸ் அனுப்பியது. உலகின் அனைத்து பகுதிகளிலிருந்தும் அமெரிக்க அரசின் இந்த நடவடிக்கைக்கு ஆதரவு கிடைத்தது. பலரும் பேஸ்புக் தளத்தின் பாதுகாப்பு குறித்தும் கவலை தெரிவித்தனர்.




நம் தனிநபர் தகவல்களை பேஸ்புக் தளத்தில் எவ்வாறு பாதுகாக்கலாம் என்பதற்கான சில செயல்முறைகள் இங்கு தரப்படுகின்றன.

1. பேஸ்புக் பிளேசஸ் (**Facebook Places**):

இந்த தளத்தில் காணப்படும் 'பேஸ்புக் பிளேசஸ்' என்னும் வசதியைப் பயன்படுத்துவது சில நன்மைகளைத் தருகிறது. ஆனால் நீங்கள் உங்கள் மொபைல் அல்லது கணினி மூலம் பேஸ்புக் தளத்தைப் பயன்படுத்துவதனைப் பொறுத்து அந்த நன்மை தலைவலியாக மாறவும் சந்தர்ப்பம் உள்ளது.

நீங்கள் இருக்கும் இடத்தை வெளிப்படுத்துகையில், மோசமான எண்ணம் அல்லது திட்டம் கொண்டிருப்பவர்களின் கைகளில், இந்த தகவல்கள் சென்றடைவது உங்களுக்குப் பாதிப்பைத் தரலாம். நீங்கள் அண்ட்ரொய்ட் சிஸ்டத்தில் இயங்கும் மொபைல் போன் அல்லது ஐ-போன் பயன்படுத்தி பேஸ்புக் செல்பவராக இருந்தால், இந்த ஆபத்து ஏற்படும் வாய்ப்புகள் அதிகமாகும்.

பேஸ்புக் பிளேசஸ் தளத்தில் இருக்கையில், உங்கள் தகவல்களை மாறா நிலையில் பேஸ்புக் வைக்கிறது. எனவே பேஸ்புக்கில் மட்டுமல்ல, இன்டர்நெட்டில் இருக்கும் எவருக்கும் அந்த தகவல்கள் கிடைக்க வாய்ப்புண்டு. இதிலிருந்து மீள்வதற்கு, வலது மேல்புறம் உள்ள Account tap செல்லவும். அங்கு Privacy Settings என்பதனைத் தேர்ந்தெடுக்கவும்.

இங்கு நீங்கள் யாரெல்லாம் உங்கள் தனிநபர் தகவல்களைக் காணமுடியும், எந்த அளவிற்குக் காணமுடியும் என்பதனை வரையறை செய்திடலாம். நீங்கள் உங்கள் comments மற்றும் பைல் அப்லோடிங் செய்திடுகையில் மற்றவர்கள் எந்த அளவிற்கு அதனைக் காணலாம் என்பதனையும் முடிவு செய்து செட் செய்திடலாம்.

யாருமே உங்கள் personal தகவல்களை அணுகக்கூடாது எனில், பேஸ்புக் பிளேசஸ் பக்கத்தினையே முழுமையாக உங்களைப் பொறுத்தவரை இயங்காமல் வைத்திடலாம். இதற்கு பேஸ்புக் தளத்தில் login செய்து, Account dropdown மெனுவில், Privacy Settings தேர்ந்தெடுக்கவும். இங்கு இடது பக்கம் கீழாக உள்ள Customize settings என்பதில் கிளிக் செய்திடவும்.

இங்கு இறுதியாக உள்ள வரியான Things I share என்பதில்தான் பேஸ்புக் பிளேசஸ் உள்ளது. இதில் Edit

என்பதனைத் தேர்ந்தெடுத்து, Disable என்பதில் கிளிக் செய்து வெளியேறவும்.

உங்கள் நண்பர்கள் உங்கள் இருப்பிடம் குறித்து மற்றவர்களுக்கு அறிவிப்பதனைத் தடுக்க, Things others share என்ற பிரிவிற்குச் செல்ல வும். இதில் Edit என்பதனைத் தேர்ந்தெடுத்து, Disable என்பதில் கிளிக் செய்து வெளியேறவும்.

2. **தனிநபர் தகவல்களை மட்டும் கட்டுப்படுத்த:**

உங்களைப் பற்றிய குறிப்புகள் அடங்கிய தொகுதியில் (Profile) சில குறிப்பிட்ட தகவல்களை மட்டும், மற்றவர் அணுகுவதிலிருந்து தடுக்கலாம். இதனைப் பலர் அறியாம லேயே உள்ளனர்.

முதலில் நீங்கள் உங்களைப் பற்றிய தகவல்களை அளிக்கையில் ஒரு முறைக்குப் பல முறையாக அது குறித்து சிந்தித்து முடிவெடுக்க வேண்டும். ஏனென்றால், பின் ஒரு நாளில் உங்கள் எக்கவுண்ட்டையே நீங்கள் நீக்கினாலும், உங்கள் நண்பர்களிடம் உங்கள் போட்டோ மற்றும் மற்றவர்களுக்கு அனுப்பப்பட்ட தகவல்கள் இருக்கலாம்.

எனவே தகவல்களை அப்டேட் செய்வதில் கவனம் தேவை. அடுத்ததாக, இந்த தகவல்களை யாரெல்லாம் பெறுகின்றனர் என்பதனை look வசதி கொண்டு கண்காணிக்கலாம். இந்த look வசதியினை எப்படிப் பயன்படுத்துவது எனப் பார்க்கலாம். உங்கள் போட்டோவினை உங்கள் தொகுதிக்கு அனுப்பும் முன் அல்லது share என்ற பட்டனை அழுத்தும் முன், இந்த டூலுக்கு மேலாக உள்ள dropdown மெனுவினைப் பார்க்கவும்.

அதில் நீங்கள் யாரை எல்லாம் (Everyone,Friends of Friends, Friends Only,அல்லது Customize) இதனைப் பார்ப்பதற்கு அனுமதி அளிக்கலாம் என்று காட்டப்பட்டிருக்கும். நன்கு யோசனை செய்து குறிப்பிட்ட பிரிவினைத் தேர்ந்தெடுக்கவும். அல்லது இதில் இறுதியாக உள்ள Customize என்ற பிரிவின் மூலம் நீங்கள் உங்களுக்கு நல்ல பரிச்சயமான நண்பர்களை மட்டும் தேர்ந்தெடுக்கலாம்.

உங்களுக்கு அடிக்கடி என்னை உன் நண்பனாகச் சேர்த்துக் கொள் என்றெல்லாம் மெயில் செய்தி வரும். தெரியாதவர் என்றால், உடனே அதனை அலட்சியப்படுத்தி விடுங்கள். இது போன்ற வேண்டுகோளுக்கு யெஸ் சொல்லித்தான் பலர் மாட்டிக் கொள்கிறார்கள்.

3. **அப்ளிகேஸனை இயக்கத்தான் வேண்டுமா?**

பேஸ்புக் தளத்தில், மெட்ரோபோலிஸ் மற்றும் மாபியா வொர்ஸ் போன்ற விளையாட்டுக்களை இயக்குகையில், மேலும் நண்பர்களை அதற்கு அறிமுகப்படுத்தினால்தான், நீங்கள் ஜெயிக்க முடியும். இது போன்ற விளையாட்டுக்கள் மற்றும் அப்ளிகேஸன்கள், பலரை உங்கள் தள சுவரில் செய்திகளை அமைக்க வழிதரும்.

இது போன்ற செய்திகள் உங்களுக்குத் தொல்லை தருவதுடன், மற்றவர்களுக்கு உங்களைப் பற்றிய தகவல் களைக் கொண்டு செல்லும். மேலும், நீங்கள் வேலையை எல்லாம் ஒதுக்கி வைத்து விளையாடுவது மற்றவர்களுக்குத் தெரிய வேண்டுமா என்று யோசிக்கவும். இதில் நீங்கள் மட்டுமே இயங்க ஒரு செட்டிங்க்ஸ் அமைத்துவிடலாம்.

உங்கள் எக்கவுண்ட் செற்டிங்கில் Privacy Settings செல்லவும். இதன் கீழ் இடது பக்கத்தில் Applications and websites என்று ஒரு பிரிவு இருக்கும். இங்கு Edit Your Settings என்பதனைத் தேர்ந்தெடுக்கவும். பின்னர் Game and application activity என்பதில் கிளிக் செய்திடவும். இது மூன்றாவதாகக் காட்டப்படும். இதில் Only Me என்பதைத் தேர்ந்தெடுத்து கிளிக் செய்து மூடவும். இதன் பின்னர், உங்கள் விளையாட்டுக்களை நீங்கள் மட்டுமே பார்க்க முடியும். பங்கு கொள்ள முடியும்.

4. **அப்ளிகேஸன்களுக்குத் தடை!**




பேஸ்புக்கில் பயன் படுத்த மற்றவர்கள் தயாரித்து வழங்கும் அப்ளிகேஸன்களை இயக்குகையில் நாம் பல சிக்கல் களை வரவேற்கிறோம். எந்த அளவிற்கு அவை நம் பாதுகாப்பு செற்டிங் வளையத்தை மதிக்கின்றன என்று நமக்கும் தெரியாது பேஸ்புக் வடிவமைத்தவர்களுக்கும் தெரியாது. பின் ஏன் வம்பு?

எந்த 3rd party அப்ளிகேஸன்களையும் பயன்படுத்தாமல் இருந்துவிடலாமே! அனைத்தையும் தடை செய்திட கீழ்க காணும் செட்டிங்ஸைப் பயன்படுத்தவும்;. Privacy Settings >>Applications and websites>> Edit your settings எனச் செல்லவும். Applications you use என்பதன் கீழ் Turn off all platform applications என்பதனைத் தேர்ந்தெடுத்து அமைக்கவும். இப்போது ஒரு எச்சரிக்கை செய்தியுடன் பெட்டி ஒன்று காட்டப்படும். அதில் Select all >>Turn Off Platform என்று தேர்ந்தெடுக்கவும்.

**5. அணுகுவதற்குத் தடை:**

உங்களுடைய நண்பர்கள் உங்களைப் பற்றி அறிய வேண்டும் என நீங்கள் விரும்புவதைப் போல, அவர்கள் உங்களைப் பற்றி என்ன எழுதுகிறார்கள் என்று அறிந்து கொள்ள நீங்கள் எண்ணுவீர்கள். ஆனால் நீங்கள் விரும்பாத உங்கள் personal தகவல் குறித்து உங்கள் நண்பர் கருத்து தெரிவிப்பதனை நீங்கள் விரும்பமாட்டீர்கள். இங்கும் அவர்கள் எந்த தகவல்களைத் தெரிந்து கருத்து தெரிவிக்கலாம் என்று நீங்கள் வரையறை செய்திடலாம்.

Account>>Privacy Settings >> Applications and websites. Edit your settings. இங்கு Info accessible through your friends என்பதனைத் தேர்ந்தெடுக்கவும். அதில் விரிவாக பல பிரிவுகள் இருக்கும். நீங்கள் அனுமதிக்க விரும்புவதனைத் தேர்ந்தெடுக்கலாம். அல்லது மொத்தமாக அனைத்திற்கும் அனுமதியைத் தடுக்கலாம்.




**6. இறுதி நடவடிக்கை:**

பேஸ்புக் தளத்தில் உறுப்பினராகிப் பல நண்பர்களைப் பெற்று ஒரு வட்டத்தை உருவாக்கிக் கொண்டீர்கள். இப்போது தேவையற்றவர்கள் பேஸ்புக் மூலம் தொல்லை தருகின்றனர். இது என்ன தொல்லை என்று எண்ணி, பேஸ்புக் தளத்தையே விட்டு விலக எண்ணுகிறீர்களா? அப்படியே செய்துவிடலாம்.

https://ssl.facebook.com/help/contact.php? show_form=delete_account என்ற முகவரியில் உள்ள பக்கம் சென்று, மொத்தமாக விலகும் முடிவை அதற்கான பிரிவுகளைத் தேர்ந்தெடுத்து அறிவிக்கவும்.

Submit என்பதில் கிளிக் செய்தவுடன், கிடைக்கும் படிவத்தில் தேவையான தகவல்களை நிரப்பவும். பின்னர் அந்த தளத்தை விட்டு விலகவும். திரும்பிப் பார்க்காமலேயே.


பேஸ்புக் தளத்தில் இருப்பது ஒரு நல்ல இனிமையான மற்றும் வேடிக்கையான அனுபவம்தான். ஆனால் உங்களை நீங்கள் பாதுகாத்துக் கொள்வது உங்கள் கைகளில் தான் உள்ளது. அதற்கான வழிகளைத் தான் மேலே பார்த்தீர்கள். அவற்றை மேற்கொள்வது உங்கள் முடிவைப் பொறுத்தே உள்ளது.

# YAHOO!
## பாவனையாளரைக் கவர புதிய முயற்சி

கடந்த மாதம் முதல் Yahoo தனது சேவைகள் அனைத்தையும், Google மற்றும் Facebook பயனர் பதிவினூடாக (user id) கையாளக் கூடியவாறு மாற்றி அமைத்துள்ளது. சென்ற ஒக்ரோபர் மாத கடைசியில் Yahoo தனது ஒளிப்பட சேவையான (Image service) Flicker இற்கு Google, Facebook பயனர்களை அனுமதித்தது. இதன் மூலம் Flicker சேவைக்கென தனியான பயனர் பதிவேதும் இல்லாமல் ஏற்கனவே உள்ள Google மற்றும் Facebook பயனர் பதிவுகளினூடாக Flickerஐ பயன்படுத்தக்கூடியவாறு இருந்தமைக்கு பாவனையாளர்களிடமிருந்து கிடைத்த நல்ல வரவேற்பு Yahoo தனது அனைத்து சேவைகளுக்கும் இந்த வசதியை கொடுக்கும் முடிவிற்கு கொண்டுவந்துள்ளது.

இதன் மூலம் yahoo மேலதிகமாக 20 % பயனர் வருகையை அதிகரித்துள்ளது என்பதே அதன் முதல் வெற்றிப்படியாகிறது.

இது தொடர்பாக yahoo தெரிவித்துள்ள செய்திக்குறிப்பில் இந்த வசதி மிக விரைவில் Yahoo இன் Desktop, Mobile பயன்பாடுகளுக்கும் கிடைக்கும் என தெரியப்படுத்தியுள்ளது.



GATEWAY cfiCT

# FAST TRACK Training Programme



- ICDL
- E - Citizen
- Advance ICDL Packages
- ASAP
- English for Life
- Diploma in Microsoft Office
- Diploma in Desktop Publishing
- Diploma in Multimedia Graphic
- Diploma in Accounting Package
- Diploma in Hardware & Networking

## UTHAYAN IT ISLAND

# GATEWAY CENTRE

347, Kasthuriyar Road,
Jaffna.
021 567 5555 / 021 222 7967

Luxmee Theatre Lane,
Nelliady
021 226 2395

1st Floor, New Market Building,
Chavakacheri.
021 227 0323

GATEWAY cfiCT · GATEWAY Language Centre · GATEWAY KIDS SCHOOL OF COMPUTING · IPICT International Pedagogical ICT Licence · ICDL · e-Citizen · e-TYPE

# Microsoft® Office Word 2007


க.சியந்தன்
போதனாசிரியர்
கணினி தொழில்நுட்பம்
யாழ் பல்கலைக்கழகம்




Microsoft Office 2007 என்பது Microsoft நிறுவனத்தின் அலுவலக பெயற்பாடுகளுக்காக (Office Automation) பயன் படுத்தப்படுகின்ற மென்பொருள் தொகுப்பு ஆகும். இந்த மென்பொருள் தொகுப்பினுள் பல பிரயோக மென்பொருட்கள் (Application Software's) உள்ளடக்கப் பட்டுள்ளன.

அவை: Microsoft Access, Excel, Groove, Info Path, OneNote, Outlook , PowerPoint, Publisher and Word என்றவாறு பெயரிடப்பட்டுள்ளன. இவை .ஒவ்வொன்றும் குறித்த பணிகளுக்காகப் பயன்படுத்க் கூடியதாக உள்ளது

**Access** - தரவு முகாமை செய்வதற்காகப் பயன் படுத்தப்படுகின்றது.

**Excel** – கணிப்புக்கள், பகுப்பாய்வுகள் (Analysis) மற்றும் தரவு வெளிப்படுத்தல் தேவைகளுக்காகவும்.

**Groove** – குழுக்களாகப் பணியாற்றுகிறபோது அவர்களுக்கிடையில் கோப்புகள் மற்றும் தகவல் களினை பகிர்வு செய்வதற்கு பயன்படுகின்றது.

**InfoPath** – அலுவலகங்களின் தகவல்களை எடுத்து கையாள்வதற்கு வேண்டிய முகப்புக்களை (forms) உருவக்கலாம்

**OneNote** - பாடங்கள் (lessons) கட்டுரை களை உருவாக்கி பகிர்ந்து கொள்ளப் பயன் படுகிறது

**Outlook** – மின்னஞ்சல்களைப் பெறுதல், அனுப்புதல் மற்றும் முகாமை செய்தல் தேவைக் காகப் பயன்படுத்தலாம்.

**PowerPoint** - தரவுகள் , விடயங்கள் (subjects), உரை (text), படம் (picture), மற்றும் ஒலி/ஒளி (audio/video) வடிவில் வெளிப் படுதலுக்காகப் பயன்படுத்தப்படுகின்றது.

**Publisher** – செய்திக் குறிப்புக்கள், அழைப் பிதழ்கள் மற்றும் இணையப் பக்கங்கள் போன் றவற்றை உருவாக்கலாம்.

**Word**: - கடிதங்கள், அறிக்கைகள், கட்டுரைகள் மற்றும் உரைத் தொகுப்புக்களை ஆவணமாக்கிக்.கொள்ளப் பயன்படுத்தப் படுகின்றது.

**Microsoft Word 2007 இல் ஆவணங் களைத் தயாரித்தல்**


ஆவணங்களைத் தயாரித்தல் என்பது அலுவலகங்களில் அறிக்கைகள், கடிதங்கள் மற்றும் அலுவலகங்களில் கையாளுகின்ற தரவுகள் மற்றும் தகவல்களை உருவாக்குதல், கையாளுதல் மற்றும் பாதுகாத்தல் போன்ற செயல்முறையாகும்.

**Microsoft Word 2007** மென்பொருளை ஆரம்பித்தல்

பின்வரும் 3 வழிகளில் ஒன்றைப் பயன்படுத்தலாம்.

வழி 1:

Start ஐ click செய்து All Programs > Microsoft Office > Miccrosoft Office Word 2007 என்றவாறு தெரிவினைச் செய்ய வேண்டும்



**Microsoft Word Vs Open Office Document : வேறுபாடுகள்**

**Microsoft Word:**


MS Word என்பது Microsoft இன் Office Package இல் உள்ளடக்கப்பட்டுள்ள ஒரு ஆவணங்களைத் தயாரித்தல் மென்பொருள் ஆகும். இது Microsoft இன் Windows இயங்கு முறைமையில் (Operating System) மட்டும் செயற்படும்.

**Open Office Document:**


இது ஒரு Open Source மென்பொருளாகும். அத்துடன் Open Office.org எனும் Office Application Package இல் உள்ளடக்கப்பட்டுள்ள ஒரு ஆவணங்களைத் தயாரித்தல் மென்பொருள் ஆகும். இது LINUX மற்றும் Microsoft Windows சூழலில் செயற்படக் கூடியது. அத்துடன் அதிக file formats க்களையும் ஆதரிக்கின்றது

நாம் தொடர்ந்து Microsoft word 2007 எனும் பதிப்பில் ஆவணங்களைத் தயாரித்தல் பற்றிப் பார்ப்போம்.

வழி 2:





Desktop இல் படம்2 இல் காட்டியவாறு shortcut இருந்தால் அதனை இருதடவைகள் (double) click செய்வதன் மூலமும் அல்லது படம் 3 இல் காட்டியவாறு கடைசியாகப் பயன்படுத்திய மென்பொருட்களின் பட்டியலிலிருந்து (Recent List ) click செய்வதன் மூலமும் ஆரம்பிக்கலாம்.




படம் 3

வழி 3:

Word மென்பொருளின் executable file என்று சொல்லப்படும் இயங்கக்கூடிய கோப்பை நேரடியாக அணுகுவதன் மூலம் ஆரம்பிக்கலாம். அதற்கு start > Run ஐ தெரிவுசெய்ய வரும் Run Window இல் winword என தட்டச்சு செய்து Ok செய்ய வேண்டும்.




மேற்கூறப்பட்ட வழிகளில் ஏதாவது ஒரு வழிமுறையைப் பின்பற்றுவதன் மூலம் Microsoft Word 2007 ஆரம்பிக்கின்றது.

இப்போது உங்களின் கணினி திரையில் Microsoft Word 2007 பிரயோக மென்பொருள் ஒரு வெற்றுப் பக்கத்துடன்(Blank Document) காட்சியளிக்கும்.


**(மறுபக்கம் படம் உள்ளது.)**

தொடர்ந்து இங்கு காணப்படுகின்ற கட்டளைகள் அதன் பயன்பாடுகள் மற்றும் நீங்கள் எவ்வாறான வேறுபட்ட வழிகளில் அதனைப் பயன் படுத்தி செம்மையாகவும் விரைவாகவும் ஆவணங்களைத் தயாரிக்கலாம் என்பது பற்றிப் பார்ப்போம்.

**அடுத்த இதழில்**

**Microsoft Office Excel 2007**

**புதிய தொடர் ஆரம்பம்**


Title Bar
Minimize Button
Restore Button
Close Button
Vertical scroll bar
Right Margin
Tab Oriented Ribbon
Horizontal Ruler
Quick Access Toolbar
Working Area
Left Margin
Tabs
Office Button
Top Margin
Vertical Ruler
Bottom Margin

# பாஸ்வேர்ட் பாதுகாப்பு?

பொதுவாக நம்மிடையே பலர் "பாஸ்வேர்ட்" பற்றி அலட்டிக் கொள்வதில்லை. ஒரு மின்னஞ்சலையோ, இணையக் கணக்கையோ ஆரம்பிக்கும் போது ஏதோ நமக்கு ஞாபகம் நிற்கக்கூடிய ஒரு சொல்லை அதாவது பெயர், அப்பா பெயர், ஊர், வயது அல்லது பிறந்த திகதி, தொலைபேசி இலக்கம் இல்லாவிடின் 123456, abcdef போன்றவற்றில் ஏதாவதொன்றை

பாஸ்வேர்ட்டாக கொடுத்து விடுகிறோம். இவற்றை இலகுவாக ஞாபகப்படுத்தக்கூடியதாக இருக்கும் என்பது உங்களது எண்ணம். ஆனால் பாஸ்வேர்ட்டை பறிக்க நினைப்பவர் களுக்கும் : உங்களைப்பற்றிய முழு விவர மும் தெரிந்த ஒருவருக்கும் இதுபோன்ற பாஸ்வேர்ட்களை இலகுவாக உய்த்தறிய முடியுமல்லவா? எனவே பெயர்களை கொண்டு பாஸ்வேர்ட் உருவாக்குவதை நாம் முற்று முழுதாக தவிர்த்துக்கொள்ள வேண்டும். அதேபோல அர்த்தம் தரும் வேறு எந்த பெயரையும் பயன்படுத்துவது பாதுகாப்பானதல்ல இதற் கென சில திருட்டு மென்பொருட்கள் உள்ளன. அம் மென் பொருள்களில் இதுபோன்ற பாஸ்வோட் சேமித்து வைக்கும் கோப்பைக் கொடுத்தால் போதும் உடனே உங்கள் பாஸ்வோட்டை கண்டுபிடித்துவிடும்.

எனவே பாஸ்வேர்ட் விடயத்தில் நீங்கள் மிகவும் உசா ராயிருக்க வேண்டும். நீங்கள் உங்கள் பாஸ்வேர்ட்டைத் தட்டச்சு செய்யும் போது யாரும் பின்னால் இருந்து பார்க் கின்றனரா? என உறுதி செய்துகொள்ளுங்கள். பக்கத்தில் யாரும் இருந்தால் பாஸ்வேர்ட் இடுவதை நிறுத்துங்கள். பல இடங்களில் 6 இலக்கமே போதும் எனச் சொல்வார்கள் ஆனால் நீங்கள் நீளமான பாஸ்வேர்ட்லை அமைத்துக் கொள்ளுங்கள் பாஸ்வோட் இடும் கட்டம் தாண்டியும் நீளமாக பாஸ்வோட்லை அமைத்துக் கொள்ளலாம். இது மிகவும் ஆரோக்கியமானதொரு பாஸ்வேர்ட் முறையாக அமை யலாம். நீண்ட சொற்களைக் குறுகிய நேரத்துக்குள் ஞாபகப்படுத்திக் கொள்வது பலருக்கும் சிரமமாக இருப்பதனால், நீண்ட பாஸ்வேர்டை இலகுவில் கையகப்படுத்த முடியாது. அத்துடன் ஸ்பைவேர் (Spyware), மால்வேர்(Malware) போன்ற வைரஸ்கள் நமது கணினியில் இருந்து தகவல்களை சிலருக்கு அனுப்பிக் கொண்டிருக்கலாம். இச் சந்தர்ப்பத்தில் நமது பாஸ்வோட்டும் அனுப்பப் படுவதற்கான வாய்ப்புண்டு.

இவ்வாறு இருக்கலாம் என நினைத்தால் Task Manager ஐத் திறந்து பாருங்கள். உங்களுக்குத் தெரியாத ஏதேனும் ஒரு உளவறி மென்பொருள் பின்புலத்தில் ஓடிக்கொண்டிருக்கிறதா? என்பதனை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள். இவ் உளவறி மென்பொருள்கள் நீங்கள் தட்டச்சு செய்கின்ற விடயங்களை உடனுக்குடன் தனது முதலாளிக்கு அனுப்பும் வல்லமை வாய்ந்தவை. மற்றவர்களின் கணினியில் புகுந்து திருடுவது சேதம் விளைவிப்பது என்பது ஒரு சிலரால் மட் டும்தான் முடியும் எதோ நானும் செய்தேன் என்று சும்மா வேனும் சிலர் பொய் சொல்லக் கூடும் அதற்கு Hacking மற்றும் Cracking போன்ற துறைகளில் நல்ல தேர்ச்சி வேண்டும் அவ்வாறானவர்கள் உங்கள் கணினியில் நுழையாமல் தடுக்க நல்ல வைரஸ் பாதுகாப்பு மென் பொருளை நிறுவிக்கொள்ள வேண்டும்.

முடிந்தவரை ஜீமெயில், யாகூ மற்றும் ஹொட்மெயில் போன்ற தளங்களில் தானாக உள்ளே நுழைவதை (auto login) தவிர்த்துக் கொள்ளுங்கள். அதேபோல ஒவ்வொரு முறையும் மின்னஞ்சல் அல்லது பாஸ்வேர்ட் இட்ட தளங்களில் இருந்து வெளியேறும் போது லொக்கவுட் (log out) செய்து வெளியேறுங்கள்.




அடுத்ததாக நாம் பாஸ்வோட் தேர்வு செய்யும்போது எண்கள் மற்றும் எழுத்துகளுக்கு இடையிடையே குறியீடுகள் (symbols) : ! . > * - + '~ @ # $ % ^ & ( ) _ = : ; / போன்ற வைகளையும் எழுத்துக்களைக் கொடு:க்கும் போது இடைக்கிடைய பெரிய எழுத்துக்களும், சிறிய எழுத்துக்களும் (Capital & Small letters ) மாறி மாறிக் கொடுத்து கடினமான கடவுச் சொல்லாக தேர்வு செய்வது மிக மிக பாதுகாப்பானதாகும்.

# தகவல் தொடர்பாடல் தொழிநுட்பவியல்

தொடர் - 01 **தரம் - 10/11** ICT

இத் தொடரானது இலங்கை அரசாங்கத்தினால் பாடசாலைகளில் அறிமுகப்படுத்தப்பட்ட ICT பாடத்திட்டத்தினை முற்றுமுழுதாகத் தழுவி எழுதப்படுகிறது. மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு இத்தொடர் மிகப் பயனுள்ளதாக அமையும் என எதிர் பார்க்கிறேன்.



இ.குமரன்
ஆசிரியர்
யாழ். இந்துக்கல்லூரி

## உள்ளீடு முறைவழியாக்கம், மற்றும் வருவிளைவு.
## (Input, process and output)

உள்ளீடு —— முறைவழியாக்கம் —— வருவிளைவு

கணினிக்கு உள்ளீடு வழங்கப்பட்டு முறைவழியாக்கத்தின் பின்னர் வருவிளைவு பெறப்படும். வருவிளைவானது ஒரு கருத்துள்ளதாகக் காணப்படும். அதாவது தரவானது உள்ளீடாக வழங்கப்பட்டு முறைவழியாக்கத்தின் பின்னர் கருத்துள்ள ஒழுங்குபடுத்தப்பட்ட தகவல் பெறப்படும்.

### தரவு (Data)

அடிப்படை உண்மைக் கருத்துக்கள் (Basic rawfacts) தரவு என அழைக்கப்படும்.

உ-ம்:- 1). பாடசாலையின் பெயர்.
2). கணினியின் வேகம்
3). ஆசிரியரின் பெயர்.

தரவானது அளவு ரீதியான தரவு (Quantitative data) மற்றும் பண்பு ரீதியான தரவு (Qualitative data) என இரு வகைகளாகக் காணப்படலாம்.

01. அளவு ரீதியான தரவு.
உ-ம் 1) 01Kg சீனி.
2) 4Cm விட்டமுடைய வட்டம்.

02. பண்பு ரீதியான தரவு.
உ-ம்:- 1) வெள்ளை நிறச் சீனி.
2) வட்ட வடிவ மேசை.
3) பச்சை நிறத் தாவரம்.

தரவானது எண்கள் (Numbers) பாடம் (Text) வரியுருக்கள்(Characters) (Image) செவிப்புலக்கூறு (Audio clip) மற்றும் video clip போன்ற ஏதாவது வடிவில் இருக்கலாம்.
குறிப்பு:- Data என்பது Datum என்பதன் பன்மையாகும்.

### தகவல் (Information)

முறைவழியாக்கப்பட்ட தரவு (Processed data) தகவல் என அழைக்கப்படும்.
அதாவது தகவலானது ஓர் ஒழுங்குபடுத்தப்பட்ட (Organized) அல்லது முறைவழிப்படுத்தப்பட்ட (processed) அல்லது பகுப்பாய்வு செய்யப்பட்ட (Analysed) தரவினைக் குறிக்கின்றது.

உ-ம்:- 01) மாணவன் ஒருவன் பாடங்களில் பெற்ற புள்ளிகளின் கூட்டுத்தொகை
02) உலகின் அதிவேகக் கணினியின் வேகம் 2.566 PFLOPS ஆகும்
03) ஒரு வகுப்பறையில் மாணவர்களின் குறிப்பிட்ட ஒரு மாதத்திற்கான வரவுச்சராசரி.

**தகவல் ஒன்றின் பண்புகள்.**

தகவல் ஒன்றிற்கு அடிப்படையாக இருக்கவேண்டிய பண்புகளாக (Attributes) பின்வருவன கருதப்படுகின்றன.

01) உண்மையானதாக(Fact) இருத்தல்.

02) துல்லியமானதாக (Accuracy) இருத்தல்.

03) பொருத்தமான நேரத்தில் (Timely manner) கிடைக்கக்கூடியவாறு இருத்தல்.

04) திரும்பத் திரும்பப் (Repeatedly) பெறக்கூடியதாக இருத்தல்.


05) சுருக்கமானதாக (Precise) இருத்தல்.

06) தீர்மானம்மெடுத்தலின் போது (Decision making) அதற்கேற்றவாறு கிடைத்தல்.

07) தகவலைப் பெறுவோருக்கு எளிமையானதாகவும் (Simplicity) இலகுவில் விளங்கிக் கொள்ளக் கூடியவாறும் இருத்தல்.

**தகவலின் பொன் விதி (Goldan rule of information)**

தகவல் ஒன்றின் இயல்புத்தன்மையினை விளங்கிக் கொள்வதற்காகத் "தகவலின் பொன் விதி" எனும் கருதுகோள் முன் வைக்கப்படுகிறது. கீழே காட்டப்பட்டுள்ள வரைவின் மூலம் இது எளிமையாப் புலப்படுகிறது.




**மேற்கூறிய வரைபிலிருந்து பின்வரும் தகவல்பற்றிய உண்மைகளை விளங்கலாம்:**

1) தகவல் ஒன்று உருவாகும் நேரத்தில் அதன் பெறுமதி (Value) மிக உயர்வாகக்காணப்படும்.

2) நேரம் பூச்சியமாக இருக்கும் சந்தர்ப்பத்தில் தகவலின் பெறுமதி உயர்வாகவும் ,காலம் செல்லச் செல்ல அதன் பெறுமதி குறைந்தும் செல்கிறது.

**உதாரணமாக:-** அன்று காலை வெளிவருகின்ற பத்திரிகைச் செய்தியின் பெறுமதி மிக உயர்வாகவும், அடுத்தகிழமை அல்லது அடுத்தமாதம் அல்லது அடுத்தவருடம் அதன் பொறுமதி மிகக் குறைவடைந்து அது ஓர் பெரிய செய்தியாக எவரும் எடுத்துக்கொள்ளாததைக் குறிக்கிறது.

3) காலம் செல்லச் செல்லத் தகவல் ஒன்று தரவாக மாறும் சாத்தியம் மிக அதிகமாகும்.

---

சில கடந்தகால வினாக்கள் மற்றும் மாதிரி வினாக்களினூடாகத் தகவல் மற்றும் தரவின் பல பரிமாண (Dimesion) நிலைகளைக் கீழே பார்ப்போம்.

**வினா 01**

தரவு மற்றும் தகவல் ஆகியவற்றினை ஓரெ வாக்கியத்தில் எழுதுக?

**விடை**

தனிச்சிறப்பான தரவே தகவலாகும் (Information is the significant of data)

அல்லது முறைவழியாக்கப்பட்ட தரவு தகவலாகும். (Information is the processed data)

**வினா 02**

பின்வருவன வற்றுள் தகவலை இனங்காண்க.

01. நாளைய வானிலை அறிக்கை
02. கணினியின் வேகம்.
03. மாணவனின் பெயர்
04. பேனாவின் விலை.

**விடை :-** நாளைய வானிலை அறித்கை.

**விளக்கம்:-** விடை (01) ஆனது தரவு ஒன்று குறிப்பிட்டுச் (Significant) சொல்லப்படுகிறது. எனவே இது ஓர் தகவலாகும்.

விடை (02), (03), (04) ஆகியவை பொதுவாகச் சொல்லப்படுகின்றது. எனவே இவை தரவாகும்.

வினா 03

பின்வரும் இரு கூற்றுக்களையும் கருதுக.

(a) சகாராப் பாலை வனத்தில் மழை பெய்கிறது.

(b) நுவரெலியாவில் மழை பெய்கிறது.

மேலே கூறப்பட்ட கூற்றுக்கள் உண்மையானது எது?

(01) கூற்று (a) இன் தகவல் உள்ளடக்கம் (Fact) அதிகம்

(02) இரண்டினதும் தகவல் உள்ளடக்கம் ஒரே அளவானது

(03) கூற்று (b) இன் தகவல் உள்ளடக்கம் மிகையானது.

(04) மேற்கூறப்பட்ட எதுவும் இல்லை.

விடை:- கூற்று (a) இன் தகவல் உள்ளடக்கம் (Fact) அதிகம்.

விளக்கம்:- நுவரெலியாவில் மழை பெய்கிற தகவல்/ செய்தி அனைவரும் அறிந்த ஓர் விடையமாகும். ஆனால் சகாரா பாலைவனத்தில் மழை வீழ்ச்சி மிகக் குறைவானதாகும். அங்கு மழை பெய்கின்ற விடையம் அல்லது செய்தி ஓர் ஆச்சரியத்தினை ஏற்படுத்தும் விடையமாகும். இதுதகவல் ஒன்றின் பண்பாகும். மேலும் இதில் இருக்கினற உள்ளடக்கம் (Fact) (b) இனை விட அதிகமாகும்.

வினா 04

பின்வருவனவற்றுள் எது தரவாகக் கருதப்படுகின்றது?

(01) வகுப்பில் ஒரு மாணவன் பெற்ற புள்ளிகள்.

(02) வகுப்பில் மாணவர்கள் பெற்ற புள்ளிகளின் வகைப்படுதிய பட்டியல்.

(03) வகுப்பில் மாணவர்கள் பெற்ற உயர்ந்த பட்சப்புள்ளிகள்.

(04) வகுப்பில் மாணவர்கள் பெற்ற சராசரிப்புள்ளிகள்.

விடை:- (01) ஆகும்.

விளக்கம்:- விடை (02) ஆனது வகைப்படுத்திய (Sorted) பட்டியளைக் குறிக்கின்றது.

விடை (03) ஆனது உயர்ந்தபட்ச (Maximum) புள்ளிகளைக் குறிக்கின்றது.


விடை (04) ஆனது சராசரிப் (Average) புள்ளிகளைக் குறிக்கின்றது

எனவே (02), (03), (04) ஆகியவை முறைவழியாக்கப்பட்ட தரவுகளாகும். இவை தகவலைக் குறிக்கின்றன.


வினா 05

பின்வரும் இரு வரைபுகளையும் கருதுக.

வரைபு 1




வரைப 2




(01) வரைபு 1 ஆனது தரவையும் வரைபு 2 ஆனது தகவலையும் குறிக்கிள்றன.

(02) வரைபு 1 மற்றும் வரைபு 2 ஆகிய இரண்டும் தரவினைக் குறிக்கினறன.

(03) வரைபு 1 மற்றும் வரைபு 2 ஆகிய இரண்டும் தகவலினைக் குறிக்கினறன.

(04) வரைபு 1 ஆனது தரவினையும் , வரைபு 2 ஆனது தவலையும் குறிக்கின்றன.

விடை:- (01) ஆகும் (வரைபு 1 ஆனது தரவையும், வரைபு 2 ஆனது தகவலையும் குறிக்கின்றன்

விளக்கம்:- வரைபு 1 ஆனது முகப்பு(Label) இடப்படாத ஓர் வரைபடமாகும். இதில் x,y இரு அச்சுக்களும் குறிக்கப்பட்ட பதிவுகள் எவை என்பதனை எவரும் தெளிவாகக் கூறமுடியாது. ஆனால் வரைபு 2 இல் அவை தெளிவாகவும், விளக்கமாகவும் காண்பிக்கப்படுகிறது.

***மீண்டும் அடுத்த இதழில் கணினி, மற்றும் அதன் வரலாறு ஆகியவற்றினைப்பார்ப்போம்.***

**கணினிக் கவிதை - 01**

# எல்லாமாக...

- மாணவன்



கண்ணாடி குடுவைக்குள்
அடைபட்ட ஒட்சிசனாய் - இவ்வுலகை
கையகல கணினியின்
கட்டுக்குள் அடக்கிய
மாபெரும் மகானுக்கு
என் முதல் நன்றி!

முற்காலத்தில் ரேகைக்கு மட்டுமே
பயன்பட்ட விரல்கள் - இன்று
திரை திறந்து வினாடிக்கு வினாடி
விஞ்ஞான யுக்திகளை
மெய்யான கணினியில்
கணக்கீடு செய்கின்றன!

பின்பொரு காலத்தில் சிறுபிள்ளைத் தனத்தின்
நடைவண்டிப் பயணமாய் எழுதுகோல்
பிடித்த விரல்கள் - இன்று
முடிவு தெரியாத பிரபஞ்ச வெளியாய்
ஒளிவெள்ளம் பாய்ச்சும் விளக்குகளினூடே
சுட்டியில் மண்டியிடுகின்றன;
விசைப்பலகையில் சடுகுடு ஆடுகின்றன!

பனி உறங்கும் புல்லாக மென்மையான உணர்வுகளை
அழகாக சுமந்து சென்று பிரசவிக்கும் தாயாய்
பிரதிபலித்த கடிதங்கள் - இன்று
விண்ணைக் கிழித்த மின்னலென கொட்டிக்கவிழ்த்த
வைரமென இணையத்தில் மின்னஞ்சல் செய்கின்றன!


கட்டணப் பேசியில் ஆரம்பித்து கைப்பேசியில் கரம்கோர்த்து
பொலிவிழந்த பொழுதுகளைப் பூரணமாக்கி
மனமகிழ்ந்த வேளைகளில் முகம் பார்த்து
இதயத்தின் கனத்தினை இமை வழியே இறக்க,
குறைவான கட்டணத்தில் நிறைவாகப் பேச
வீடியோச்சட்டிங் விடியலைப் படைக்கிறது..!

சுவாசக்காற்றாக, உதிரத்துளியாக
உயிர்த்துடிப்பாக, கிளை நரம்பாக
நம்முள் பின்னிப் பிணைந்த
இன்னொரு ஜீவன் கணினி...!

கவிதைகளை
அனுப்பவேண்டிய முகவரி:
**கம்ப்யூட்டர் ருடே**
359, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்


**கணினிக் கவிதை - 02**

இது உங்கள் கவிதை வரிகளுக்கான பக்கம். கீழே பிரசுரிக்கப்பட்டுள்ள படத்தைப் பார்க்கையில் உங்கள் உணர்வுகள் சொல்லும் சேதியை வரி வடிவங்களாக்கி எங்களுக்கு அனுப்பிவையுங்கள். உங்கள் வரிகள் தகவல்தொழில்நுட்பம் சார்ந்து இருக்கவேண்டியது மிக மிக அவசியம். கணினிப் பயன்பாட்டினால் மனங்கள் மரத்துப்போகின்றன எற்றொரு கருத்து ஆய்வாளர்களிடையே உண்டு. இங்கு பிரசுரமாகும் வரிகள் மரத்துப்போன இதயங்களைக் கொஞ்சம் இளகச் செய்யட்டுமே!



# கட்டற்ற இணையப்பாவனைக்கு அகலப்பட்டை இணைப்பு (புரோட்பாண்ட் Broadband)

-தவா-




ஒருகாலம்! ஒரு தொலைபேசி பெறுவதற்கே நிறைய நடைமுறைகள். பெறுகின்ற தொலைபேசியும் இணைய வசதி உடையதாக இருப்பதற்கே பல இழுபறிகள். அந்த இணைப் பால் ஒரு மின்னஞ்சல் பார்ப்பதற்குக் காத்த பொறுமை அனைத்தும் இப்போ கலைந்த கனவாகி வீட்டுக்கு வீடு அகலப்பட்டை (Broadband-புரோட்பாண்ட்) இணைப்பு வசதி பெற்றுக்கொள்வதற்கான ஏது நிலை எமது பிரதேசத்தில் நிலவுகிறது. தொலைபேசி நிறுவனங்கள் தமது இணைப்புக் களை வழங்குவதற்காக வீட்டுக்கு வீடு விழுந்தடித்து வந்து கொண்டிருக்கின்றன.

தற்போது யாழ்ப்பாணத்தில் ஒரு இணையப் புரட்சியே நடந்து கொண்டிருக்கிறது. முன்னொரு காலத்தில் வாங்கும் இயலுமை இருந்தும் சேவை கிடைக்கவில்லை. இன்று அந்த நிலை இல்லை. இயலுமை உள்ள அனைவரும் இணையத்தில் இன்புறலாம்.

ஆரம்பத்தில் தொலைபேசி இணைப்பினூடாக எவ்வாறு இணைய இணைப்பினை மேற்கொள்வது என விளக்கம் கொடுக்கவேண்டியிருந்தது. இனி எப்படி, எந்த நிறுவனத்தில் எந்தவகை Broadband இணைப்பினைப் பெறுவது என விளக்க வேண்டியிருக்கிறது.

கட்டற்ற ஒலி, காணொளி, தரவு பாவனைக்கு பரீட்சயமான ஒரு மந்திரச் சொல்லாக அகலப்பட்டை இணையசேவை இன்று பேசப்படுகிறது.

பின்லாந்து அரசாங்கம் சகலருக்கும் Broadband என்று சட்டமியற்றியிருக்கிறது என்றால் இதனுடைய முக்கியத் துவத்தினை பார்த்துக் கொள்ளுங்களேன்!. எமது நாட்டில் சட்டமியற்றப்படாவிட்டாலும் ஓரளவுக்கு தொலைத் தொடர்புகள், இணையசேவைகள் முன்னேற்றமடைந்து வருவதை கண்கூடே காண்கிறோம். ஆயினும் நாட்டின் சகல மாவட்டங்களுக்கும் தொலைத்தொடர்பு மற்றும் இணைய சேவைகள் முழுமையாக வழங்கப்படாமை கவலைக் குரியதே!

மேலே எமது முன்னைய நிலை, தற்போதய நிலை பற்றி சுருக்கமாகப் பார்த்தோம். இனி Broadband என்றால் என்ன? என்ன வகையான Broadband சேவைகள் எமது பிரதேசங்களில் உள்ளன. அவற்றுக்கிடையில் தொழில்நுட்பரீதியாக வேறுபாடுகள் என்ன என்பவை பற்றி சற்று விரிவாக நோக்குவோம்.

அகலப்பட்டை(**Broadband – புரோட்பாண்ட்**) என்றால் என்ன?

இணைய இணைப்பு எப்பொழுதும் இருந்து கொண்டிருப்பவை அகலப் பட்டை(Broadband) இணைப்பு என்பர். அதியுயர் தரவுப் பரிமாற்றம் கொண்ட இணைய இணைப்பு இதுவாகும். இணைய வேகம் அதிகுறைந்தது 256 kbps ஆக உடைய இணைப்புக்களை Broadband எனலாம்.

**Broadband** வகைகள் எவை?

1. Fixed Line Broadband
2. Fixed wireless Broadband
3. Mobile Broadband

**Fixed Line Broadband**




முதலாம் வகையில் கூறப் பட்டதானது கேபிள் ஊடாக பாவனையாள ரின் வீட்டுக்கு அல்லது நிறுவனத்திற்கு தொலைத்தொடர்பு பரிவர்த்தனை நிலையத்தின் பிராந்திய பரிவர்த்தனை வலையமைப்பிலிருந்து ஏற்படுத்தப்பட்ட அகலப்பட்டை இணைப்பினைக் கூறலாம். இதன்போது தொலைத்தொடர்பு நிலையத்தின் வலைப்பின்னல் தனது தலைமைப் பரிவர்த்தனை நிலையத்தூடாகவோ கேபிள் மூலம் ஊடாகவோ செய்மதி ஊடாகவோ ஒளியிழை ஊடாகவோ பரிவர்த்தனைக் கோபுரங்கள் ஊடாகவோ இணைக்கப்படலாம்.

பின்புல வலையமைப்பினை Back Bone வலை யமைப்பு என்பார்கள். இந்த பின்புல வலையமைப்பிலிருந்து எமக்கு தொலைபேசி கேபிள் (Copper Wire – செப்பு இழைகள்) ஊடாகவோ ஒளியிழைகளின் ஊடாகவோ (Fiber Optic Cable) இணையவசதி வழங்கப்படும். Fiber Optic ஊடாக எமக்கு கிடைக்கும் இணைப்பினை சிறப்பாக Fiber to Home என்றழைப்பர். அது எமது நாட்டில் நடைமுறைக்கு வரவில்லை. இதனை VDSL என்று தொழில்நுட்பரீதியில் அழைப்பர்.

**ADSL**

பின்புல வலையமைப்பில் இருந்து சாதாரண தொலைபேசி இழைகளின் ஊடாக கொண்டுவரப்பட்ட இணைப்பு பின்னர் எமது இடத்தில் பிரிகருவி (Splitter) மூலம் தொலை பேசிக்கு ஒன்று இணையவசதிக்கு ஒன்று எனவும்பிரிக்கப்பட்டு வழங்கப்படும். இவ்வாறான இணைப்பு எமது நாட்டில் ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனத் தால் ADSL என்ற





தொழில்நுட்பத்தின் ஊடாக வழங்கப் படுகிறது. அகலப் பட்டை தொழில் நுட்பத்தில் ISDN/ DSL/ADSL போன்றவை பயன்படுத்தப்படுகின்ற போதிலும் எமது நாட்டில் ADSL பயன்படுத்தப்படுகின்றது. இதனை ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனம் மட்டும் வழங்குகிறது

இப்போது உங்களுக்கு ஒரு கேள்வி எழும் ஸ்ரீலங்கா ரெலிக்கொம் Fiber Optic இழைகளைப் பயன்படுத்தி ADSL இனை மேம்படுத்தி வருகிறதே அப்படியிருக்க நீங்கள் Spliter பற்றிக் கூறுகிறீர்கள். Copper இழை இணைப்புப்பற்றி கூறுகிறீர்களே என்று! ஆம் உண்மைதான். ஸ்ரீலங்கா ரெலிகொம் செய்யும் மேம்பாடுகள் அனைத்தும் Back Bone எனப்படும் பின்புல வலையமைப்பில் மட்டும் தான் இதன் மூலம் முன்னர் ரேடியோ சமிக்கை வலைப்பின்னல் மூலம் பேணப்பட்ட பின்புல வலையமைப்பினை தற்போது ஒளியிழைகளினால் பேணப்படுகிறது. எனவே தடையற்ற வேகமான இணைய இணைப்பு எமக்கு வசதி செய்யப்படும்.

## Fiber to Home

Fiber to Home எனப்படுகின்ற, எமது இருப்பிட எல்லை வரையும் ஒலியிழை மூல வலையமைப்புமூலம் இணைய வசதி வழங்குவது செலவு கூடியது என்பதாலும் அதனை ஈடுசெய்யக் கூடிய அளவிலான பயனாளர்கள் எமது பிரதேசத்தில் இன்னும் இனங்காணப்படாததன் காரணத்தினாலும் இப்போதைக்கு அது சாத்தியமில்லை. எதிர்காலத்தில் சாத்தியமே.

ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனம் 10 MBps வரையிலான இணைப்பினை வழங்கக் கூடியதாக



Fiber Optic இழை

இருக்கிறது. தற்போது 512kbps/2 MBps/ 4 MBps ஆகிய வேகங்களில் இணைய வசதியை ADSL ஊடாக வழங்கப்படுகிறது. இதற்கான மாதாந்தக் கட்டணங்கள் அதற்கேற்ப வேறுபடும். எனினும் சாதாரண வீட்டுப் பாவனையாளருக்கு 512 kbps மிகமிக உயர்ந்தது. இதனூடாக தமது தேவைகள் அனைத்தையும் (ஒலி, காணொளி, தரவு) பூர்த்தி செய்யக் கூடியதாக இருக்கிறது.

அத்துடன் இவர்கள் வழங்கப்படும் Entry பொதியின் மாதாந்தக் கட்டணம் மிகமிக குறைவு. இதில் தரவுப் பாவனை அளவு மட்டுப்படுத்தப்பட்டிருக்குமே தவிர வேகத்தில் மாற்றமில்லை. குறித்த தரவுப் பரிமாற்ற பாவனையின் அளவு மீறினால் பின்னால் வருகின்ற ஒவ்வொரு MB தரவுப்பாவனைக்கும் குறிப்பிட்ட தொகையினை மேலதிகமாக அறவிடுவார்கள். Home பொதி Business பொதி என மற்றைய பொதிகள் கட்டற்ற பாவனை கொண்டவை. அவற்றின் வேகங்கள் அவை கொண்ட வசதிகளுக்கேற்ப மாதக்கட்டணங்கள் வேறுபடும்.

மேலும் இங்கு குறிப்பிடப்படும் கட்டணங்களுக்கும் தொலைபேசிப் பாவனைக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. தொலைபேசிக் கட்டணங்கள் எதுவும் இதன்போது அறவிடப்பட மாட்டாது. தொலைபேசி இணைப்பு வேறு, இணைய இணைப்பு வேறாகக் கணிக்கப்படும். தொலைபேசி பேசும் போதும் இணைய இணைப்பை பயன்படுத்தலாம். வீட்டுக்கு வரும் வரை ஒன்றாக வந்து உள்ளே இரண்டாகப் பிரிக்கப்பட்டு விடும். இப்போது ADSL பற்றிய உங்கள் சந்தேகம் தீர்ந்திருக்கும்.

**வேக அளவீடு**

முக்கியமாகப் பலருக்கு வருகின்ற சந்தேகம் ஒன்று. கோப்பு ஒன்றினை பதிவிறக்கம் செய்து கொண்டிருக்கிறோம். அவ்வேளை அதன் வேகம் உதாரணமாக 62.5 KBps வரையில் சென்று வருகிறது என வைத்துக்கொண்டால் அதனை வாசிக்கையில் 62 kilo byte per second என வாசிக்கவேண்டும் இதனை அலகு மாற்றினால்(**1KB=1024B, 8bit=1byte(B)**) 512 kilo bit per second(kbps) என வாசிக்க முடியும். இதை பலர் தவறாகப் புரிந்து கொண்டு தமது இணைய இணைப்பு வேகம் குறைவாகக் காணப்படவதாக குறைப்படுகின்றனர்.

> **இணையசேவை வழங்கும் நிறுவனங்கள் வணிக நோக்கில் - பெரிய இலக்கத்தை காட்டி நுகர்வோரை கவருவதற்காக kilo byte என்பதற்கு பதிலாக kilo bit என்பதனை பாவிக்கின்றன. (8bit=1byte)**

உங்களுக்குத் தேவையான வேகமாற்றங்கள் பின்வரும் முகவரியில் சென்று உறுதிப்படுத்திக் கொள்ளலாம். www.convert-me.com/en/convert/data_trasfer_rate இனிமேலாவது இணையச்சேவை நிறுவனங்களைக் காரணமின்றி திட்டுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். உங்கள் இணைய இணைப்பின் வேகத்தினை அலகு அடிப்படையில் கணித்துக் கொள்ளுங்கள். இணைய இணைப்பின் வேகத்தினைக் கணித்துக் கொள்ள இலகுவான ஒரு தளம் www.speedtest.net ஆகும்.

இதுவரை Fixed line Broadband வகைகள் பற்றியும் அவற்றில் எமது நாட்டில் சிறீலங்கா ரெலிகொம் நிறுவனத்தினால் மட்டுமே வழங்கப்படகின்றதும் தற்போது பிரபல்யமானதுமான ADSL பற்றியும் பார்த்தோம்.

**ADSL** பெற அவசியமானவை



இவ் இணைப்பினைப் பெறும்போது ADSL Router ஒன்றும் வாங்க வேண்டியிருக்கும். இது 1Port, 4Port என்றவாறு விரும்பிய அளவு Port கள் கொண்ட Router களாகக் கிடைக்கின்றன. இவற்றால் எமது கணினியை Network இழைகளின் ஊடாக அல்லது USB மூலமாக இணைப்பதன் மூலம் இணைய இணைப்பினைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

ஒரு இணைய இணைப்பில் ஒன்றுக்கு மேற்பட்ட கணினிகளுக்கு இணைய இணைப்பினை வழங்கலாம். ஒரு Port கொண்ட Router களில் USP மூலம் கணினிகளுக்கு இணைய இணைப்பினை வழங்குவதற்கான வசதிகளும் காணப்படுகின்றது. எந்த வகையில் இருப்பினும் இணையவேகத்தில் பாதிப்பு ஏற்படப்போவதில்லை.


மேலும் Wireless Router பயன்படுத்தினால் Wireless வசதியுடைய கணினிகளையும் மடிகணினிகளையும் இணைய வசதிக்காக இணைக்க முடியும். இத்துடன் இக்கட்டுரையினை நிறுத்தி Fixed wireless Broadband பற்றிய விபரங்களுடன் அடுத்த இதழில் சந்திக்கின்றேன்.

---




## ஈ-மெயில்களில் உள்ள அட்டாச்மெண்ட்களை மட்டும் தனியே பதிவிறக்கம் செய்ய

தற்போதைய நிலையில் ஈ-மெயில் சேவையினை பல நிறுவனங்கள் இலவசமாக வழங்கி வருகிறன. அவற்றில் ஜிமெயில், யாகூ, ஹொட்மெயில், போன்ற நிறுவனங்கள் குறிப்பிடத்தக்கவைகள் ஆகும். நாம் சாதாரணமாக ஈ-மெயில் அனுப்பினாலும் கூடவே ஒரு அட்டாச்மெண்ட் பைலை சேர்த்தே அனுப்புவோம். அது நலம் விசாரிக்கும் ஈ-மெயிலாக இருந்தாலும் சரி, முக்கியமான அலுவல்களாக இருந்தாலும் சரி அட்டாச்மெண்ட் என்பது முன்பெல்லாம் முக்கியமான செயலுக்காக மட்டுமே அனுப்பபடும், ஆனால் தற்போதைய நிலையில் எந்த ஒரு ஈ-மெயிலாக இருப்பினும் கூடவே சேர்ந்து ஒரு அட்டாச்மெண்ட் பைல் அனுப்பப்படுகிறது.




ஈ-மெயில் அனுப்பும்போது அதனுடன் சேர்ந்து அட்டாச் மெண்ட் பைல்களாக போட்டோ, வீடியோ, ஓடியோ, டொக்குமெண்ட், போன்ற பல பைல்களும் ஈ-மெயில் மூலமாக பரிமாற்றம் செய்யப்படுகிறன. இவ்வாறு ஈ-மெயிலுடன் சேர்ந்துவரும் அட்டாச்மெண்ட் பைல்களை தனியே பதிவிறக்கம் செய்ய ஒரு அருமையான மென்பொருள் உள்ளது. அதுதான் Mail Attachment Downloader.

இந்த மென்பொருளை பதிவிறக்கி நிறுவிக கொள்ளவும். பின் Start > Programs > GearMage > Mail Attachment Downloader என்பதை தேர்வு செய்து Mail Attachment Downloader அப்ளிகேஸனை திறக்கவும். பின் ஈ-மெயில் முகவரி மற்றும் கடவுச் சொல்லை உள்ளிட்டு எந்த இடத்தில் அட்டாச்மெண்ட் கள் பதிவாக வேண்டும் என்பதை குறிப்பிட்டுவிட்டு, Connect and Download என்ற பட்டனை அழுத்தி பதிவிறக்கி கொள்ள முடியும். பதிவிறக்கம் முடிந்தவுடன் மறக்காமல் உங்கள் ஈ-மெயில் முகவரியின் , கடவுச் சொல்லை மாற்றிவிடுங் கள் , எல்லாம் ஒரு பாதுகாப்பு ஏற்பாடுதான்.


இந்த மென்பொருளுக்கான தரைவிறக்க சுட்டி : http://gearmage.com/downloadlicense.html

புதியவர்களுக்கு-

# கணினி உலகின் கவனம் ஈர்த்த பெயர்கள்
# மைக்ரோசொப்ட் - பில்கேட்ஸ்

மைக்ரோசொப்ட் எனும் மிகப்பெரும் நிறுவனத்தைத் தோற்றுவித்து உலகப் பணக்காரர்கள் பட்டியலில் நீண்ட நாட்களாக முதலிடத்தைப்பிடித்து வந்த ஒருவர் பில்கேட்ஸ். 'கதவைத் திற காற்று வரும்' என்பார்கள். ஆனால் ஜன்னலை (Windows)த் திறந்ததால் காசு வந்து கொட்டிய உதாரண மனிதர் இந்த பில்கேட்ஸ்.


மைக்ரோசாப்ட் நிறுவனம் துவக்கப்பட்டு 35 வருடங்கள் கடந்துவிட்டன. வின்டோஸ் 1.0 வெளியிடப்பட்டு நான்கு ஆண்டுகள் கழித்துத்தான் விண்டோஸ் 3.0 வெளியிடப்பட்டது. இப்பொழுது வின்டோஸ் 7 வெளியிடப்பட்டு பரவலான பாவனைத் தளத்தைப் பிடித்துவிட்டது. மைக்ரோசாப்ட் வெளியிட்ட வின்டோஸ் பதிப்புக்களில் 'எம்.இ' மற்றும் 'வின்டோஸ் விஸ்டா' இரண்டும் மட்டுமே பெரிய சறுக்கல்களைக் கண்டன. மற்றப் பதிப்புக்கள் எவையும் சோடைபோகவில்லை.




இந்த நிமிடத்தில் ஆரம்பித்து ஒவ்வொரு நிமிடத்துக்கும் உங்களுக்கு 2600 அமெரிக்க டொலர்களைத் தரப்போகிறது ஒரு தேவதை என்று வைத்துக் கொள்வோம். ஓய்வில்லாமல் 24 மணி நேரமும் ஒவ்வொரு நிமிடமும் அந்தத் தேவதை உங்களுக்கு 2600 அமெரிக்க டொலர்களைத் தருகிறது. அதுவும் ஒரு நாளுக்கு அல்ல ஓர் ஆண்டுக்கு அல்ல 21 ஆண்டுகளுக்கு. அப்போது உங்களிடம் எவ்வளவு பணம் சேர்ந்திருக்கும்?

கொடுக்கும் தேவதைக்கே தெரியாமல் போனாலும் ஆச்சரியமில்லை. எதற்கு இதைச் சொல்கிறேன் என்றால் நிமிடத்திற்கு 2600 அமெரிக்க டொலர்கள் என்ற விகிதத்தில் 21 ஆண்டுகளில் எவ்வளவு பணம் சேருமோ அதற்கும் அதிகமான பணத்துக்கு இப்போதே சொந்தக்காரராக இருக்கும் ஒருவர்தான் பில்கேட்ஸ்.

1955ஆம் ஆண்டு ஒக்டோபர் 28ஆம் தேதி அமெரிக்காவில் சியாட்டோ நகரில் பிறந்தார் வில்லியம் ஹென்றி கேட்ஸ். அவருக்கு இரண்டு சகோதரிகள். தந்தை வழக்கறிஞர்; தாயார் பள்ளி ஆசிரியை. இளவயதில் மிகவும் கூச்ச சுபாவம் உடையவராக இருந்த பில்கேட்ஸ், தனிமையை அதிகம் விரும்புவார். எப்போதுமே ஏதாவது ஒரு சிந்தனையில்



ஈடுபட்டிருப்பார். சக வயது மாணவர்கள் விரைவுக் கார்களையும் திரைப்படங்களையும் பற்றி எண்ணிக்கொண்டிருக்க பில்கேட்ஸ் மட்டும் எண்களைப் பற்றியும், எண்கள் செய்யும் வித்தைகள்பற்றியும் சிந்தித்துக் கொண்டிருப்பார். வாழ்க்கையில் மிகப்பெரிய இடத்துக்கு வரவேண்டும் என்ற எண்ணம் அவருக்குள் சிறு வயதிலேயே துளிர்விடத்துவங்கியிருந்தது.

இரவு உணவுக்குப் பின் குடும்பத்தினர் எல்லோரும் சேர்ந்து Bridge என்ற விளையாட்டை விளையாடுவதை அவரது குடும்பத்தினர் வழக்கமாகக் கொண்டிருந்தார்கள். எனவே ஒவ்வொரு இரவும் வெற்றிப் பெருவதைப் பற்றியே நினைப்பார் பில்கேட்ஸ். அது அவருக்கு நேரிய சிந்தனை ஆற்றலைக் கொடுத்தது. அவருக்கு 13 வயதானபோது அவரது நண்பரான போல் அலெனுடன் சேர்ந்து கணினிக்கான மென்பொருள்களை எழுதக் கற்றுக்கொண்டார். 'ரிஸ்க்' என்ற கணினி விளையாட்டையும் உருவாக்கினார். தன் நண்பருடன் சேர்ந்து கணினியில் பல மணி நேரம் செலவிட்டு மென்பொருள்களில் உள்ள குறைகளைக் கண்டறிவார் பில்கேட்ஸ்.

1973இல் ஹோபர்ட் பல்கலைக்கழகத்தில் இணைந்து கல்விகற்க ஆரம்பித்தார். அங்கு இருந்த காலத்தில்தான்




கணினிகளுக்கு மென்பொருள் எழுதப் பயன்படும் Basic என்ற கணினி மொழியை உருவாக்கினார். இரண்டு ஆண்டுகள் கழித்து 1975இல் தன் நண்பன் போல் அலெனுடன் இணைந்து 'மைக்ரோசொப்ட்' நிறுவனத்தை ஆரம்பித்தார்.




1977இல் பட்டப்படிப்பை முடிக்காமலேயே ஹோபர்ட்டை விட்டு வெளியேறி நிறுவனத்தில் முழுக் கவனம் செலுத்தத் தொடங்கினார். இல்லக் கணினிகளுக்குத் தேவையான மென்பொருளை உருவாக்குவதில் இருவரும் கவனம் செலுத்தினர். 1981இல் IBM கணினிகளுக்கான MS-DOS என்ற இயங்குதளத்தை அறிமுகம் செய்தார். MS-DOS இன் சிறப்பை எடுத்துக்கூறி மற்றக் கணினித் தயாரிப்பாளர்களையும் MS-DOS இயங்குதளத்தைப் பயன்படுத்துமாறு சிபாரிசு செய்தார் பில்கேட்ஸ்.

அது பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்டு 1980 களில் கணினிகள் பெருமளவில் விற்பனையாகத் தொடங்கின. விற்பனையாகும் ஒவ்வொரு கணினிக்கும் அதன் இயங்குதளத்திற்கான உரிமைக் கட்டணம் கிடைப்பதால் 'மைக்ரோசொப்ட்'டின் வருமானம் நாளுக்கு நாள் உயர்ந்து கொண்டேபோனது.



மாறிவரும் உலகில் மாறாதிருப்பது மாற்றம் ஒன்று மட்டுமே என்ற சொற்றொடர் கணினி உலகத்திற்குத்தான் மிகவும் பொருந்தும். அதை உணர்ந்துதான் போட்டியை எதிர்பார்த்துத்தான் 'மைக்ரோசொப்ட்' நிறுவனமும் விற்பனைச் சந்தையில் தனது இடத்தைத் தக்கவைப்பதற்காகப் புதிய புதிய மென்பொருள்களை உருவாக்கிக்கொண்டே இருக்கிறது.

IBM கணினிகளுக்குப் போட்டியாக மவுஸ் கொண்டு இயக்கும் அப்பிள் கணினிகள் அறிமுகமானபோது அவை மிகவும் பிரபலமடையும் என்று அனைவரும் எதிர்பார்த்தனர். உலகின் மொத்தக் கவனமும அப்பிள் கணினிகளின் பக்கம் திரும்பியபோதும் அசரவில்லை பில்கேட்ஸ். அசுர வேகத்தில் 'மைக்ரோசொப்ட் விண்டோஸ்' என்ற இயங்குதளத்தை அறிமுகம் செய்தார். அது பெற்ற இமாலய வெற்றி நீங்கள் அறிந்ததே.




1990களின் தொடக்கத்தில் பிரபலமாகத் தொடங்கியிருந்தது இணையம். மார்க் அண்டர்சன் என்பவர் அந்த இணையத்தில் உலாவர உதவும் 'நெட்ஸ்கேப்' என்ற மென்பொருளைத் தயாரித்து விற்பனை செய்தார். இணையத்தின் எதிர்காலத்தை நன்கு புரிந்து கொண்ட பில்கேட்ஸ் அந்த மென்பொருளை விலைக்கு வாங்க விரும்பினார். ஆனால் அதை விற்கவோ 'மைக்ரோசொப்ட்'டுடன் இணையவோ மார்க் அண்டர்சன் மறுக்கவே அதை ஒத்த ஒரு மென்பொருளைத் தயாரிக்கும் பணியில் இறங்கினார் பில்கேட்ஸ்.



நெட்ஸ்கேப் இற்கு இணையான இன்டர்நெட் எக்ஸ்புளோரர் என்ற இணையச் செயலியை உருவாக்கி அதனைப் புதிய கணினிகளுடன் இலவசமாக விநியோகம் செய்தார். அதனால் விலைக்கு விற்கப்பட்டு வந்த நெட்ஸ்கேப்பின் இணைய ஆதிக்கம் மங்கத்தொடங்கியது. இதுமாதிரியான விற்பனைத் தந்திரம் முறையற்றது என்று 'மைக்ரோசொப்ட்'டின் மீது நீதிமன்றத்தில் பல வழக்குகள் தொடரப்பட்டன. ஆனால் அவற்றாலெல்லாம் பில்கேட்ஸை அசைக்க முடியவில்லை.

## கணினி உலகின் கவனம் ஈர்த்த பெயர்கள்
# மைக்ரோசொப்ட் - பில்கேட்ஸ்


பில்கேட்ஸின் போட்டியாளர்கள் குறி வைத்தது பெரிய பெரிய நிறுவனங்களை. ஆனால் பில்கேட்ஸ் குறி வைத்ததோ சாதாரணப் பாவனையாளர்களை. இந்த நோக்கம் வீட்டுக்குவீடு 'மைக்ரோசொப்ட்'டின் தயாரிப்புக்களைக் கொண்டுபோய்ச் சேர்த்தது.



1999இல் Business at the speed of thought என்ற நூலை வெளியிட்டார் பில்கேட்ஸ். இருபத்தைந்து மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு 60க்கும் மேற்பட்ட நாடுகளில் இன்றுவரை பரபரப்பாக விற்பனையாகிறது அந்த நூல்.

அதற்கு முன் அவர் எழுதிய The road ahead என்ற நூலும் சளைக்காமல் விற்பனையாகிவருகிறது. இந்த இரண்டு நூல்களின் விற்பனையின் மூலம் கிடைக்கும் முழுத் தொகையையும் அற நிதியத்துக்கு வழங்கி பாராட்டைப் பெற்றுக்கொண்டார் பில்கேட்ஸ்.

உலக சுகாதாரம், கல்வி, தொழில்நுட்ப வளர்ச்சிகளுக்கு தனது அறக்கட்டளைமூலம் பல்வேறு உதவிகளை வழங்கிவருகிறார் பில்கேட்ஸ்.




இவரது வியாபாரத் தந்திரங்கள் பல்வேறு சர்ச்சைகளைக் கிளப்பினாலும், 'மைக்ரோசொப்ட்' நிறுவனத்தின் வெளியீடுகள் காலத்துக்குக் காலம் பல விமர்சனங்களுக்கு உள்ளானாலும் கணினி உலகில் அசைக்கமுடியாத இடத்தை இவரும் 'மைக்ரோசொப்ட்' நிறுவனமும் பெற்றிருக்கிறது என்பது நிச்சயமான உண்மை. இலவச மென்பொருட்கள், போட்டி யாளர்கள் என்று பெரும் சவால்களுக்கு முகம் கொடுக்க இந்த இரு பெயர்களும் என்றுமே தயார்!

## உங்கள் தகவல்களை பாதுகாக்க உதவுகிறது QR Code தொழில்நுட்பம்

நம் தகவல்களை பாதுகாக்க QR தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த முடியும். தகவல்களை QR தொழில்நுட்பத்தின் வழியாக Encode செய்வதன்மூலம் இதனை நாம் செய்து கொள்ளலாம். QR என்பதின் விரிவாக்கம் Quick Response ஆகும். ஜப்பானிய தொழில்நுட்பமான இது உலகெங்கும் இன்று நடைமுறைப்படுத்தப்பட்டுவருகிறது.

Bar Code நாம் அனைவரும் அறிந்ததே. இதன் அடுத்தகட்ட வளர்ச்சியே இந்த QR Code ஆகும். இதன் சிறப்பு என்னவென்றால் உங்களுடைய தகவலை QR Code ஆக Encode செய்தவுடன் கிடைக்கும் படத்தை நீங்கள் எங்கு எதில் வேண்டுமானாலும் அச்சடித்து வைத்துக் கொள்ளலாம். பின்னர் ஒரு சந்தர்ப்பத்தில் அந்தப் படத்தை Scan செய்து Decode செய்தால் அதில் உள்ள தகவல்களை நாம் தெரிந்து கொள்ள முடியும்.

இதில் உங்கள் விலாசம், மின்னஞ்சல் முகவரி, தொலை பேசி எண் அல்லது ஐந்து வரி உள்ள ஒரு தகவல் என எந்தத் தகவலை வேண்டுமானாலும் நீங்கள் Encode செய்து கொள்ளலாம். தமிழில் கூட அந்தத் தகவல் இருக்கலாம்.

இது போன்ற தகவலை உள்ளடக்கிய படம் ஒன்று இருந்தால் நம் கையடக்கத் தொலைபேசியைக் கொண்டு அதில் உள்ள தகவல்களை படிக்க முடியும் என்பது இந்தத் தொழில்நுட்பத்தின் சிறப்பம்சமாகும்.

QR Reader என்கிற மென்பொருளை இணையத்தில் தேடி உங்களுடைய கையடக்கத் தொலைபேசியில் நிறுவிக் கொண்டால் இது சாத்தியமாகிறது.


அதற்கு முன்னர் உங்களிடமுள்ள கையடக்கத் தொலை பேசியில் இந்த மென்பொருள் இயங்குமா என்பதை தெரிந்து கொள்ளுங்கள்.

இணையத்திலும் நீங்கள் தகவல்களை QR Code ஆக Encode செய்யவும் பின்னர் Decode செய்யவும் உதவும் மென்பொருட்கள் இருக்கின்றன. அவற்றை இலவசமாகத் தரவிறக்கிப் பயன்படுத்தலாம். முயன்றுபாருங்கள்.


# கூகுளின் புதிய வசதி :

## Gmail Priority Inbox - மின்னஞ்சல்களின் முக்கியத்துவம்

கூகிள் இன்றொரு புதிய வசதியை ஜிமெயில் இல் அறிமுகப்படுத்தி இருக்கிறது. இந்த சேவை gmail priority inbox எனப்படுகிறது. நமக்கு தினமும் ஏராளமான மின்னஞ்சல்கள் வருகின்றன. இன்பொக்ஸில் நிறைந்து விடும் அத்தனை மின்னஞ்சல்களையும் நம்மால் படிக்க இயலாமல் சோர்ந்து போய்விடுவோம். குறிப்பிட்ட மின்னஞ் சல்களை தடை செய்வதும் இதற்கு ஒரு தீர்வாகலாம்.இந்த நேரத்தில் குறிப்பிட்ட மின்னஞ்சலை முக்கிய மானது அல்லது முக்கியமற்றது எனக் குறித்து வைக்கலாம். முக்கிய மானவற்றை மட்டும் முன்னிறுத்தி priority inbox காட்டுவதால் நமது நேர த்தை மிச்சப்படுத்தலாம்.




Priority Inbox ஐ செயல்படுத்த Gmail Settings -> Priority inbox செல்லவும். அதில் Show Priority Inbox என்பதை கிளிக் செய்து சேமித்துக்கொள்ளவும்.பின்னர் நமது ஜிமெயில் இன்பொக்ஸில் உள்ள மின்னஞ்சல்கள் மூன்று வகையாக பிரிக்கப்படுகின்றன.




Important - இப்பகுதியில் நாம் முக்கியம் எனக்குறிப் பிடுகிற மின்னஞ்சல்கள் இருக்கும்

Starred - இப்பகுதியில் நாம் நட்சத்திரமிட்ட மின்னஞ்சல் களின் பட்டியல் இருக்கும்

Everything else - முக்கியமற்ற மற்றும் மீதமுள்ள அனைத்து மின்னஞ்சல்களும் இருக்கும்.

Priority inbox செயல்படும் விதம்

இந்த சேவை புத்திசாலித்தனமாக செயல்படும் வண்ணம் அமைக்கப்பட்டு உள்ளது.

1.நாம் அனுப்பும் மின்னஞ்சல்கள், (Send mails)

2.நாம் குறிப்பிட்டு படிக்கும் மின்னஞ்சல்கள், (Read messages)

3.நாம் பதில் அனுப்பும் மின்னஞ்சல்கள், (Reply messages)

4.எந்த மாதிரி தலைப்பில் அமைந்த மின்னஞ்சல்களை படிக்கிறோம், (key words)

5.யாருடைய மின்னஞ்சல்களுக்கு குறி யீடு கொடுக்கிறோம் (Starred mails)

போன்றவற்றை வைத்து தானாகவே யாருடைய மின்னஞ்சல்களுக்கு முக்கியத் துவம் கொடுக்கவேண்டும் என்பதை தீர்மானித்து கொள்கிறது.

மேலும் ஒரு வசதி என்னவென்றால் ஜிமெயில் தவறாக சில மின்னஞ்சல்களை முக்கியம் என எடுத்துக்கொண்டால் நாம் அதை மாற்றிக்கொள்ளலாம். உங்கள் இன் பொக்ஸிற்கு மேலே மஞ்சள் நிறத்தில் + குறியீடும் , - குறியீடும் இருக்கும். முக்கியத்துவம் கொடுக்க வேண்டிய மின்னஞ்சல்களை தேர்வு செய்து + பட்டனை கிளிக் செய்தால் முக்கியமானதாகி விடும். - குறியீடை அழுத்தினால் முக்கியத்துவம் அற்றதாகிவிடும்.

மேலும் மின்னஞ்சலின் அருகில் உள்ள நட்சத்திரக் குறியீடை கிளிக் செய்தால் அவர்களும் தனியாக Starred என்ற பகுதியில் வந்துவிடுவார்கள். படிப்பதற்கும் எளிதாக இருக்கும்.

# பல்லூடகப் பயன்பாடு!

## உங்கள் புத்தகங்களை நீங்களே இணையம் மூலம் அச்சிட்டு – வெளியிட்டு – விற்பனையும் செய்யலாம்!

ஒரு புத்தகம் எழுதி அதனை வெளியிடுவதற்கு ஏற்படும் கஷ்டங்களும் செலவுகளும் ஏராளம். வெளியீட்டு நிறுவனங்கள் தங்கள் விற்பனைக்கும் வர்த்தகத்திற்கும் உதவும் நூல்களையே வெளியிடுகின்றன. ஆனால் ஒரு சர்ச்சைக்குரிய நூல் அல்லது குறைந்த வாசகர்களே வாசிக்கும் கருத்தாழ மிக்க, விற்பனைக்கு உத்தரவாதம் இல்லாத - குறைந்த பிரதிகளையே அச்சடிக்கமுடியும் என்ற நிலையிலுள்ள புத்தகங்களை வெளியிட வெளியீட்டு நிறுவனங்கள் அவ்வளவாக முன்வருவதில்லை.

இந்தக் கஷ்டங்களைப் போக்க கோவாவில் உள்ள சினமொன்ரீல் பிரிண்ட் அன்ட் பப்ளிஷிங் நிறுவனம் (CinnamonTeal Print & Publishing Services) இந்தியாவில் 'பிரிண்ட் ஒன் டிமாண்ட்' (POD) என்ற ஒன்லைன் வெளியீட்டு வடிவத்தை நடாத்திவருகிறது.

இதன் மூலம் எழுத்தாளர்கள் தங்களது நூலின் ஒரேயொரு பிரதியைக்கூட இதில் வெளியிடலாம். இதன் மூலம் வெளியீட்டிற்கு ஆகும் பாரிய செலவுகள் தவிர்க்கப்படுவதோடு சிறிய அளவில் புத்தகங்களை எழுத்தாளர்களே வெளியிட்டுக் கொள்ளலாம்.

இதற்கு நீங்கள் செய்யவேண்டியது பெரிதாக ஒன்றும் இல்லை. பூர்த்தியடைந்த உங்கள் பிரதியை இ-மெயில் மூலமாகவோ அல்லது தபால் மூலமாகவோ சினமொன்ரீல் நிறுவனத்திற்கு அனுப்பிவிட வேண்டியதுதான். வெளியீட்டிற்கு முந்தைய தொகுப்புப்பணிகள் (Editing), பிழை திருத்தங்கள் (Proof Reading) தேவைப்பட்டால் ஒரு குறிப்பிட்ட கட்டணத்தில் அந்த நிறுவனமே அவற்றையும் செய்து கொடுக்கும்.

நீங்கள் உங்கள் பிரதியை அனுப்பியவுடனேயே அது Dogearsetc.com என்ற இணையப் புத்தகக்கடையில் விற்பனைக்கு வந்துவிடும்.

எழுத்தாளர்களே தங்கள் புத்தகத்தின் விலையை நிர்ணயிக்கலாம். எந்த ஒரு வாசகராவது உங்கள் எழுத்துகள் பிடித்துப்போய் அந்தப் புத்தகத்தைக் கேட்டால் அவருக்கு உடனடியாக அச்சு அடிக்கப்பட்டு நன்றாக பைண்ட் செய்யப்பட்டு அனுப்பப்படும். புத்தகத்தின் உள்ளடக்கங்களுக்கான காப்புரிமை ஆசிரியரைச் சார்ந்ததே.

cinnamonteal.in இணையத்தை ஆரம்பித்த லியோனார்ட் மற்றும் கியூனீ ஆகியோர் இந்த இயைணயத்தின் சேவை குறித்துக் கூறுகையில், பல்வேறு மொழிகளும், பண்பாடுகளும் நிரம்பிய நாடுகளில் குறிப்பிட்ட சிறு வட்ட வாசகர்களுக்கு நூல்கள் சென்றடைய இந்த வெளியீட்டு நிறுவனம் பெரிதும் உதவிவருகின்றது என்கிறார்கள்.

மரபு ரீதியான வெளியீட்டு நிறுவனங்கள், எழுத்துக்கள் வர்த்தகமாக வேண்டும் என்று எதிர்பார்க்கின்றன. பெரிய அளவிற்கு விற்றுத் தீர்த்தாலும், விற்பனை விலையில் ஒரு சிறிய சதவீதத்தை மட்டுமே எழுதியவருக்கு வழங்குகின்றன.




இந்த இடைவெளியை சினமொன்ரீல் போக்குவதாகவும் அவர்கள் தெரிவிக்கிறார்கள். இதுவரை இந்த வெளியீட்டு நிறுவனம் சிறப்பான வர்த்தகத்தைச் செய்துவந்துள்ளது என்பதை இந்தத் தளத்துக்குச் சென்றால் நாம் அறிந்துகொள்ளலாம்.

இதுபோன்ற புதுவகை ஒன்லைன் பப்ளிஷிங் பற்றிய செய்தி நமக்குப் புதிதாக இருக்கலாம். ஆனால் மேலைத்தேய நாடுகளில் Lulu.com இந்த வர்த்தகத்தை மிகப்பெரிய அளவில் செய்து வருகிறது.

பல்லூடகம் (Multimedia) என்பது வேறுபட்ட உளளடக்க வடிவங்களின் இணைவைப் பயன்படுத்துகிற ஊடகம் மற்றும் உள்ளடக்கம் ஆகும். இந்தச் சொல்லானது அச்சிடப்பட்ட அல்லது கையால் தயாரிக்கப்பட்ட பொருளின் பரம்பரிய வடிவங்களை மட்டுமே பயன்படுத்துகின்ற ஊடகத்திலிருந்து வேறுபடுத்துதலில் பயன்படுகின்றது. பல்லூடகம் என்பது உரை, ஒலி, அசைவூட்டப் படங்கள், இயங்குபடம், நிகழ்படம் மற்றும் இடைக்காட்சி உள்ளடக்கப் படிவங்கள் ஆகியவற்றின் இணைவைக் கொண்டிருக்கின்றது.

பல்லூடகம் என்பது வழக்கமாக கணினிமயமாக்கப்பட்ட மற்றும் மின்னணு சாதனங்கள் போன்ற தகவல் உள்ளடக்க செயலாக்க சாதனங்கள் மூலமாக பதிவுசெய்யப்படுகின்றது, இயக்கப்படுகின்றது, காண்பிக்கப்படுகின்றது அல்லது அணுகப்படுகின்றது. பல்லூடகம் நுண் கலையில் ஆடியோவை சேர்ப்பதன் மூலமாக கலப்பின மீடியாவில் இருந்து வேறுபடுகின்றது எடுத்துக்காட்டாக, அது அகன்ற செயற்பரப்பைக் கொண்டிருக்கின்றது. 'உயர் மீடியா' என்பது ஊடாடக்கூடிய மல்டிமீடியாவுக்கான ஒரே பொருளைக் கொண்டது.

பல்லூடக விளக்கக்காட்சிகளை மேடை, திரைப் படக்கருவி, பரப்புதல் ஆகியவற்றில் நேரடியாகப் பார்க்கலாம், அல்லது மீடியா பிளேயர் கொண்டு இயக்கப்படலாம். அலைபரப்பு நேரடியான அல்லது பதிவு செய்யப்பட்ட பல்லூடக விளக்கக்காட்சியாக இருக்கலாம்.


-விக்கிபீடியா

# கணினியில் சில Video கோப்புகள் இயங்க மறுப்பதேன்?




உங்களிடம் ஒரு mp3 ஒலிக்கோப்பு இருந்தால் அநேகமாக எல்லா ஓடியோ பிளேயர்களும் அதனை இயக்கும். அதேபோல jpg வடிவிலுள்ள கோப்புகளையும் எந்தவொரு ஒளிக்காட்டி மென்பொருளும் இயக்கி எமக்கு வெளியீட்டைத் தரும்.

ஆனால் .avi, .mpge போன்ற வடிவில் ஒளிப்படக்கோப்புகள் இருந்தால் அனைத்து வீடியோ பிளேயர்களும் அவற்றை இயக்கும் என்று உறுதியாகக் கூறிவிடமுடியாது. அதற்குக் காரணம் இவை நேரடியான முழுமையான ஒளிப்படக் கோப்பு வடிவங்களில்லை. இவை தமக்குள் தகவல்களை ஏனைய வடிவங்களிலும் (Format) கொண்டுள்ளதாலேயே இத்தகைய சிக்கல்கள் ஏற்படுகின்றன.




இவை ஒலியை ஒரு Format இலும் ஒளியை இன்னொரு Format (Codec) கொண்டுள்ளன. உதாரணமாக ஒரு avi கோப்பானது motion jpeg video மற்றும் ிcm Audio Format களைக் கொண்டிருக்கலாம். இன்னொரு கோப்பில் xvid mpeg - 4 Format இல் Videoவும் ima adpcm Format இல் Audioவும் இருக்கலாம். என்ன, சிக்கலாகத் தோன்றுகிறதா? ஆனால், இதுதான் நாம் பயன்படுத்தும் ஒளி - ஒலிக் கோப்புகளின் வடிவங்களில் உள்ள விசித்திரம்.

ஒரு .avi கோப்பானது விண்டோஸ் மீடியா பிளேயரில் இயக்கப்படலாம். இன்னொரு பிளேயரில் அந்தக் கோப்பிலுள்ள ஒலிவடிவம் மட்டும் வெளியீடாகக் கிடைக்கும்; ஒளிவடிவம் வராது. அல்லது மாற்றாக ஒளிவடிவம் கிடைத்து ஒலி வடிவம் வராமல் இருக்கலாம். சில பிளேயர்கள் அந்தக் கோப்பிலுள்ள எதையுமே இயக்கமுடியாமல் திணறலாம். அதனால், ஒரு Video கோப்பானது எந்தவகை Codec ஐக் கொண்டுள்ளது என்பதை அறிந்தாலே அதற்குரிய பிளேயரில் நாம் வெளியீட்டைப் பெறமுடிகிறது.

ஒரு Video கோப்பு எந்தவகையான Codec Formatஐக் கொண்டுள்ளது என்பதை எவ்வாறு அறிவது? அதற்கு வழியொன்று இருக்கிறது. கோப்பின் மேலாக Right கிளிக் செய்து, தோன்றும் மெனுவில் properties ஐக் கிளிக் செய்து, தோன்றும் வின்டோவில் Details Tabஇனைத் தெரிவுசெய்து பார்க்கலாம். ஆனால், இதன்மூலம் மிக முக்கியமான Codec குறித்த தகவல் அங்கே இருக்காது. அந்தத் தகவல்தான் இங்கே எமக்கு முக்கியமாகத் தேவைப்படுகிறது. ஆயினும் மைக்ரோசொப்ட் இயங்குதளமானது அது குறித்த தகவலைக் காட்டுவதற்கு மறுப்பது ஏன்?




அப்படியானால் நாம் எப்படித்தான் Codec Format ஐக் கண்டுபிடிப்பது?

அதற்கு நமக்கு ஒரு மூன்றாம் தரப்பு மென்பொருள் ஒன்று அவசியமாகிறது. அத்தகைய பல துணை மென்பொருட்கள் இருந்தாலும் பொதுவாக பலராலும் பயன்படுத்தப்படுவது AVI Codec என்ற மென்பொருளாகும். இது மிக எளிமையானது மட்டுமின்றி இலவசமாகவும் கிடைக்கிறது.

இந்த மென்பொருளை தரவிறக்கம் செய்து கணினியில் நிறுவிக்கொண்டபின்னர் எந்த Format இல் உள்ள Video கோப்பிலும் Right கிளிக் செய்து AVIcodec: detailed information என்பதனைத் தெரிவுசெய்து அதனை மென்பொருளில் இயங்கும்படி செய்துகொள்ளலாம்.

ஆனால், ஏற்கனவே Codec மென்பொருள் இயங்கிக்கொண்டிருந்தால் இந்த முறை பயன்தராது. அப்போது நீங்கள் கோப்பினை இழுத்து மென்பொருளுக்குள் கொண்டுவருவதன் மூலம் (Drag) அதனை இயங்கச்செய்யலாம்.

இந்த முறைகளுக்கு மேலதிகமாகவும் Codec கோப்பு தேவை என்றால் Windows Essentials Codec Pack அல்லது K-Lite Codec Pack Full தொகுப்பை பதிவிறக்கம் செய்து பயன்படுத்தலாம்.



உங்கள் இல்லங்களில் நடைபெறும்
மங்களகரமான நிகழ்ச்சிகளை மிகவும் அழகான முறையில்
புகைப்படம், வீடியோ பிடித்து உங்கள் கைகளில்
விரைவாகவும், தரமானதாகவும் குறைந்த செலவில்
நவீன முறையில் செய்து தரப்படும்.




உங்களின் தேவையே
எங்களின் சேவை

## எமது சேவைகள்:



- வீடியோ அன் போட்டோ
- **VHS TO CD OR DVD**
- ஹரிஸ்மா அல்பம், டிஜிட்டல் அல்பம்
- சகல விதமான அழைப்பிதழ்களுக்கான வடிவமைப்புகள்
- பனர், வாழ்த்துப்பா டிசைன்கள்
- புதிய, பழைய பாடல்கள், படங்கள்
- சிறுவர்களுக்கான கேம் வகைகள்
- கணனி, கையடக்க தொலைபேசி விற்பனையும், திருத்துதலும்



இவற்றிற்கு தேவையான உதிரிப் பாகங்களையும்
ஒரே கூரையின் கீழ் மலிவாக பெற்றுக்கொள்ளலாம்.

# அபி கொம்பியூட்டர்ஸ்



இல: 252,254 நாவலர் றோட்,
இலுப்பையடி சந்தி,
யாழ்ப்பாணம்.



தொலைபேசி: 021-222-0204, 077-6305290





# அதிபர்களே! ஆசிரியர்களே!

ஒலிம்பியா ஸ்போட்ஸ்



உங்கள் பாடசாலைகளின் மெய்வல்லுனர் நிகழ்வுகள் சிறப்புற

தேவையான
- ★ ஈட்டி, குண்டு, தட்டு, அளவு நாடாக்கள் உட்பட அனைத்து விளையாட்டு உபகரணங்கள்
- ★ வெற்றிக்கிண்ணங்கள், வெற்றிக் கேடயங்கள், மெடல்ஸ்.
- ★ பான்ட் வாத்திய கருவிக, உதிரிபாகங்கள் போன்றவற்றை

நியாய விலையில் பெற்றுக்கொள்ள

## ஒலிம்பியா ஸ்போட்ஸ்

இல.6, ஜும்மா பள்ளிவாசல் லேன்,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

ஞாயிற்றுக்கிழமைகளில்
01மணிவரை திறக்கப்படும்.

T.P: 2223490, 0778010219, 0778060267



பாகம் 1

## அறிமுகம

தற்காலத்தில் இணையப்பக்க வடிவமைப்பில் மிகப்பிரபல்யமானதாக திகழும் திறவூற்று ஸ்கிறிப்ட் (**Opens Source Script**) ஆகிய பி.எச்.பி(**PHP**) பற்றியும் அதனோடிணைந்த தரவுத்தளமான **MYSQL** பற்றியும் கற்பிக்கப்போகின்ற இந்த தொடரானது உங்களை ஒரு இணையத்தளவடிவமைப்பாளராக மாற்றும் என்பதில் எனக்கு எந்தவித சந்தேகமும் இல்லை.

இதற்கு முன்னர் பொதுவான இணையத்தள வடிவமைப்பு சம்பந்தமான மொழிகள் மற்றும் ஸ்கிறிப்ட் கள் மீது மேலோட்டமான பார்வையினை செலுத்துவது பி.எச்.பி(**PHP**), அதனோடிணைந்த தரவுத்தளமான **MYSQL** போன்றவை மேற்குறிப்பிட்டனவற்றில் இருந்து எவ்வாறு வேறுபடுகின்றது என்பது பற்றி அறிந்துகொள்வதற்கு வழிகோலும்.



த.தவரூபன்-
CEO
Speed IT Net, Jaffna.

## வேறுபாடு

சாதாரணமாக இணையப்பக்க வடிவமைப்பு என்றவுடன் நமது எண்ணத்தில் ஓடுவது எச்.ரி.எம்.எல் (**HTML**) எனப்படு கின்ற மீயுரை குறி மொழியாகும். நாம் பார்க்கின்ற இணையப் பக்கங்களில் தெரிகின்ற விடயங்கள் அனைத்தும் இந்த மொழியிலேயே இணைய உலவிக்கு (பிறவுசர்) வருகின்றன. இவை இணைய உலவியினால் தரம்பிரிக்கப்பட்டு உரிய வடிவில் எமக்கு காட்சிப்படுத்தப்படுகின்றன.

நாம் அழைக்கும் குறித்த பக்கம் கட்டாயம் எச்.ரி.எம்.எல் இல் எழுதப்பட்டிருக்கும் என்று சொல்லமுடியாது அது **Server Side Script** ஆகிய **ASP, PHP, Perl, ColdFusion** போன்றவற்றி லொன்றிலோ அல்லது **Client Side Script** ஆகிய **Java Script, Jscript, VBScript** போன்றவற்றிலான்றிலோ அல்லது இவற்றை எச்.ரி.எம்.எல் உடனோ அன்றி முதற்சொன்ன எதாவது **Server side Script** ஒன்றுடனோ கலந்து எழுதப்பட்டி ருக்கலாம். ஆனால் இறுதியில் அனைத்தும் எச்.ரி.எம்.எல்தான்!

### Client Side Script

சரி, மேலே **Server Side Script , Client Side Script** என இரண்டு விடயங்கள் பற்றி குறிப்பிட்டிருந்தேன். அவற்றின் பொருள் என்ன? நியாயமாக உங்கள் மனதில் எழவேண்டிய கேள்வி இது. இணையத்தில் நாம் உலவியூடாக குறித்த பக்க மொன்றை அழைக்கும்போது இப்பக்கத்திற்கான உள்ளடக் கங்கள் எமது கணினியில் வைத்து எச்.ரி.எம்.எல் இற்கு மொழி மாற்றம் செய்யப்பட்டு பின்பு உரிய வகையில் காட்சிப்படுத்தப் படுமாயின் குறித்த பக்கத்தில் பயன்படுத்தப்பட்ட ஸ்கிறிப்ட்கள் **Client Side Script** எனப்படும்.மேலும் இவற்றில் தரவுத்தளப்(**Database**) பயன்பாடு இல்லை

### Server Side Script

இணையத்தில் நாம் உலவியூடாக குறித்த பக்கமொன்றை அழைக்கும் போது அப்பக்கத்தில் உள்ள ஸ்கிறிப்ட்கள் சேவர் கணினியிலேயே மாற்றங்களுக்குள்ளாக்கப்பட்டு உள் ளடக்கங்கள் எமது கணினிக்கு எச்.ரி.எம்.எல் வடிவில் அனுப் பப்பட இவை இங்கு உலவியினால் உரிய வகையில் காட்சிப்படுத்தப்படுமாயின் குறித்த பக்கத்தில் பயன்படுத்தப் பட்ட ஸ்கிறிப்ட்கள் **Server Side Script** எனப்படும். இவற்றில் தரவுத்தளம்(**Database**) பயன்படுத்தக் கூடியதாக இருக்கும்.

இங்கு ஒன்றை குறிப்பிடவேண்டும். அதாவது **Server Side Script** ஆனது பயன்படுத்தப்பட்டு ஒரு இணையப்பக்கம் வடிவமைக்கப்பட்டிருப்பின் இப்பக்கம் குறித்த **Script** ஆனது **Run** செய்யப்படக்கூடிய சேவர் கணினியில்தான் ஏற்றப்பட் டிருக்கவேண்டும் ஆனால் **Client Side Script** ஆனது குறித்த பக்கத்தை பார்க்கும் கணினி மற்றும் சேவர் கணினி தன்மை குறித்தோ இயங்குதளம் குறித்தோ எவ்விதமான கட்டுப்பாடு களையும் கொண்டிராது. அதாவது சுயாதீனமானது. எந்தக் கணினியிலும் இயங்கி உள்ளடக்கங்களை காட்சிப் படுத்தக்கூடியது. எனினும் பார்க்கும் கணினியில் உள்ள உலவியின் ஸ்கிறிப்ட் ஊடுபுகவிடும் தன்மையில் செய்யப் படும் மாற்றங்கள் இதனது இயக்கத்திற்கு பங்கம் விளைவிக் கலாம்.

எது எப்படியிருந்தபோதிலும் **Server Side Script** இனது இயக்கத்திற்கும் நாம் அது கொண்ட பக்கத்தினை பார்க்கும் கணிக்கும் எந்தவித தொடர்பும் இல்லை. அதாவது எமது கணினியின் சூழல் எந்தவிதத்திலும் செல்வாக்கு செலுத்தமுடியாது. காரணம் அது இயங்குவது முழுக்க முழுக்க சேவர் கணினியில் தான். இங்கு வருவது வெறும் எச்.ரி.எம்.எல் தான்!

### Web Server

இனி **Web Server** பற்றி சிறிது நோக்குவோம். **Server Side Script** போன்ற **Web Application** கள் **Run** செய்யப்படுவதற்கு முக்கியமாக தேவைப்படுவது இதுவாகும்.ஆயினும் இது பயனாளர் கணினியில் (**Client Computer**) இல் நிறுவப்பட்டிருக்க வேண்டியதில்லை ஆனால் சேவரில் நிறுவப்பட்டிருக்க வேண்டும். **PWS (Personal Web Server)** , **IIS(Internet Information Services-Windows** இயங்கு தளத்திற்குரியது), **Apache**

APACHE



Cont...

HTTP Server (அனைத்து இயங்கு தளத்திலும் இயங்க வல்லது) நீங்கள் உங்கள் கணினியில் வைத்த **Server Side Script**களைப்பாவித்து இணை யத்தளங்களை வடிவ மைக்கப் போகின் றீர்கள் எனில் உங்கள் கணினி ஒரு வெப் சேவருடன் இணைக்கப்பட்டிருக்க வேண்டும் அல்லது கணினி ஒரு வெப்சேவர் கணினியாக இருக்கவேண்டும்.

சாதாரணமாக நாம் அநேகர் பாவிப்பது விண்டோஸ் இயங்குதளம் கொண்ட பயனாளர் கணினிகள் ஆகும் அப்படியிருக்க எப்படி **PHP** போன்ற **Script** களில் இணையப் பக்கங்களை வடிவமைப்பது? இதற்குத்தான் வழி உள்ளது. உங்கள் கணினியில் ஒரு வெப் சேவரினை நிறுவிவிட்டால் இது குறித்த போல்டர் ஒன்றினையோ பலவற்றினையோ சேர்வராக மாற்றிவிடும். பின்பு நீங்கள் வடிவமைத்த பக்கங் களை அதனுள் இட்டு பரீட்சித்துப்பார்க்கலாம். இவ்வேளை உங்கள் கணினி **Server** ஆகவும் **Client** ஆகவும் தொழில் படும். எனவே ஒவ்வொரு தடவையும் இன்ரநெட் எனும் இணையம் அவசியமின்றியே பக்கங்களை பரீட்சிக்கலாம். பக்கங்களை எவ்வாறு பரீட்சிப்பது என்று பிற்பகுதியில் பார்ப்போம்.

**ASP-PHP வேறுபாடு**

சேவர் சைட் ஸ்கிறிப்ட் (**Server Side Script** )இனைப் பொறுத்தவரையில் **JSP** உட்பட பல இருந்தாலும் நாம் பரவலாக கேள்விப்படுவது **ASP(Active Server Pages)** மற்றும் **PHP(Hyper Text Preprocessor)** ஆகியனவாகும். இவற்றுக் கிடையிலான வித்தியாசம் என்ன? நீங்கள் தெரிந்து வைத் திருக்கவேண்டியது முக்கியம். இயங்கு தளங்களில் லினக்ஸ், விண்டோஸ், யுனிக்ஸ் என வேறுபட்டவைகள் உள்ளன. அதுபோல கணினி மொழிகளில் **C++,Java,VB,VB.net** என பல உள்ளன

இதுபோலவே சேவர் சைட் ஸ்கிறிப்ட்களிலும் இப்படி **ASP/ASP.net/PHP/JSP** என பல உண்டு. அவற்றில் **ASP** ஆனது முழுக்க முழுக்க விண்டோஸ் இயங்கு தளச் சூழலுக் காக வடிவமைக்கப்பட்டது **ASP.net** ஆனது **ASP** இனது பிந்திய பதிப்பு ஆகும் இதன் மூலம் வடிவமைக்கப்பட்ட பக்கங்கள் **.aspx** என்ற கோப்பு வடிவத்தில்(**File Extension**) இல் முடிவுறும்

**PHP** ஆனது சிறப்பாக **Linux ,Unix** போன்ற இயங்குதளச் சூழலுக்கேற்ற வகையில் வடிவமைக்கப்பட்டது. எனினும் விண்டோஸ் இயங்கு தளச்சூழலிலும் இயங்கவல்லது முக்கியமாக இது திறந்த ஆணை மூல(**Open Source**) ஸ்கிறிப்ட் ஆகும். இதன் மூலம் வடிவமைக்கப்பட்ட பக்கங்கள் **.php** என்ற கோப்பு வடிவத்தில்(**File Extension**) இல் முடிவுறும்

**ASP** யினை பொறுத்த வரையில் விண்டோசில் இயங்கவல்ல தரவுதளங்களுக்கே(**Database**) ஒத்திசைவானது. அதேபோல் **PHP** ஆனது லினக்ஸ் மற்றும் யுனிக்ஸ் குடும்ப தரவுத்தளங்களான **MYSQL ,Postgre SQL** இற்கு ஒத்திசைவானது. **JSP** ஆனது எல்லா லினக்ஸ் தளங்களிலும் இயங்காது, சிலவற்றுக்கே ஒத்திசைவானது

**சேவர் தெரிவு**

நீங்கள் இணையப்பக்கமொன்றை மேன்சொன்ன ஸ்கிறிப்ட்களில் வடிவமைக்கப்போகின்றீர்கள் என்றால் முத லில் தெரிந்து கொள்ளவேண்டியது நீங்கள் அந்தப் பக்கத்தினை இணைய மேலேற்றம்(**Upload**) செய்யப் போகின்ற சேவர் பற்றித்தான். அதாவது இந்த சேர்வர் எந்த சேவர் இயங்கு தளத்தினை கொண்டது, எந்த வெப் சேவர் அதில் நிறுவப்பட்டிருக்கிறது என்பதே தற்போது **IIS** வெப்சேவர் நிறுவப்பட்ட விண்டோஸ் சேர்வர்களின் விலை **Apache** வெப்சேவர் நிறுவப்பட்ட லினக்ஸ், யுனிக்ஸ், **Free BSD** சேவர்களின் விலையிலும் மிக மிக அதிகமாகும் எனவே திறந்த ஆணைமூல இயங்குதளச் சேவரினையும் **PHP** ஸ்கிறிப்ட் இனையும் தெரிவு செய்வதே புத்திசாலித் தனமானது. மேலும் தற்போது லினக்ஸ், யுனிக்ஸ், **Free Unix BSD** சேவர்கள் வழங்குனர்கள் (**Web Hosting Providers**) **ASP/ASP.net** மற்றும் **PHP** இற்கும் ஒத்திசையக்கூடிய ஏற்பாடுகளை செய்து வருகின்றார்கள்.

வடிவமைப்பைப்பொறுத்தவரையில் நாம் பாவிக்கும் விண்டோஸ் இயங்குதளக்கணினிகளில் இருந்துகொண்டே எந்த வகை ஸ்கிறிப்ட்களினூடாகவும் இணைப்பக்கங்களை வடிவமைக்கலாம். இது விடயத்தில் வெப்சேவர் மாத்திரமே முக்கியத்துவம் பெறுகிறது. மேலும் **Linux** குடும்பத்துக்கே உரித்தான **MYSQL** போன்ற தரவுத்தளங்களை விண்டோஸ் பதிப்பை நிறுவி எமது கணினிகளில் பயன்படுத்தலாம்.


இதுவரை முக்கயமான பல விடயங்களுக்குரிய விளக்கங்கள் தரப்பட்டுவிட்டன. இனி அடுத்த இதழில் இந்த தொடரின் கதாநாயகனான **PHP** பற்றி பேசுவோம் இக்கட்டுரை தொடர்பில் உங்களுக்கு ஏதும் கருத்துக்கள் சந்தேகங்கள் இருப்பின் அனுப்பிவைக்கவும் அடுத்த கட்டுரையில் தெளிவுபடுத்தமுடியும்.

(தொடரும்...)

### எழுத்துரு இல்லாமல் வாசிக்கலாம்!

# யுனிக்கோட் UNICODE என்றால் என்ன?

'யுனிக்கோட்' என்பது ஒரு எழுத்துருக் குறிமுறையாகும் (Encoding) இதற்கு முதல் பயன்பாட்டில் இருந்த ASCII குறிமுறைக்குப் பதிலாக அறிமுகப்படுத்தப்பட்டதே இது வாகும். பலரும் கூறுவதுபோல இது ஒரு எழுத்துரு(Font) அல்ல எழுத்துருக் குறிமுறை என்று சொல்வதே சாலச்சிறந்தது. லதா மற்றும் தேனி உமர் போன்ற யுனிக்கோட் எழுத்துருக்கள் நிறைய உள்ளன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.




எந்த இயங்குதளம் ஆயினும், எந்த மென்பொருள் ஆயினும், எந்த மொழி ஆயினும் ஒவ்வொரு எழுத்துக்கும் தனித்துவமான எண் ஒன்றை வழங்குகிறது. அடிப்படையில் கணினிகள் எண்களுடன்தான் தொழிற்படுகின்றன. அவை எழுத்துக்களையும் பிற வரியுருக்களையும் எண்வடிவிலேயே சேமிக்கின்றன. 'யுனிக்கோட்' கண்டறியப் படுவதற்கு முன்னர் இவ்வாறு எழுத்துக்களுக்கு எண்களை வழங்க நூற்றுக்கணக்கான குறியீட்டு முறைகள் இருந்தன.

இவற்றில் எந்தவொரு முறையிலும் போதுமான அளவு எழுத்துக்கள் இருக்கவில்லை: உதாரணமாக, ஐரோப்பிய மொழிகளை உள்ளடக்கவே பல்வேறு குறியீட்டு முறைகள் தேவைப்பட்டன. ஆங்கில மொழியில் கூட எந்தவொரு குறியீட்டு முறையினாலும் பொதுவாகப் புழங்கும் எல்லா எழுத்துக்களையும், தரிப்புக் குறிகளையும், மற்றும் தொழில்நுட்பக் குறிகளையும் உள்ளடக்க முடியவில்லை.

மேலும் இக்குறியீட்டு முறைகள் ஒன்றுடன் ஒன்று முரண்படுகின்றன. அதாவது, இரு குறியீட்டு முறைகள், இரு வேறு எழுத்துக்களுக்கு ஒரே எண்ணையோ, அல்லது ஒரே எழுத்துக்கு இரு வேறு எண்களையோ வழங்கலாம். இதனால் எந்தவொரு கணினியும் (குறிப்பாக சேவர்கள்) பல்வேறு குறியீட்டு முறைகளை ஆதரிக்க வேண்டியுள்ளது இந்நிலையிலும் வெவ்வேறு குறியீட்டு முறைகளுக்கு இடையிலோ அல்லது இயங்குதளங்களுக்கு இடையிலோ தரவுகள் பரிமாறப்படும் போது, அத் தரவுகள் பழுதுபடச் சாத்தியமுள்ளது.

கணினி விடயத்தில் பொதுவாக ஆங்கிலமே பாவனையில் உள்ளபோதிலும் ஒவ்வொரு மொழியினரும் தத்தமது மொழியில் அதனது உபயோகத்தைப் பெறமுயற்சிக்கின்றார்கள். எதனையும் தத்தமது தாய் மொழியில் காணும்போது கேட்கும் போது பார்ப்பவர்களும் கேட்பவர்களும் நிச்சயமாய் பரவசம் அடைகின்றார்கள் என்பது உண்மை. எல்லோரும் ஒரு மொழியைப் பயில்வது என்பது நடைமுறையில் சாத்தியமற்றது. அந்தவகையில் தான் கணினியிலும் குறித்த ஒரு மொழியின் பயன்பாட்டை மாத்திரம் புகுத்துவது சாத்தியமற்றது.

எல்லா மொழியினரும் கணினியைப் பயன்படுத்த வேண்டும், அதன் பயன்பாட்டைப் பெற வேண்டும். இதில் படித்தவர், பாமரர் என்ற வேறுபாடு காட்ட முடியாது. இனிவரும் உலகம் கணினியின்றி இயங்கவே முடியாது என்பது மெய்ப்பிக்கப்பட்டு வருகின்றது. ஆங்கிலேயரால் உருவாக்கப்பட்ட கணினியினை உடனடியாக முற்றுமுழுதாக ஒவ்வொரு மொழியிரும் தத்தமது மொழிக்கு ஒத்திசைவாக்கம் செய்வது சிறிது கடினம் எனினும் முடியாத காரியமில்லை.

இதற்கிடையில் நாம் ஒன்றை விளங்கிக் கொள்ள வேண்டும். கணினிக்கு இன்று உலகில் உள்ள எந்த மொழியும் தெரியாது. அதற்கு ஒரே ஒரு மொழிதான் விளங்கும்.அந்த இயந்திர மொழி (Machine Language) மூலம் தான் அதற்கு ஆணையினை வழங்க முடியும். அதற்கு ஊடகமாக ஒருவேளை ஒவ்வொருவரும் தத்தமது மொழிகளை பயன்படுத்த முடியும். இந்த மனித மொழிகளுக்கும் இயந்திர மொழிக்கும் இடையில் கணினி மொழிகள் எனப்படும் Programming Languages பயன்படுகின்றன.

இவை ஒரு புறம் நிற்க, சீனர்கள் தமது கணினியானது தங்கள் மொழியில் வெளியீடுகளைத் தர வேண்டும், உள்ளீடுகளைப் பெறவேண்டும் என்று முயற்சிக்கின்றார்கள். அது போல் ஜேர்மனியர்கள் ஜேர்மன் மொழியிலும், பிரான்சு தேசத்தவர் பிரெஞ்சு மொழியிலும், தமிழர் தமிழ்மொழியிலும் கணினியின் உள்ளீடுகள், வெளியீடுகள் இருக்க வேண்டும் என விரும்புகின்றார்கள்.

### சாதாரண எழுத்துரு பாவனையில்...

கணினி எமது மொழியில் வழங்கும் ஆணைகளை பெற்றுணர்ந்து எமது மொழியிலேயே வெளியீடுகளை தரவேண்டும் என ஒவ்வொரு மொழிக்காரர்களும் முயற்சிக்கின்றார்கள்.



அதில் பெருமளவில் வெற்றி பெற்று வருகின்றார்கள். ஆயி னும் வெறுமனே ஒரு மொழிப் பிரயோகமும் கணினியில் சாத்தியமற்றது.

இதற்காக நாம் பல்வேறு எழுத்துருக்களை (Font) கையாளுகின்றோம். இந்த கட்டுரையினையே உதாரணமாக எடுத்துக் கொள்வோம். இக்கட்டுரை அச்சில் வருவதற்காக கணினி மூலம் அச்சு எடுக்க வேண்டிய தேவை இருக்கின்றது. ஆனால் கட்டுரை வெறுமனே தமிழில் மாத்திரம் இல்லையே. இடையிடை ஆங்கிலச் சொற்களும் பாவிக்கவேண்டி இருக்கிறது. அப்போது என்ன செய்வது தமிழ் பகுதியை தமிழிலும், ஆங்கிலப் பகுதியினை ஆங்கிலத்திலும் ரைப் செய்யவேண்டி இருக்கின்றது. அதற்காக அந்தந்த மொழி எழுத்துருக்களை தெரிவு செய்ய வேண்டியிருக்கும்.

எழுத்துக்களை கணினிக்குள் உள்ளிட வேண்டுமல்லவா அதற்கு சாதனம் இருக்கின்றது. அது தான் விசைப்பலகை (Key Board) அதில் ஒவ்வொரு விசை ( Key )யினை அழுத்தும் போது அந்த விசைக்குரிய எழுத்து இதுதான் என்று கணினி புரிந்து கொண்டு அதனை உள்வாங்கும் .சாதாரணமாய் விசைப்பலகையில் எத்தனை விசைகள் இருக்கும் 105 அல்லவா ? ஒரு மொழியில் எத்தனை எழுத்துக்கள் இருக்கக்கூடும் ? இது மொழிக்கு மொழி வித்தியாசம். இதற்கும் தீர்வு உண்டு.

சில விசைகளை சேர்த்து குறித்த இன்னும் ஒரு விசையை அழுத்தினால் சில எழுத்துக்களை புரிந்து கொள்ளும் திறனை கணினி கொண்டிருக்கின்றது. அல்லது குறித்த விசையினை அழுத்தி பின்னர் விசைப்பலகையினை பயன்படுத்தும் போது விசைகள் யாவும் குறித்த எழுத்துக்களையும் மற்றொரு விசையை அழுத்தியபின் விசைப்பலகையினை பயன்படுத்தினால் மற்றொரு தொகுதி எழுத்துக்களையும் புரிந்து கொள்ளும் வண்ணம் விசைப்பலகைகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. இவையெல்லாம் விசைப்பலகைகள் உருவாக்கும்போது கவனிக்கப்படுவதனால் இந்தப் பிரச்சனைகளையும் தீர்வு காணப்பட்டுவிட்டது.

**எழுத்தை உள்ளிடும்போது ...**

உண்மையில் விசைப்பலகையில் விசை ஒன்றை அழுத்தும்போது குறித்த எழுத்து நேரடியாக கணினியில் உள்ளிடப்படாது அந்த விசைக்குரிய ASCII இலக்கம் கணினிக்குள் செலுத்தப்படுகின்றது. அதனுடன் அவ்வேளை உபயோகப்படுத்தப்பட்டுக்கொண்டிருக்கும் எழுத்துருவிற்கு ஏற்ப வெளியீடு வருகின்றது. சாதாரண ஆங்கில விசைப்பலகை ஒன்றில் ஆங்கில எழுத்தான A யினை அழுத்தும் போது (Caps Lock அழுத்தப்பட்டிருக்கையில்) 65 என்ற ASCII இலக்கம் கணினிக்குள் வழங்கப்படும் அவ்வேளை Arial என்ற ஆங்கில எழுத்துரு உபயோகத்தில் இருப்பின் அது "A" ஆகவும் Bamini என்ற எழுத்துரு உபயோகத்தில் இருப்பின் "யு" ஆகவும் வெளியீடு கிடைக்கும். வெளியீடானது எழுத்துருவில் தான் தங்கியிருக்கின்றது என்பது இதில் இருந்து புலனாகியிருக்கும்.

அநேகமாக தற்போது புழக்கத்தில் உள்ள எழுத்துக்கள் சாதாரண விசைப்பலகைக்கு ஏற்பவே அமைக்கப்பட்டிருக்கின்றன. குறித்த ASCII எண்களே திரும்பத்திரும்ப பயன்படுத்தப்படுகின்றன. அவற்றுக்குரிய வெளியீடுகள் இப்படி இருக்க வேண்டும் என ஒவ்வொரு மொழி எழுத்துருக்களும் நிர்ணயிக்கின்றன.

உதாரணமாக Arial எழுத்துருவை உபயோகித்து WELCOME என்ற சொல் தட்டச்சு செய்யப்பட்டிருக்கின்றனது என வைத்துக் கொள்வோம். கணினிக்குள் உள்ளீடுகள் வழங்கப்படும் போது குறித்த விசைக்குரிய ASCII இலக்கங்களே வழங்கப்பட்டிருக்க முடியும். அவை Arial எழுத்துக்கள் காரணமாக WELCOME ஆக தெரிகின்றது. இதே சொல்லை Bamini என்ற தமிழ் எழுத்துருவிற்கு மாற்றுவோம் எனில் எவ்வாறு அமையும் **'ருநுடுஊழுஆநு'** என அமையும். சரி "வணக்கம்" என்ற Bamini எழுத்துருவினூடாக பெறப்பட்ட சொல்லை Arial ஆங்கில எழுத்துருவிற்கு மாற்றுவோமெனில் என்ன வரும் **"tzf;fk"** என அமையும். ஆகவே குறித்த ASCII இலக்கம் ஒவ்வொரு மொழி எழுத்திலும் வித்தியாசமான வடிவங்களைத் தருகின்றது என்பது தெளிவாகின்றது.

**ASCII குறிமுறை எழுத்துருக்களின் குறைபாடு**

சாதாரண குறிமுறைகளில் அமைந்த எழுத்துருப் பாவனையில் குறித்த எழுத்துருவில் வைத்து தட்டச்சு செய்யப்பட்ட சொல் அல்லது சொற்கள் அதே மொழி எழுத்துரு மூலமே சரியாக வாசித்தறியப்பட முடியும். சில வேளைகளில் ஒரே மொழிக்குள்ளேயே குறித்த ASCII இலக்கத்துக்கு வேறு எழுத்தை தரக்கூடிய வகையிலும் சில எழுத்துருக்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன.

சரி நாம் Bamini என்ற எழுத்துருவில் தட்டச்சு செய்த சொல்லை அதே எழுத்துரு கொண்டுதான் வாசித்தறிய முடிகிறது என மேலே கண்டோம். அப்படியாயின் வாசித்தறியப்படவேண்டிய கணினியிலும் குறித்த எழுத்துரு இருப்பது அவசியமாகிறது. சாதாரணமாக ஒவ்வொரு கணினியிலும் பிரதானமாக (By Default) ஒரே ஒரு எழுத்துருவே பாவனையில் இருக்கும். மற்றயவை தேவைக்கேற்ப தெரிவு செய்யப்பட வேண்டும்.

குறித்த மொழியிலமைந்த கோப்பை திறக்கும் போது பிரதானமாக உபயோகத்தில் உள்ள மொழி அதே மொழியில் இருந்தால்தான் ஆவணத்தை வாசித்தறிய முடியும். இல்லையெனில் அதனை ரைப் செய்யப்பட்ட மொழி எழுத்துருவிற்கு மாற்ற வேண்டிய தேவை எழும். அவ்வாறு மாற்றப்படும் போதுகூட அவதானம் அவசியமாகின்றது. காரணம் ஆவணத்தில் பல்வேறு மொழிகள் கலந்து ரைப் செய்யப்பட்டிருப்பின் குறித்த பகுதிகளை கண்டுபிடித்து அந்தந்தப் பகுதிகளை கண்டுபிடித்து உரிய மொழி எழுத்துருக்களுக்கு மாற்றப்பட வேண்டி இருக்கும்.




**Unicode** குறிமுறை எழுத்துரு

இந்த யுனிகோட் எழுத்துரு சம்பந்தமான பொதுவான முடிவுகள் யாவும் யுனிக்கோட் அமைப்பினால் மேற்கொள்ளப் படுகிறது (UNICODE.ORG). இவர்களால் ஒவ்வொரு ASCII இலக்கமும் குறித்த எழுத்துக்கு என வரையறுக்கப் படுகின்றன. இதன் மூலம் ஒவ்வொரு மொழியில் உள்ள குறித்த எழுத்துக்களுக்கென இலக்கங்கள் ஒதுக்கப் படுகின்றன. அந்த இலக்கம் பிறிதொரு மொழியின் ஒரு எழுத்துக்கு உபயோகிக்க முடியாது. உதாரணமாக 65 என்ற இலக்கம் 'A' என்ற எழுத்துக்கு என ஒதுக்கப் பட்டிருக்கின்றது. அதனை உள்ளிட்டால் வெளியீடாக 'A' என்ற எழுத்தே வரக்கூடியதாக யுனிக்கோட் எழுத்துருக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன, அமைக்கப்படவேண்டும் அவ்வாறு இல்லையெனில் அது யுனிக்கோட் எழுத்துரு அல்ல. தமிழ் எழுத்துக்களுக்கு என தற்போது குறித்த ASCII இலக்கங்கள் இந்த அமைப்பினால் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. 2946 - 3071 வரையானவை தமிழ்மொழிக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்றன

ஒவ்வொரு எழுத்துக்கும் எண்கள் வழங்கியாகிவிட்டது ஆனால் சாதாரண நிலையில் சுமார் 105 விசைகளை கொண்ட விசைப்பலகையில் உலகில் உள்ள அனைத்து எழுத்துக்களுக்கும் இடம் வழங்கமுடியாதல்லவா?. நமது வல்லுனர்கள் சளைத்தவர்களல்லர். தீர்வை வழங்கி விட்டார்கள் ஒவ்வொரு மொழிக்கும் என தனித்தனி விசைப் பலகை மென்பொருள்களை இயங்குதளத்தில் இணைத்து விட்டார்கள். அந்த வகையில் தமிழுக்கும் இணைத்து விட்டார்கள். இங்குதான் பிரச்சனை கிளம்பிவிட்டது.

தமிழில் யுனிக்கோட் குறிமுறை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ | ஆ | இ | ஈ | உ | ஊ |
| எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ |
| க | ங | ச | ஞ | ட | ண |
| த | ந | ப | ம | ய | ர |
| ல | வ | ழ | ள | ற | ன |
| ஜ | ஸ | ஷ | ஹ | க்ஷ | ஸ்ரீ |

நாம் ஒவ்வொரு வரும் வெவ்வேறு தமிழ் விசைப் பலகை முறை களுடன் கட்சி பிரிந்து நிற்கிறோம். ஒருவர் தமிழ் 99 இன்னொருவர் முத்தையா விசைப் பலகை, ரெங்கநாதன் முறை, மாற்றிய ரெங்கநாதன் முறை என இந்த முறைகள் நீண்டிருக்கின்றன. இந்நிலையிலதான் யார் எந்த முறையில் தட்டச்சு செய்தாலும் விரும்பிய எழுத்து யுனிக்கோட் குறிமுறையில் உள்ளிடப்படவேண்டும் என்ற நோக்கில் பல மென்பொருள்களும் மாற்றிகளும் இந்த கட்சிகளாலேயே உருவாக்கப் பட்டன. தமிழில் அ வரவேண்டும் என்று அடித்தால் அ வர வேண்டும் இங்கு எழுத்துக்கான இலக்கம் ஒன்று ஆனால் விசைப்பலகையில் அந்த இலக்கத்தினை அடிக்கும் இடம் தான் மாறிநிற்கிறது.

தமிழில் தட்டச்சு செய்ய

கீழே சில விசைப்பலகை மென்பொருட்கள் தரப்பட்டிருக்கின்றன அவற்றை பயன்படுத்தி யுனிக்கோட் குறிமுறையில் தட்டச்சுசெய்யலாம். இம்மென்பொருள்கள் கணினியில் நிறுவப்பட்டதும் விசைப்பலகை தமிழ் மொழிக்குரிய யுனிக்கோட் இலக்கங்களுக்கு மாற்றப்பட்டுவிடும் பின் நாம் விரும்பிய விசைப்பலகை முறையினை மாற்றி தட்டச்சு செய்யலாம் இடையில் ஆங்கிலம் வேண்டுமா? உடனே மீண் டும் ஆங்கிலத்துக்கு விசைபலகையினை மாற்றி விட்டு தட்டச்சுசெய்யலாம்.

இப்போது மகிழ்ச்சிதானே? இருந்தாலும் எல்லா மென் பொருள்களும் இன்னும் தமிழ் யுனிக்கோட் எழுத்துருக் களுக்கு ஒத்திசையவில்லை. இணையப்பக்கங்களும் மைக்ரோசொப்ட் நிறுவன தயாரிப்புக்களும் திறவூற்று மூல மென்பொருட்கள் மட்டுமே ஒத்திசைகின்றன. நாம் ஒரே விசைப்பலகை முறைக்கு வராததன் காரணமாகவும் தற்போது தமிழ் எழுத்துக்கள் யுனிக்கோட்டில் இடம் பெற்றிருக்கும் முறையின் சில சிக்கல் தன்மைகளினாலும் வரைகலை மென்பொருட்கள் பல இதற்கு ஒத்திசையாது. இந்நிலையில் இழுபறிகள் தொடர்கின்றன குறிமுறை மாற்றிடுகள் பற்றி சிந்திக்கப்படுகிறது. இவை தொடர்பில் வேறு ஒரு சந்தர்ப்பத்தில் போட்டுத்தாக்குவோம்!

இருப்பதைக்கொண்டு தமிழில் தற்போதைக்கு ஒரு விதி செய்வோம்!

தமிழ் யுனிக்கோட் விசைப்பலகை மென்பொருள்கள் சில

1. NHMWriter (http://software.nhm.in)
2. எ கலப்பை (E kalappai) - http://code.google.com /p/ekalappai/downloads/list
3. பன்மொழி வாயில் http://code.google.com/p/english-to-tamil-live-typewriter/
4. இலங்கை அரசு விசைப்பலகை: www.LocalLanguages.lk

மேலுள்ள மென்பொருட்களில் ஏதேனும் ஒன்றினை பதிவிறக்கம் செய்து உங்கள் கணினியில் நிறுவி யுனிக்கோட் தமிழில் தட்டச்சிடலாம்

முறை 1 விளக்கம்: **[NHM Writer]**
http://software.nhm.in/products/writer

மென்பொருளை பதிவிறக்கம் செய்து உங்கள் கணினியில் நிறுவியபின்னர் விசைப்பலகையில் ALT+0 அல்லது ALT+2 அல்லது ALT+4 அல்லது விசைகளை ஒருங்கே அழுத்துவதன்மூலம் முறையே ஆங்கில, தங்கிலிஸ், தமிழ் விசைப் பலகைகளினை மாற்றிக்கொள்ளலாம். "ர்" அடிப்பதற்கு ர் இனை பயன் படுத்தவும் ர் இனை பயன்படுத்த வேண்டாம். Alt+2 இனை அழுத்தியபின் Romanaized (தங்கி லிஸ்) முறையில் தட்டச்சிடலாம். தங்கிலிஸ் இல் பூ அடிக்க puu இனையும் தூ அடிக்க thuu இனையும் பயன்படுத்தலாம்

NHM WRITER

முறை 2 விளக்கம்: **[E-Kalappai]**

http://ekalappai.googlecode.com/files/ekalappai-3.0-installer.exe

மென்பொருளை பதிவிறக்கம் செய்து உங்கள் கணினியில் நிறுவியபின்னர் விசைப்பலகையில் F2 விசையினை இழுத்துவதன் மூலம் அல்லது TaskBak இல் உள்ள மென்பொருளின் அடையாளப்படத்தில் வலது கிளிக் செய்வதன் மூலமோ விரும்பிய விசைப்பலகையினை மாற்றிக்கொள்ளலாம். இது மிக இலகுவான ஒரு விசைப் பலகை திறவூற்று மென்பொருள் ஆகும். இதனை தமிழா குழுமம் வெளியிட்டிருக்கிறது. ஆரம்பகாலத்தில் விசைப் பலகை தமிழ் மென்பொருட்களில் இது மிகவும் பிரபல மாகியிருந்தது இடையில் மேம்பாடுகள் இன்றி இருந்தது தற்போது புதிய வடிவம் பெற்று வெளியிடப்பட்டிருக்கிறது. இம்மென்பொருளை Pen Drive களில் கூட நிறுவி வைத்திருக்கலாம்.

முறை 3 விளக்கம்: **[Online Key Boad]**

http://code.google.com/p/english-to-tamil-live-typewriter/

இது கணினியில் நிறுவிப்பயன்படுத்துவதல்ல குறித்த இணையப்பக்கத்தில் வைத்தே தட்டச்சு செய்யக்கூடியது. தட்டச்சு செய்யப்பட்டவற்றை விரும்பிய இடத்துக்கு பிரதி செய்யலாம்.இவ்வாறான ஒன்லைன் விசைப்பலகைகள் நிறைய உலா வருகின்றன. இவற்றில் ஒன்றையே இங்கு குறிப்பிட்டோம். இவ்வகையானவற்றில் தமிழ்99 விசைப்பலகை மற்றும் தங்லிஸ் விசைப்பலகை முறையே கூடுதலாக காணப்படுகிறது.

முறை 4 விளக்கம் : தமிழ் சிங்கள விசைப்பலகை

கீழ்வரும் இணைப்பில் உள்ள மென்பொருளை பதிவிறக்கம் செய்து உங்கள் கணினியில் நிறுவியபின்னர் விசைப்பலகையில் ALT+Shift விசைகளை ஒருங்கே அழுத்துவதன்மூலம் தமிழ் ஆங்கில விசைப்பலகைகளினை மாற்றிக்கொள்ளலாம்.

1. தமிழ் சிங்கள விசைப்பலகை மென்பொருள் (Windows xp)

http://www.siyabas.lk/files/SinhalaTamilKit_XP.exe

2. தமிழ் சிங்கள விசைப்பலகை மென்பொருள் (Windows Vista)

http://www.siyabas.lk/files/SinhalaTamilKit_XP.exe

உரியதை பதிவிறக்கம்(Download) செய்து கணினியில் நிறுவுங்கள் .சிங்கள தமிழ் விசைப்பலகை மென்பொருள் இனை நிறுவியிருப்பின் தமிழில் தட்டச்சிட கணினியின் Task Bar இன் வலதுபக்க மூலையில் "அ (Ta)" இனை தெரிவுசெய்து தட்டச்சிடலாம். ஆங்கிலம் மாற்ற 'A(EN)' இனை தெரிவுசெய்ய வேண்டும்.

வழமையான பாமினி தட்டச்சிடல் முறையில் கு, து போன்ற உகர தூ போன்ற ஊகார எழுத்துக்களுக்கு குறித்த எழுத்தினை அடித்தபின் '{' இனை அடிக்க வேண்டும். "ர" அடிப்பதற்கு ர் இனை பயன்படுத்தவும் ா இனை பயன்படுத்த வேண்டாம். தமிழ் ஆங்கில விசைப்பலகை மாற்றத்திற்கு Alt+Shift இனை பயன்படுத்தவும்.

சாதாரண எழுத்துருவில் ஏற்கனவே தட்டச்சிடப் பட்டிருப்பின்

இதைவிடவும் சாதாரணமாக பாமினி போன்ற எழுத்துருவில் தட்டச்சிட்ட விடயங்களை யுனிக்கோட் குறிமுறை எழுத்துரு முறைக்கு மாற்றும் இணையவழி மாற்றிகள் கீழே தரப்படுகின்றன

1.கொழும்பு பல்கலைக்கழகத்தினுடையது Realtime Converter

http://www.ucsc.cmb.ac.lk/ltrl/services/feconverter/?maps=t_b-u.xml

2.Google transilater

http://www.google.co.in/transliterate/indic/Tamil


3.சுரதா

http://www.suratha.com/reader.htm


4.NHM மாற்றி

http://software.nhm.in/services/converter

- வெப்தமிழன் -



# அன்றும்! இன்றும்! என்றும்!



இணையத்தளங்களினைப் பதிவு செய்யவும்...

சேவர்களைக் கொள்வனவு செய்யவும்...

கவர்ச்சிகரமான இணைய வடிவமைப்புக்களுக்கும்..

மென்பொருட்கள் வடிவமைப்புக்கும்...

இணைய விளம்பர சேவைகளுக்கும்....

மற்றும்

நெற்வேர்க்கிங் வேலைகளுக்கும்...

## SPEED IT NET

"The Quick way to Online" www.speeditnet.com

72/28 Panikkar Lane Palaly Road,Thirunelvely Jaffna. Telephone: 0214 591871 / 021 222 8358 / 0777 563213

---

Service & Repairing On Call Service Contact Us 0212229644

## PC SOLUTIONS
TECHNOLOGIES (PVT) LTD

305, Kasthuriyar Road, Jaffna. Tel :- 021 222 1101

M.M.V Road,Nelliaddy Road, Tel :- 021 2264999

Available Multi HighSpeed Dongle

SAVE MONEY!!! SAVE MONEY!!! SAVE MONEY!!! SAVE MONEY!!! SAVE MONEY!!!

**Great & low Price Package**

3 Year's Warranty

- Intel Dual Core 2.7Ghz
- Intel Chipset Mother Board
- 250GB Harddisk
- Kington 1GB Ram
- DVD Writer,Atx Casing
- 15' LCD Monitor
- 650VA UPS,Keyboard
- Mouse, Speaker

ONLY Rs47500/=

**Great Package Deal Low Price**

3 Year's Warranty

- Intel Dual Core 2.7Ghz
- Intel Mother Board
- 320GB Harddisk
- Kington 1GB Ram
- DVD Writer,Atx Casing
- 19' LCD LG Monitor
- 650VA UPS,Keyboard
- Mouse, Speaker

ONLY Rs53500/=

**Ultimate Media & Gaming Package**

3 Year's Warranty

- Intel Core 2 Duo 2.93Ghz
- Intel Mother Board
- 500GB Harddisk
- Kington 2GB Ram
- DVD Writer,Atx Casing
- 19' LCD Samsung Monitor
- 650VA UPS,Keyboard
- Mouse, Speaker

ONLY Rs66500/=



Computer Problems? Have Virus? Or Computer Just Running Slow? Spyware Trouble?

**Any Computer Repair Contact Us Pc Solutions**

A+Service Departmet Open 6 Days A Week
Virus & Spyware Removel Upgrades
Repairs Cleanining & Service
Maintenance , Networking

Available Unbelievable Price

| | |
|---|---|
| Web cameras | Printers |
| Dongles | LCD Monitors |
| Pendrives | Mother Boards |
| Headphones | Memory |
| Ribbons | Harddisks |
| Woofers | DVD Writers |
| TV Cards | Casings |


**Visit our Showrooms at Jaffna &Nelliady, Kilinochchi Branch**

3.5 Mbps High Speed Dialog Broadband Internet Only Rs 690/= Per Month

**Also Dialog Broadband Available**

| Package | Month Rent |
|---|---|
| 2GB | Rs690/= |
| 4GB | Rs499/= |
| 7GB | Rs1490/= |
| 15GB | Rs2990/= |


Contact Us Pc Solutions





# ADOBE PHOTOSHOP CS4

எஸ்.பிரதீப்


கணினி வரைகலைத்துறையில் இன்றியமையாத இடத்தைப் பிடித்துக்கொண்டுள்ள ஒரு மென்பொருள் Adobe Photoshop. இந்த மென்பொருளின் அடிப்படைக் கட்டமைப்பு 1987இல் Thomas Knoll, John என்ற இரு சகோதர மென்பொருள் வல்லுநர்களால் உருவாக்கப்பட்டது. அதன் பின்னர் பத்துக்கும் அதிகமான பதிப்பு மாற்றங்களைக் கண்டு இன்று Adobe Photoshop CS4ஆக அதிநவீன வடிவத்தை இது எடுத்துள்ளது. Adobe Photoshop CS4 மென்பொருளைக் கொண்டு நம்மால் செய்யக்கூடிய வடிவமைப்பு நுட்பங்களை இந்தத்தொடரில் பார்க்கலாம்.



Adobe Photoshop CS4யின் முக்கிய சிறப்பம்சமாக தாராளமான பணியாற்று பிரதேச அமைப்பையும், எமக்குத் தேவையான விதத்தில் அந்த அமைப்பை இலகுவாக மாற்றிக்கொள்ளக்கூடிய விதத்தினையும் குறிப்பிடலாம்.




உதாரணமாக, Tools அத்தனையையும் கொண்டிருக்கும் Tools Palette வழமையாக இடம் வலமாக இரண்டு வரிசைகளில் Toolகள் அடுக்கப்பட்டுக் காணப்படும். CS4யில் Tools Paletteஇன் மேல் இடது மூலையில் காணப்படும் இரட்டை அம்புக்குறியை அழுத்துவதன்மூலம் நீங்கள் அதனை ஒரே வரிசையைமட்டும் கொண்டதாக மாற்றியமைத்துக் கொள்ளமுடியும்.



## இல்லாமற்செய்யும் மாயம்

புகைப்படம் ஒன்றிலிருந்து ஒரு நபரையோ, குறித்த பகுதியையோ நீக்குவதற்கு நீங்கள் விரும்பலாம். அவ்வாறு நீக்குவதற்கு பலவகையான உத்திகள் Adobe Photoshop CS4 இல் உள்ளன. ஆயினும், Cloning உத்தியைப் பயன்படுத்தாமல் அந்த வேலையைச் செய்வீர்களாயின், அது நீங்கள் எதிர்பார்க்கும் வெளியீட்டைத் தராது. மாறாக, குறித்த புகைப்படத்தில் வெற்றிடமொன்றையோ, அல்லது பொருத்தமில்லாத காட்சியமைப்பு ஒன்றையோ அது ஏற்படுத்தக்கூடும்.

புகைப்படமொன்றிலிருந்து குறித்த ஓர் உருவத்தை அழகுற நீக்குவது தொடர்பான வழிமுறைகள் அடுத்து உங்களுக்காக வரவிருக்கின்றன.




மேலேயுள்ள புகைப்படத்தில் சிறுவன் ஒருவனும் பெரிய மனிதன் ஒருவனும் இருப்பதை நீங்கள் காணலாம். இந்தப் புகைப்படத்திலிருந்து சிறுவனுடைய உருவத்தை நாங்கள் நீக்கப்போகிறோம்.


Lasso Toolஐக் கொண்டு மேலேயுள்ள படத்தில் காட்டப்பட்டுள்ளதுபோன்று சிறுவனுடைய உருவத்தையும் அவனுக்குக் கீழேயுள்ள பிரதேசத்தையும் Select செய்துகொள்ளுங்கள்.

Select செய்யப்பட்ட பகுதியைச் சுற்றி மெல்லிய புள்ளிக்கோடு ஒன்று அசைவுறும் வண்ணம் தென்படுவதை நீங்கள் அவதானிக்கலாம்.


அடுத்து, Lasso Tool தெரிவுசெய்யப்பட்ட நிலையிலேயே சிறுவனைச் சுற்றி நீங்கள் Select செய்துள்ள பிரதேசத்தின் உட்புறமாக மௌஸ் பொயின்டரால் கிளிக் செய்தபடி (Left Click) Shift Keyயை அழுத்துங்கள். முதலில் மௌஸ் பொயின்டரால் கிளிக் செய்துகொண்டபின்னர்தான் அப்படியே Shift keyயையும் அழுத்தவேண்டும் என்பதைக் கவனத்தில் வைத்துக்கொள்ளுங்கள்.

அதே நிலையில் இருக்கும் வேளையில் மௌஸ் பொயின்டரால் நீங்கள் Select செய்துள்ள பகுதியை வலதுபுறமாக

நகர்த்துங்கள் (Shift keyயையும் அழுத்திக்கொண்டிருக்கவேண்டும்).





இவ்வாறு நகர்த்தியபின்னர் மேலேயுள்ள படத்திலிருப்பது போன்று நீங்கள் தெரிவுசெய்த பகுதி காணப்படும். இப்போது புகைப்படத்தில் Selectசெய்யப்பட்ட பகுதியை சிறுவன் இருக்கும் இடத்துக்குமேல் பொருத்திவிட்டால், புகைப்படத்திலிருந்து சிறுவன் மறைந்துவிடுவான். அவன் நீக்கப்பட்டதற்கான அடையாளங்களும் தென்படாது.





குறித்த பகுதி தெரிவுசெய்யப்பட்டிருக்கும் நிலையிலேயே Move Toolஐ கிளிக் செய்யுங்கள். அடுத்து Select செய்யப்பட்டுள்ள பகுதிக்குள் மவுஸ் பொயின்டரால் கிளிக் செய்யுங்கள். அவ்வாறு கிளிக் செய்தவண்ணம் Alt keyஐயும், Shift keyஐயும் அழுத்துங்கள்.


அதே நிலையிலேயே மௌஸ் பொயின்டரால் இடது பக்கமாக நீங்கள் தெரிவுசெய்திருக்கும் பகுதியை நகர்த்துங்கள். அவ்வாறு நகர்த்தும்போது நீங்கள் Select செய்த பகுதியின் Copy ஒன்று உங்கள் மௌஸ் பொயின்டருடன் நகர்ந்து வருவதை அவதானிப்பீர்கள். அந்தப் பகுதியை அவதானமாக சிறுவன் நிற்கும் பிரதேசத்தின் மீது பொருத்துங்கள். சரிவரப் பொருந்தும்வரை keyகளையும் கிளிக் செய்துள்ள மௌஸ் பொத்தானையும் அதேநிலையில் வைத்திருங்கள்.




இனி Select menuவிலுள்ள Dselect (Ctrl+D) என்பதை கிளிக் செய்து தெரிவுசெய்துள்ள பகுதியை விடுவியுங்கள்.



இவ்வாறு பொருத்திய பின்னர், ஆங்காங்கே கொஞ்சம் திருத்தங்கள் செய்யவேண்டியுள்ளதென்று நீங்கள் நினைக்கக்கூடும். Clone Stamp Toolஐ நீங்கள் பயன்படுத்தலாம். இது, புகைப்படத்தின் ஓரிடத்திலுள்ள விடயங்களை இன்னுமோரிடத்திலும் பிரதிபண்ணப் பயன்படும்.




Clone Stamp Toolஐ கிளிக் செய்த பின்னர், Alt keyஐ அழுத்தியவாறு எந்தப் பிரதேசத்திலிருந்து copy செய்யப்போகிறீர்களோ அந்தஇடத்தில் கிளிக் செய்யுங்கள். இனி, எந்த இடத்தில் அதனை Paste செய்யப் போகிறீர்களோ அங்கே கிளிக் செய்யுங்கள்.


வரைதாளில் நீர்வர்ணத்தைத் தொட்டுத் தொட்டுப் பூசுவது போல் நீங்கள் Clone Stamp Tool மூலமாக ஓரிடத்திலுள்ள அமைப்பை இன்னுமோரிடத்துக்கு பிரதிசெய்யலாம்.



இங்கே Clone Stamp Toolஇன் அவசியம் ஏற்படாததால் நான் அதனைப் பயன்படுத்தவில்லை.


இப்போது இந்தப் புகைப்படத்தில் சிறுவன் காணாமல் போய்விட்டான். இந்தப் புகைப்படத்தை நீங்கள் யாரிடமாவது காட்டி இந்த இடத்தில் முன்னர் சிறுவன் ஒருவன் இருந்தான் என்று கூறிப்பாருங்கள்; உங்களை வித்தியாசமாகப் பார்ப்பார்கள்!

*அடுத்த இதழில் Adobe Photoshop CS4மென்பொருளின் இன்னும் பல பயன்பாடுகள்!*






# Windows இன் பாஸ்வேர்ட்டை உடைக்கலாம்





விண்டோஸ் எக்ஸ்பி (Windows xp Operating System) இயங்கு தளத்தில் பயனர் கணக்கை (user account) உருவாக்கி அதனை எவரும் அணுகா வண்ணம் பாஸ்வேர்ட் மூலம் பாதுகாப்பளிக்கவும் முடியும் என்பது நீங்கள் அறிந்த விடயம்.

அவ்வாறு நீங்கள் உருவாக்கும் பயனர் கணக்குக்குரிய பாஸ்வேர்ட் ஒருவேளை மறந்து போனால்?

பாஸ்வேர்ட்டை வைத்திருப்பவருடன் தொடர்பில்லாத நிலையில் அவசரமாக கணினியை இயக்க வேண்டியதொரு நிலை ஏற்பட்டால்?

அல்லது வேண்டுமென்றே ஒருவர் உங்களுடைய கணினியின் பாஸ்வோட்டைக் களவாடி, அதனை மாற்றி உங்களுக்கு சவாலாக அமைந்து விட்டால்? என்ன செய்வது?

வழக்கமாக பாஸ்வேர்ட் தேவை ஏற்படும் போது, விசைப் பலகையில் ctrl + alt + del விசைகளை ஒரே நேரத்தில் அழுத்தி அருகில் காட்டப்பட்டுள்ள Logon Screen ஐப்




பெற்று அதில் விண்டோஸில் நியமமாக (default) உருவாக்கப்படும் அட்மினிஸ்ட்ரேட்டர் (administrator) கணக்கு மூலம் லாக் ஒன் (Logon) செய்து உள்ளே நுழைந்து பயனர் கணக்குக்குப் பிறிதொரு புதிய பாஸ்வேர்ட்டை கொடுத்தோ அல்லது பாஸ்வோட்டை செயலிழக்க (Disable) செய்தோ கணினியில் பயனர் கணக்கை மீளப்புதிப்பிக்கலாம்.


ஆனால், Widows ஐ முதன் முதலில் இன்ஸ்டோல் செய்யும்போது, அட்மினிஸ்ட்ரேட்டர் கணக்குக்கும் பாஸ்வேர்ட் கொடுக்கப்பட்டிருந்தால் அல்லது அந்த அட்மினிஸ்ட்ரேட்டர் கணக் குக்குரிய பாஸ்வேர்டும் மறந்து போனால் என்ன செய்வது?

அதற்கும் இருக்கிறது ஒரு தீர்வு. இந்த வழிமுறை கொஞ்சம் சிக்கலானது. ஆனாலும் விண்டோஸைப் புதிதாக நிறுவும் (Windows Installation) வழிமுறைகள் தெரிந்தவர்களுக்கு இது இலகுவானதொரு விடயம்.

முதலில் கணினியை இயக்கி சிடியிலிருந்து பூட் (Boot from CD / DVD ) ஆகுமாறு பயோஸ் (BIOS SETUP) செட்டப்பில் மாற்றி விடுங்கள். விண்டோஸ் எக்ஸ்பீ சிடியை ட்ரைவில் வைத்துக் கொண்டு கணினியை மறுபடி இயக்க ஆரம்பிக்கும்போது Press any key to boot from CD எனும் செய்தி திரையில் தோன்றும். அப்போது கீ போர்ட்டில் ஏதாவதொரு விசையை அழுத்த சிடியிலிருந்து கணினி பூட் ஆக ஆரம்பிக்கும். இது விண்டோஸை நிறுவும் செயற்பாட்டில் முதற்படியாகும்.


இந்த செயற்பாட்டில் கணினியைப் பரிசோதித்து பைல்கள் லோட் செய்யப்பட்டதும் Licensing Agreement திரை தோன்றும். அப்போது F8 விசையை அழுத்தியதும் வரும் திரையில் புதிதாக விண்டோஸை நிறுவுவதா அல்லது ஏற்கனவே நிறுவப்பட்டுள்ளதை சரி செய்வதா (Repair) என வினவும். அப்போது கீபோர்டில் R கீயை அழுத்தி ஏற்கனவே நிறுவப்பட்டுள்ள விண்டோஸை சீர்செய்வதற்கான விருப்பை தெரிவுசெய்யவும்.

அடுத்து கணினி மறுபடி இயங்க ஆரம்பித்து (restart) ஒரு சில நிமிடங்களில் திரையின் இடது புறத்தில் Installing Devices எனும் செயற்பாடு நடைபெறக் காணலாம். இந்த இடத்தில்தான் நீங்கள் உடனடியாகச் செயற்பட வேண்டியுள்ளது. இங்கு கீபோர்டில் SHIFT + F10 விசைகளை ஒரே நேரத்தில் அழுத்துங்கள். அப்போது திரையில் கமாண்ட் (Command Prompt) விண்டோ தோன்றும்.




கமாண்ட் ப்ரொம்டில் NUSRMGR.CPL என ரைப் செய்து எண்டர் கீயை அழுத்த கண்ட்ரோல் பேனலிலுள்ள User Accounts விண்டோ திரையில் தோன்றும். இங்கு நீங்கள் விரும்பும் பயனர் கணக்குக்குரிய பாஸ்வர்டை மாற்றவோ நீக்கவோ முடியும்.,

ஒரு யூசர் கணக்கில் நுளையும்போது அதாவது லொக்-ஒன் செய்யும் போது பாஸ்வேர்டை வினவாமல் செய்ய அதே கமாண்ட் ப்ரொம்டில் control userpasswords என ரைப் செய்து எண்டர் கீயை அழுத்துங்கள். அங்கு அட்மினிஸ்ட்





செய்து கணக்குக்குரிய பாஸ்வர்டை மாற்றவோ அல்லது நீக்கவோ முடியும் (Reset password) ரீசெட் பாஸ்வேர்ட் பட்டனில் க்ளிக் செய்து மாற்றிக்கொள்ளலாம்.

மாற்றங்கள் செய்த பின்னர் அந்த டயலொக் பொக்ஸை மூடிவிட்டு விண்டோஸ் ரிபெயாரிங் செயற்பாடு பூர்த்தியாகும் வரை அதனைத் தொடரவேண்டும்.

# குழந்தைகளுக்கு...

cartoon படங்களை எளிதாக தரவிரக்க உதவும் பயனுள்ள தளம். கார்ட்டூன் குழந்தைகளுக்கு மட்டுமல்ல அனைத்து வயதினருக்கும் தான் என்று சொல்லும் அளவிற்கு ஒவ்வொருவரும் தாங்கள் கையால் வரைந்த மற்றும் கணினி துணையுடன் வரைந்த பல கார்ட்டூன்-களை எளிதாக தரவிரக்கலாம்.





எப்போதும் உங்கள் குழந்தை கையில் பேப்பர் வைத்து ஏதாவது கிறுக்கி கொண்டு இருக்கிறது என்றால் உங்களுக்கு இந்தத்தளம் பயனுள்ளதாக இருக்கும்.எப்படி எல்லாம் குழந்தைகள் கார்ட்டூன் சித்திரம் வரைந்து ஒன்லைன் மூலம் அதை அனைத்து மக்களிடமும் எளிதாக கொண்டு சேர்க்கவும் அதை யார் வேண்டுமானாலும் தரவிறக்கவும் நமக்கு உதவுவதற்காக ஒரு தளம் உள்ளது.

இணையதள முகவரி : http://www.scribbls.com

# மைக்ரோசாப்ட் வழங்கும் இலவச மென்பொருள்: Microsoft Mathematics 4.0

கணிதம், பௌதீகவியல் சார்ந்த பிரச்சினைகளை தீர்ப்பதற்கு லினக்ஸ் ,இயங்குதளத்திற்கு ஏராளமான ,இலவச மென்பொருட்கள் உள்ளன. அதற்கு நிகராக தற்போது மைக்ரோசாப்ட் நிறுவனமும் தனது Mathematics 4.0 என்னும் மென்பொருளை ,இலவசமாக வழங்குகிறது. 2D,3D, கணித சமன்பாடுகள், பௌதீகவிய சமன்பாடுகளை மிக எளியமுறையில் தீர்ப்பதற்கு ,இதைப் பயன்படுத்தலாம்.




பாடசாலை மாணவர்கள் முதல் பல்கலை மாணவர்கள் வரை தங்கள் பாடத்தை Microsoft Mathematics 4.0 மூலம் செய்யலாம் என்பதும் ,இதன் சிறப்பு . புதியவர்கள் தங்கள் கணித, பௌதீகவியல் அறிவை விருத்தி செய்வதற்கும் ,இதைப் பயன்படுத்தலாம். Algebra முதல்

Trigonometry வரை ஏராளமான அம்சங்கள் ,இதில் உள்ளன. Microsoft Word மற்றும் OneNote ற்றுக்கான நீட்சியாகவும் (Add-on) ஆகவும் இ,ந்த மென்பொருளைப் பயன்படுத்தலாம்

http://www.microsoft.com/downloads/en/details.aspx?FamilyID=9caca722-5235-401c-8d3f-9e242b794c3a




# REFOG ஒரு இரகசிய உளவாளி


REFOG இது ஒரு மென்பொருள், உளவறிவதற்கென்றே உருவாக்கப்பட்டதொன்று.

பொதுவாக நிறுவனங்களில் பணிபுரிவோரை அவர்களது நிர்வாகத்தினர் கண்காணிப்பதற்கென்றே ஆரம்பத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட இம் மென்பொருள் தற்போது தனிநபர் கணனிகளிலும் பயன்படுத்தப்படுகிறது.


வெளியிடங்களில் தமது மின்னஞ்சல் மற்றும் கடவுச் சொல்லை (Password)ப் பயன்படுத்துவோர் இது விடயத்தில் மிகவும் கவனமாயிருக்க வேண்டும்.


இணைய உலவு நிலையங்கள் (Browsing Centres), அலுவலகங்கள், பாடசாலைகள் மற்றும் பொது இடங்களில் உள்ள கணினிகளில் தமது மின்னஞ்சல், கடனட்டை, மின் வணிக செயற்பாடுகளை மேற்கொள்வோரது Password, Credit Card CVC Number போன்றன இம் மென் பொருளைப்பயன்படுத்தி இலகுவாகக் களவாடப்படுகின்றன.


உங்களுடைய தனிப்பட்ட கணினியில் கூட இது யாராவது ஒருவரால் உங்களுக்குத் தெரியாமலே நிறுவப்பட்டு, உங்களை அறியா வண்ணம் உங்களுடைய தகவல்கள் களவாடப்படலாம். இம் மென்பொருளை நிறுவிய ஒருவர் உங்கள் கணினியில் வந்திருந்து தான் தகவல்களைக் களவாட வேண்டும் என்றில்லை. நிறுவியபின் ஒருவர் கொடுக்கும் கட்டளைக்கேற்ப அவர் இருக்கும் இடத்துக்கு - அவரது





மின்னஞ்சலுக்கு உங்களுடைய இரகசிய விவரங்களைத் தேவையான கோப்பு வடிவத்தில் படமாகவோ (Screen shot), எழுத்துரு கோப்பாகவோ (Text : Notepad File) அன்றில் முழு மின் புத்தக (Pdf : ebook) வடிவிலோ குறிப் பிட்ட கால இடைவெளியில் அனுப்பிக்கொண்டிருக்கும் வசதியை இம்மென்பொருள் கொண்டுள்ளமை இதன் முக்கிய மானதொரு சிறப்பம்சமாகும்.




அதன்பின் உங்கள் மின்னஞ்சல், கடனட்டை மற்றும் வங்கிக் கணக்குகள் பற்றிய இரகசியவிபரங்கள் கையகப்




படுத்தப்படுவதோடு தவறாகவும் பயன்படுத்தப்படலாம்.


இதனைத் தடுப்பதற்கான வழிமுறைகளைப் பற்றிச் சிந்திப்பதற்கு முன், இதனை எவ்வாறு இயக்கலாம் என்பதனைப் பார்ப்போம், இதன் மூலம் மற்றவர்கள் இம்மென்பொருளை நமது கணினியில் நிறுவி, எமது கணினியைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவராமல் தடுக்க முடியும்.

ரீபோ.்.க் மென்பொருள் இணையத்தில் இலவசமாகக் கிடைக்கின்றது. எனினும் இது சில மட்டுப்படுத்தல்களைக் கொண்டதாகவே இருக்கும், இதன் முழுப்பயனையும் - செயற்பாடுகள் அனைத்தையும் பெறுவதற்கு பணம் செலுத்தி உரிமத்தைப் பெற்றோ அல்லது வேறு முறைகளைப் பயன்படுத்தியோ முழுப்பதிப்பாக (Full Version) செயற்படுத்துவது அவசியமாகும்.


Refog.exe என்ற நிறுவியை (Inataller) செயற்படுத்தும் போது பின்வரும் படங்களில் காட்டப்பட்டவாறு மென்பொருள் நிறுவப்படும்.


முதலில் மென்பொருள் நிறுவியின் வழிகாட்டல்களைப் பின்பற்றி Next என்பதனைக் கிளிக் செய்வதன் மூலம் நிறுவப்படும். மென்பொருள் நிறுவல் நிறைவுற்றதும், இம் மென்பொருள் எவ்வாறு இயங்க வேண்டும், என்னென்ன செயற்பாடுகளை மேற்கொள்ளவேண்டும் போன்ற விடயங்களை Configuration wizard மூலமாக வழங்க வேண்டும்

இந்த Configuration wizard மூலமாக கணினியில் நடக்கின்ற எந்தெந்த செயற்பாடுகளை, எந்தெந்த பயனர்களை (Users)க் கண்காணிக்க வேண்டும் என்பதனை Check Boxகளில் தெரிவுசெய்வதன் மூலம் செயற்படுத்திக் கொள்ளலாம்.




அத்துடன் இம் மென்பொருள் கணினியில் இயங்குவதனை முற்றாக மற்றவர்களுக்குத் தெரியாமல் இயக்குவதற்கான Option கள் காணப்படுகின்றன. Hide everywhere ஐ





Tick செய்வதன் மூலம் எந்த ஒரு பொதுவான வழிமுறையிலும் இம் மென் பொருளின் இயக்கத்தினைக் கண்டுபிடிக்க முடியாதபடி செயற்படுத்தலாம்.

நிறுவல் மற்றும் செயற்படுத்தல்கள் முடிவடைந்ததும், மென் பொருளை இயக்கும் போது அது ஒரு பரீட்சார்த்தப் பதிப்பாக (Trial Version) இருந்தால் அதனை முழுப்பதிப்புக்கு மாற்றம் செய்வதற்கான வேண்டுகோள் முன் வைக்கப்படும். முறையான விதத்தில் அல்லது மென்பொருள் திருட்டின் (Crack) கீழ் மென்பொருளைச் செயற்படுத்துவதற்கான உரிம விவரங்களை (License Keys) பெற்றிருந்தால் அதனை வழங்க வேண்டும். வெற்றிகரமாக மென்பொருள் பதிவு செய்யப்பட்டதும் மென்பொருளின் பிரதான சாளரம் (Refog Main Window) தோன்றும்.

அதன்பின் மென் பொருளை உங்களைத்தவிர வேறு எவரும் இயக்க முடியாதபடி, மென் பொருளைப் பயன்படுத்தித் தகவல்களை அறிய முடியாதபடி அதன் இயக்கத்தை உங்களுக்கு மட்டுமே உரியதாக கடவுச்சொல் ஒன்றை பயன்படுத்தி மட்டுப்படுத்தமுடியும்.




பிரதான Window வின் கீழ் புறத்திலுள்ள Settings என்ற பகுதியில் Password ஐத் தெரிவு செய்யும் போது மென்பொருளைக் கட்டுப் படுத்துவதற்கான கடவுச்சொல் என்னு என்பதனை வழங்க வேண்டும். சரியான முறையில் கடவுச் சொல் வழங்கப்பட்டால், ஒவ்வொரு முறையும் மென்பொருள் இயங்கத் தொடங்கும் போதும் கடவுச்சொல் பரிசோதிக்கப் பட்டு, சரியானதாயின் மட்டும் உள்ளே நுழைய அனுமதிக்கும்.

இம் மென்பொருள் நிறுவப்பட்டிருப்பதனை சாதாரணமான முறைகளின் மூலம் இயக்க முடியாது. ஏனெனில் அம் மென் பொருளுக்கான இயக்கக் கட்டளை Programme List இலோ அல்லது Start Menu விலோ பதியப்படுவதில்லை.

இதனை இயக்குவதற்கு Start Menu வில் Run என்பத னைத் தெரிவு செய்து runrefog vd Type செய்து இயக்கு வதன் மூலம் அல்லது Ctrl + Alt +Shift + K என்ற குறுக்கு விசையை (Shortcut Key) ஐப் பயன் படுத்துவதன் மூலம் இயக்கலாம்.

இம் மென்பொருள் C:\WINDOWS\system32\MPK என்ற இடத்திலேயே சேமிக்கப்படுகிறது. அத்துடன் இது Hidden ஆகவே சேமிப்பதனால், இலகுவாக இனங்காண முடியாது போகின்றது.

# பேஸ்புக்கை வேகமாகப் பயன்படுத்த குறுக்குவிசைகள்

நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே வரும் சமூக வலைத்தளங்களில் (Social Networking sites) பேஸ்புக் தான் முதலிடத்தில் உள்ளது. பல சமூக வலைத் தளங்களை பின்னுக்குத் தள்ளி முதலிடத்தைப் பிடித்துள்ளது. சிலர் காலையிலிருந்து இரவு வரை பேஸ்புக்கிலேயே தான் அரட்டையடிப்பதும் பொழுதுபோக்குவதுமாய் இருக்கின்றனர். பேஸ்புக்கை வேகமாகவும் சுலபமாகவும் பயன்படுத்த விசைப்பலகையின் குறுக்குவிசைகளைப் (Keyboard shortcuts) பயன்படுத்தலாம்.

கீழே உள்ள அட்டவணையில் Firefox,Chrome, Internet explorer,Safari போன்ற ஒவ்வொரு வலை உலவிக்கும் தனித்தனியே குறுக்கு விசைத் தொகுப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றைப் பயன்படுத்துவதன் மூலம் நமது நேரத்தையும் வேலையையும் மிச்சப்படுத்தலாம்.

| Function | Chrome/Opera/Safari | Firefox | Internet Explorer |
|---|---|---|---|
| Search | Alt+? | Alt+Shift+? | Alt+?+Enter |
| Compose New Message | Alt+M | Alt+Shift+M | Not Working |
| Goto Homepage | Alt+1 | Alt+Shift+1 | Alt+1+Enter |
| Go to Profile Page | Alt+2 | Alt+Shift+2 | Alt+2+Enter |
| Friend Requests | Alt+3 | Alt+Shift+3 | Alt+3+Enter |
| Open Messages | Alt+4 | Alt+Shift+4 | Alt+4+Enter |
| Notifications | Alt+5 | Alt+Shift+5 | Alt+5+Enter |
| My Account Page | Alt+6 | Alt+Shift+6 | Not Working |
| Choose Your Privacy Settings | Alt+7 | Alt+Shift+7 | Not Working |
| Facebook'sFacebook page | Alt+8 | Alt+Shift+8 | Alt+8+Enter |
| Facebook Terms & Conditions | Alt+9 | Alt+Shift+9 | Alt+9+Enter |
| Facebook Help Center | Alt+0 | Alt+Shift+0 | Alt+0+Enter |

# மின்வணிகம் [e-commerce]

ரூபன்
பகுதி 1

தகவல் தொழில்நுட்பம் எத்துறையிலும் இல்லாமலில்லை என்பதை நான் உங்களுக்கு சொல்லித் தெரியவேண்டியதில்லை. அந்தவகையில் வணிகத்துறையில் இன்று உலகளாவிய ரீதியில் தகவல் தொழில் நுட்பம் புகுந்து விளையாடிக் கொண்டிருக்கின்றது. இது தொடர்பில் உங்கள் கருத்துக்களும் ஆலோசனைகளும் வரவேற்கப் படுகின்றன இவை இக்கட்டுரைத்தொடர் சிறப்புற வழிவகுக்கும்.

அறிமுகம்

மின்வணிகம் பற்றி முழுமையான கண்ணோட்டத்தினை செலுத்தமுன்பாக , பாரம்பரிய வணிகம் பற்றி ஓரளவு தெளிவான பார்வை நம்மிடத்தில் ஏற்படுவது அவசியம். வணிகத்தினை விளங்கிக்கொண்டால் மின்வணிகத்தினை பற்றிய தெளிவு தானாக வரும்

பணத்திற்காக பொருட்களையும் சேவைகளினையும் பண்டமாற்றம் செய்துகொள்வது வணிகம் எனப்படும். வணிகம் எமது வாழ்கையில் மில்லியன் கணக்கிலாக வடிங்களில் அறியப்படுகிறது. வணிகத்தில் பங்கேற்கும் பாத்திரங்களாக/ தரப்பினராக 3 வகையினரை அடையாளப்படுத்தலாம்



1. *நுகர்வோர்/வாங்குவோர்(Buyers)*

இவர்கள் பணம் கொடுத்து பொருட்களையும் சேவைகளையும் கொள்வனவு செய்கிறார்கள்

2. *விற்பனையாளா(Sellers)*

இவர்கள் பணத்திற்காக பொருட்களையும் சேவைகளையும் விற்பனைசெய்கிறார்கள். அவர்களில் இருவகையினர் இருக்கின்றனர் ஒன்று சில்லறை விற்பனையாளர்கள் மற்றைய தரப்பினர் மொத்த விற்பனையாளர்கள். இவ்விரு தரப்பினரில் முதலாவது தரப்பினர் நுகர்வோருடன் நேரடியாக வணிகம் செய்கின்றனர்.

3. *உற்பத்தியாளா (Producer)*

இவர்கள் பொருட்களையும் சேவைகளையும் உருவாக்குபவர்களாக அல்லது உற்பத்திசெய்பவர்களாக இருக்கிறார்கள். பொதுவாக உற்பத்தியாளர்கள் விற்பனையாளர்களாகவும் தொழில்படுகிறார்கள். இதில் இரண்டுவகை விற்பனையாளர்களாவும் இவர்கள் தொழிற்பட வாய்ப்புண்டு

மின்வணிகம் (E-Commerce) என்றால் என்ன?

இணையம் உள்ளிட்ட கணினி வலைப்பின்னல்களினூடாக பொருட்களையும் சேவைகளையும் தகவல்களையும் வாங்குதல் விற்றல் பரிமாற்றல் பண்டமாற்றல் செய்யும் தொழிற்பாடு மின்வணிகம் எனப்படும்

மின்வர்த்தகம் (E-Business) என்றால் என்ன?

பரந்துபட்ட மின்வணிகம் மின்வர்த்தகமாகும். அதாவது வாங்குதல் விற்றல் நடவடிக்கைகளுடன் வாடிக்கையாளர் சேவை, பங்காளர் நிறுவனங்களுடனான நடவடிக்கைகள், நிறுவனத்துக்குள்ளான இலத்திரனியல் பயிற்சியை வழங்கல் இலத்திரனியல் பரிமாற்றங்களை செய்தல் போன்ற அனைத்து நடைவடிக்களும் மின் வர்த்தகம் என்ற எண்ணக்கருவில் அடங்கும்

மேலே விபரிக்கப்பட்ட மூன்று தரப்பட்டவர்களும் எந்த ஒரு மிண்வணிக நடவடிக்கையிலும் காணப்படுவர். இருந்தபோதிலும் மின்வணிகம் சற்று வித்தியாசமானது

ஒரு வெற்றிகரமான மிண்வணிகத்தினை மேற்கொள்ள பின்வரும் விடயங்கள் அவசியமானவையாகும்.

1. உற்பத்தி (Product) அது பொருளாகவோ சேவையாகவோ அன்றி ஒரு தகவலாகவோ இருக்கலாம்

2. இடம்- இங்கு அது ஒரு இணையத் தளமாக இருக்கும் அத்தளத்தில் சில வழிகளினூடாக குறித்த உற்பத்தி காட்சிப் படுத்தப்பட்டிருக்கும்

3. நுகர்வோரை குறித்த தளத்திற்கு வரவழைப்பதற்கான வழிகள்(பின்னர் விபரிக்கப்படும்)

4. நுகர்வோரின் கொள்வனவு விருப்பை (Order) பெறுவதற்கான ஏற்பாடு இது தளத்தில் ஒரு விண்ணப்ப படிவமாக (Form) இருக்கலாம்

5. பணத்தை பெறுவதற்கான/ஏற்றுக்கொள்வதற்கான வழி பொதுவாக வியாபார கணக்கு ஒன்றை வங்கியில் பேணுவதன்மூலமாக கடனட்டை(Credit Card) மூலமான பணத்தினை ஏற்றுக்கொள்வதற்கான ஏற்பாடு செய்யப்படலாம். இதற்கு பாதுகாப்பான கொள்வனவு விருப்பு ஏற்றலுக்கானதும் வங்கியுடன் தொடர்பு கொள்வதற்கான இணையப்பக்கம் அவசியம்

6. கப்பல் அல்லது விமானம் மூலமாக உற்பத்தியை அனுப்பி வைப்பதற்கான ஏற்பாடு. மென்பொருள் எனின் அதனை இணையத்தளத்தினூடாகவே பதிவிறக்கம் செய்வதற்கான ஏற்பாடு போன்ற நடவடிக்கையினை மேற்கொள்வதன் மூலம் குறித்த வணிக நடவடிக்கையினை பூரணப்படுத்தல்

7. உட்திரும்பல்களை ஏற்றுக்கொள்வதற்கான வழிவகைகளை ஏற்படுத்தியிருத்தல்

8. தேவைப்படின் வின்பனையின் பின்னரான உத்தரவாதத்தை கையாள்வதற்கான ஏற்பாடு அல்லது வழி

9. வாடிக்கையாளர் சேவையினை வழங்கும் வழிவகைகள்

**மின்வணிகம் பிரதானமாக நான்கு வகைப்படும் அவையாவன**

1)-நிறுவனம்-நுகர்வோர் Business to consumers (B2C)

2)நிறுவனம்-நிறுவனம் Business to business (B2B)

3)-நுகர்வோர்-நுகர்வோர் Consumer to consumer (C2C)

4)நிறுவனம்-ஊழியர் Business to employee (B2E)

இதைவிடவும் தற்போது பிரபல்யமடைந்து வரும் வகைககளாக பின்வருவனவற்றையும் கூறலாம்

- ♦ மின்அரசாங்கம் E-government
- ♦ மொபைல் வணிகம் -Mobile Commerce (m-commerce)

இவை சற்று வித்தியாசமான எண்ணக்கருக்களை கொண்டவை மேற்படி வகைகள் பற்றி விரிவாக காண்பதற்கு முன்பாக முக்கிய மின்வணிக பொறிமுறைகள் பற்றி கவனிப்போம்.

**மின்வணிக பொறிமுறைகள்: ஏலவிற்பனை (Auction)**

இது ஒருவகை பேரம் பேசும் வணிகமுறையாகும் விற்பனையாளர் குறித்த பொருள் சேவைக்கு ஒரு விலையினை நிர்ணயித்திருக்க வாங்குபவர்கள் ஒவ்வொரு விலையினை நிர்ணயிக்க ஒருநிலையில் இருவரில் ஒருவர் ஒரு விலைக்கு இணங்கி அப்பொருளை அல்லது சேவையினை பெற்றுக்கொள்ளல் அல்லது விற்பனைசெய்வதாகும். ஆரம்ப காலத்தில் ஏன் இன்னும் நமது ஊர்களில் நகரங்களில் பல்வேறு வடிவங்களில் இவ்வணிகம் நடைபெற்றுவருகிறது. நவீன வர்த்தகத்தில் பங்குவாத்தகம் கூட இதுமாதிரித்தான் நடைபெறுகிறது (பங்கு வாத்தகம் பின்னர் விரிவாக ஆராயபடும்)

இச்செயற்பாடு மின்வணிகத்தில் சிறப்பாக கையாளப்படுகிறது. இணையத்தளத்தினுடாகவும் இணையத்தினூடாக இயங்கும் மென்பொருட்களின் உதவியுடனும் மிகவேகமாவும் துல்லியமானதாகவும். இவை மினவணிகத்தில் கையாளப்படுவதுடன் மின்வணிகத்தினூடாக செய்யப்படுகையில் கூடிய பயன்பாடுகள் விற்பனையாளருக்கும் கொள்வனவாளருக்கும் கிடைக்கின்றது அத்துடன் பாதுகாப்பானதாகவும் இருக்கிறது

இந்த ஏலவிற்பனையில் Forward Auctions ,Reverse Auctions என இரண்டு வகைகள் உண்டு. இதில் முதலாவது வகையானது விற்பனையாளர்கள் கூடியளவிலான வாங்குவோரை பெறுவதற்காக பயன்படுத்தப்படுவது மற்றையது தனிநபர் அல்லது ஒருநிறுவனம் தனக்கு தேவையானவற்றை கொள்வனவு செய்வதற்கு பயன்படுத்துவது

ebay.com ஆனது மிகப்பிரபல்யமான ஏல விற்பனைத் தளமாகும். ஏலவிற்பனைக்கு அடுத்த முக்கிய பொறிமுறை **மின்கடை** (Electronic Storefront) ஆகும் இது ஒரு குறித்த வகை விற்பனைக்காக நடாத்தப்படுகின்ற இணையத்தளத்தினை குறிக்கும் இங்கே குறித்த வகை விற்பனை மாத்திரம் நடைபெறும்




அடுத்தது நாம் காண்கின்ற விற்பனைக் கடைத்தொகுதியினை இணையத்தில் நடாத்துவதாகும் இதனை மின்கடைத்தொகுதி (Electronic mall/cyber mall/ e-mall) எனலாம். இது தனித்தனி விற்பனை நிலையங்களின் தொகுதி ஒரே இணையத்தளத்தில் காணப்படுதலைக் குறிக்கும் பல்வேறுதரப்பட்ட உலகளாவிய விற்பனை நிலையங்கள் ஒரே கூரையில் இயங்குவதற்கு சமன். இதற்கு சிறந்த உதாரணமாக shopping.yahoo.com' இனை கூறலாம்

அடுத்தது **மின் சந்தை** (Electorin Market place/ e-Market place) ஆகும். இது ஒரு வகையான மெய்நிகர் (Virtual) இணையசந்தையாகும் இங்கு பலதரப்பட்ட விற்பனையாளர்களும் கொள்வனவாளர்களும் பொருட்களையும் சேவைகளையும் வாங்கல் விற்றல் நடவடிக்கையில் ஈடுபடுவர். மேற்கண்ட நான்கு முக்கிய பொறிமுறைகளே இந்த மின்வணிகத்தில் காணப்படுகின்றன. மின்வணிகத்தின் நன்மைகளும் எதிர்நோக்கும் தடைகளும்!

**நன்மைகள்**

நிறுவனங்களைப்பொறுத்தவரையில் தேசிய சர்வதேச சந்தைகளை அணுகுவதற்கு இது வாய்ப்பாக இருக்கும் அத்துடன் தகவல்களை பெற்றுகொள்ளுதல் விநியோக நடவடிக்கைகள் மற்றும் வர்த்தக நடவடிக்கைகளை கையாள்வதற்கு ஆகும் செலவு குறைவாகும் நுகர்வோரைப் பொறுத்த வரையில் மிகப்பெருமளவிலான பொருட்களையும் சேவைகளையும் எந்நேரமும் (24/7) வாங்கிட அல்லது அவைபற்றி அறிந்துகொள்ள முடிகிறது. அத்துடன் எப்பொருளாயினும் சேவையாயினும் தேவையானதை நியாய விலையில் இருந்த இடத்தில் இருந்துகொண்டே பெற்றுக்கொள்ள முடிகிறது. பொதுவில் நுகர்வோர் அவர்கள் எந்த நாட்டில் எந்த மூலையில் இருந்தாலும் அவர்களை குறித்த பொருள் சேவை பற்றிய தகவல்கள் யாவும் சென்றடையவும் அவற்றை அவர்கள் பெற்றுக்கொள்ளவும் மின்வணிகம் வழிவகுக்கிறது

**தடைக்கற்கள்**

தொழில்நுட்பரீதியில் நோக்குகையில் சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பாதுகாப்பு தரநிர்ணய முறைகளில் காணப்படும் குறைபாடுகள். தொலைத்தொடர்பு துறையில் காணப்படும் தரவுப்பரிமாற்ற வேகப்பற்றாக்குறைகள். நம்மூரில் இது மிகமிக பின் தங்கிய நிலையில் உள்ளது ஒரு பரிமாற்றத்தினை மேற்கொள்ளும்போது அது இடையில் தடைப்படுவது பாரிய சிக்கலை தோற்றுவிக்கும். மின்வணிகமொன்றை ஒருவர் ஏற்படுத்துவதற்கு செலவுசெய்யவேண்டிய தொகை அதிகமானதாக இருத்தல் மிகப்பெரிய தடைக்கல்லாகும் மின்வணிகம் பாதுகாப்பற்றது என்று பொதுவில் நிலவுகின்ற அபிப்பிராயம். மற்றும் இன்னமும் தீர்க்கப்பட முடியாதிருகின்ற சட்டப் பிரச்சனைகள் ,ஆபத்தான விற்பனையாளர்கள் நுகர்வோர்கள் போன்றவர்களின் விரும்பத்தகாத ஏமாற்று நடவடிக்கைகள் போன்றவை மின்வணிகத்தில் எதிர் நோக்கப்படும் தடைக்கற்கள் ஆகும்.

(வளரும்)

# இலகுவான e-mail Form ஒன்றை அமைப்பது எவ்வாறு?




உதவிக் குறிப்பு

சில இணையத் தளங்களில் அந்த இணையத் தளம் பற்றிய கருத்துக்கள் அனுப்புவதற்காக Mail form களை அமைத்திருப்பார்கள்.

இவ்வாறான இலகு e-mail form களை HTML மூலமாக எவ்வாறு அமைத்துக்கொள்வது என்று நீங்கள் சிந்திக்கக்கூடும்.

அதற்கான அடிப்படை HTML Coding இதுதான்

```
<html>
<body>
<form action="MAILTO: editor@nilavu.net"
method="post" enctype="text/plain">


<h3>This form sends an e-mail</h3>
Name:<br>
<input type="text" name="name"
value="yourname" size="20">
<br>
Mail:<br>
<input type="text" name="mail"
value="yourmail" size="20">
<br>
Comment:<br>
<input type="text" name="comment"
value="yourcomment" size="40">
<br><br>
<input type="submit" value="send">
<input type="reset" value="reset">

</form>
</body>
</html>
```

editor@nilavu.net எனும் மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சலொன்றை அனுப்புவதற்கான mail form மேலே தரப்பட்டுள்ளது.

இதனை Notepad இல் type செய்து, mailform.html எனும் பெயரில் save செய்துகொள்ளுங்கள் (file name ஐ நீங்கள் விரும்பியவாறு கொடுக்கலாம். இங்கு `.html` என்பதே முக்கியமானது.)

இப்பொழுது Internet Explorer கொண்டு இந்த file ஐ open செய்யுங்கள். உங்களுக்கான output பின்வருமாறு அமையும்.




இந்த form ஐ அடிப்படையாகக் கொண்டு நீங்கள் உங்களுக்கு ஏற்றபடி e-mail form ஐ வடிவமைத்துக்கொள்ளலாம்.





தகவல் தொழில்நுட்பம் சார்ந்த உங்கள் கேள்விகளுக்குப் பதில் அளிப்பதற்குத் தயாராக இருக்கிறார் மிஸ்டர் மெமறி!

கம்ப்யூட்டர் ருடே
359, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

# வாசகர் வட்டம்

**கம்ப்யூட்டர் ருடே** வாககர் வட்டம் ஒன்றை உருவாக்கும் முகமாக வாசகர்களது விபரங்களைச் சேகரிக்கத் திட்டமிட்டிக்கின்றோம்.

ஒவ்வொரு இதழிலும், வாசகர் வட்ட உறுப்பினர்களது விபரங்களைப் பிரசுரித்து, வாசகர்களுக்கிடையேயான ஆரோக்கியமான நட்பை உருவாக்கி - தகவல் தொழிநுட்பப் பரிமாற்ற வலை ஒன்றைக் கட்டி எழுப்புவதே இந்த வாசகர் வட்ட உருவாக்கத்தின் நோக்கமாகும்.

வாசகர் வட்டத்தில் உறுப்பினர்களாவதற்குரிய விண்ணப்பப்படிவம் கீழே பிரசுரமாகியுள்ளது. அதனைப் பூர்த்திசெய்து அனுப்பி வைத்து உங்களையும் **கம்ப்யூட்டர் ருடே** வாசகர் வட்ட உறுப்பினராக்கிக்கொள்ளுங்கள்.

## கம்ப்யூட்டர் ருடே வாசகர் வட்டம்

மாதிரி உறுப்பினர் விண்ணப் படிவம்

முழுப்பெயர் : ..................................................

முகவரி : ..................................

வயது : ..................................

பிறந்த திகதி : ..................................

பாடசாலை / தொழில் முகவரி : ..................................

தேசிய / தபால் / பாடசாலை : ..................................

அடையாள அட்டை இல : ..................................

தொலைபேசி இல : ..................................................

மின்னஞ்சல் : ..................................................

இணைய முகவரி : ..................................

இணைய முகவரி : ..................................

தகவல் தொழில்நுட்பத்துறை (IT)யில்

ஆர்வமுள்ள வகுதிகள் : ..................................

வேறு துறையில் ஆர்வங்கள் : ..................................

பொழுதுபோக்கு : ..................................................

குறிப்பு : ..................................................

மேலுள்ள விவரங்கள் யாவும் உண்மையானவை எனவும், அவற்றையும் - புகைப்படம் இணைக்கப்பட்டிருப்பின் அதனையும் **கம்ப்யூட்டர் ருடே**யில் பிரசுரிப்பதில் எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி : ..................

விண்ணப்பதாரியின் ஒப்பம் : ..................................

விண்ணப்பங்களை அனுப்பவேண்டிய முகவரி:

**கம்ப்யூட்டர் ருடே**

**வாசகர் வட்டம்,**
**359, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

# தொழில் வங்கி

**கம்ப்யூட்டர் ருடே** தொழில் வங்கியில் உங்கள் தனிப்பட்ட, நிறுவன விபரங்களைப் பிரசுரிப்பதற்குரிய விண்ணப்படிவங்கள் கீழே பிரசுரமாகியுள்ளன. அவற்றைப் பூர்த்திசெய்து அனுப்பி வைத்து உங்கள் விபரங்களையும் பதிவுசெய்து பயன்பெறுங்கள்.

## கம்ப்யூட்டர் ருடே தொழில் வங்கி

தொழில் வாய்ப்புத் தேடுவோருக்கு

முழுப்பெயர் : ..................................................

முகவரி : ..................................

வயது : ..................................

பிறந்த திகதி : ..................................

கல்வி கற்ற பாடசாலை : ..................................

கல்வித் தகுதி : ..................................

தொழில் அனுபவம் : ..................................

எதிர்பார்க்கும் தொழில் / பதவி : ..................................

தொலைபேசி இல : ..................................

மின்னஞ்சல் : ..................................

ஆர்வம் : ..................................

மேலுள்ள விவரங்கள் யாவும் உண்மையானவை எனவும், அவற்றை **கம்ப்யூட்டர் ருடே**யில் பிரசுரிப்பதில் எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி : ..................

விண்ணப்பதாரியின் ஒப்பம் : ..................................

## கம்ப்யூட்டர் ருடே தொழில் வங்கி

வெற்றிடம் கொண்டுள்ள நிறுவனங்களுக்கு

நிறுவனம் : ..................................

முகவரி : ..................................

பதவி / தொழில் / வெற்றிடம் : ..................................

வயது எல்லை : ..................................

எதிர்பார்க்கும் அனுபவம் : ..................................

**உறுதிப்படுத்தல்**

எமது நிறுவனம் சார்பாக நாம் மேலே கொடுத்துள்ள விவரங்கள் யாவும் உண்மையானவை எனவும் அவற்றைப் பிரசுரிப்பதில் எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

பதவி முத்திரை


அதிகாரியின் ஒப்பம் : .................... திகதி : ............

- *எவ்வித கட்டணமும் அறவிடப்படமாட்டாது.*
- *விண்ணபங்கள் வரும் ஒழுங்கில் பிரசுரிக்கப்படும்.*
- *விண்ணப்பிப்பவர்கள், நிறுவனங்கள் நேரடியாகவே தொடர்புகொள்ளலாம்.*
- *பிரசுரம் தொடர்பான இறுதிமுடிவு ஆசிரியருடையது.*


# Google Chrome இல் கணித்திரை அறிவுறுத்தல்களைக் கட்டுப்படுத்தலாம்


Google Chrome அண்மையில் மூன்றாம் தரப்பு நீட்சிகளுக்காக (3rd party extensions ) சேர்த்துள்ள, கணித்திரை அறிவுறுத்தல்கள் (Desktop Notifications), நாம் குரோம் உலாவில் இல்லாமல் வெளியிலுள்ள பிரயோகம்/பயன்பாடு (Application) ஒன்றில் முக்கியமான வேலையில் ஈடுப்பட்டுக் கொண்டிருக்கும் சமயங்களிலும் இடையில் தோன்றி வெறுப்பையுண்டாக்குகின்றது. இந்த அறிவுறுத்தல் தோன்றல்களை எமது விருப்ப தெரிவிற்கேற்றவாறு மாற்றுவதற்கு பின்வரும் வழிமுறையை கையாளலாம்.

கூகுள் குரோமை திறந்து அதன் வலது புறத்து மூலையில் இருக்கு சாவி பொத்தானை அழுத்தவும்.





அப்போது தோன்றுகின்ற மெனுவில் Options ( Windows) / Preference (Linux) இனை தெரிவுசெய்யவும்.





அங்கு வருகின்ற சாளரத்தில் “ Under the Hood இனை தெரிவு செய்யவும்




இப்பொழுது “Content settings” இனுள் சென்று “Notifications” இனை தெரிவுசெய்தால் வருகிற தெரிவுகளில்




முதலாவது தெரிவை தேர்ந்தொடுப்போமானால் கூகுள் குரோமை திறந்து வைத்துவிட்டு,நாம் கணினியில் என்ன வேலை செய்துகொண்டிருந்தாலும், எந்தவித கேட்டுகேள்வியும் இல்லாமல், இந்த அறிவித்தல்கள் எம்முன்னே தோன்றும்.

எமது தெரிவு இரண்டாவதாக இருக்குமானால் இவ்வறிவுறுத் தல்களை காட்டுவதற்கு கூகுள் குரோம் எமது அனுமதியை கேட்டு நிற்கும்.

எந்த அறிவுறுத்தல்கள் வேண்டாம் என்று நினைத்தோமானால் எமது தெரிவு மூன்றாவதாக இருக்க வேண்டும்.

Windows Internet Explorer 8

Making the Web Work for You

## மைக்ரோசாப்ட் எச்சரிக்கை

*இன்டர்நெட் எக்ஸ்புளோரர் பதிப்பு 6 மற்றும் 8 பயன்படுத்துபவர்களுக்கு, மைக்ரோசாப்ட் நிறுவனம் எச்சரிக்கை ஒன்றை விடுத்துள்ளது.இதில் உள்ள சில பிழை வாயில்கள் மூலமாக, பாதுகாப்பற்ற Malwareக்குள், ஹேக்கர்கள் தங்களின் கெடுதல் புரோகிராம்களை அனுப்பி எளிதாக அந்த கணினிகளின் செயல்பாட்டினைக் கைப்பற்ற முடியும் எனக் கூறியுள்ளது.இவர்கள் கணினி பயன்படுத்துபவர்களுக்குப் பலவித ஆசை காட்டி, ஒரு குறிப்பிட்ட முகவரியில் உள்ள இணைய தளத்திற்கான தொடர்பில் கிளிக் செய்திடத் தூண்டுகின்றனர்.அந்த தளம் திறக்கப்பட்டவுடன், இன்டர்நெட் எக்ஸ்புளோரரில் உள்ள பிழைவழிகளைப் பயன்படுத்தி, Malware புரோகிராகள் அனுப்பப்படுவது இவர்களுக்கு எளிதாகிறது.பிரவுசர்கள் கணினி தரும் மெமரியினைத் தங்கள் தேவைகளுக்கு ஏற்றபடி செயல்படுத்துகையில், இந்த ஹேக்கர்களின் புரோகிராம் அதற்கான குறியீடுகளை அனுப்புகிறது.பின்னர் அவற்றின் மூலம் கணினியை கைப்பற்றுகிறது. இதற்கான நிரந்தர தீர்வு ஏற்படுத்த மைக்ரோசாப்ட் முயன்று வருகிறது.*

## எச்சரிக்கை




மைக்ரோசொப்ட் நிறுவனம் ஒவ்வொரு மாதமும் இரண்டாவது செவ்வாய்க்கிழமை, தன் தொகுப்புகளின் பிழைகளை நிவர்த்தி செய்திடும், patan பைல்களை வெளியிடுகிறது. இவை அப்டேட் பைல்கள் என அழைக்கப்படுகின்றன. இதனைப் பயன்படுத்தி, பல சைபர் கிரிமினல்கள், வைரஸ்களைப் பரப்புகின்றனர்.

சென்ற மாதம், இதனைப் பயன்படுத்தி வைரஸ் ஒன்றினைப் பரப்ப முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இப்போதும் இது தொடர்வதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பலருக்கு மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் பாதுகாப்பு பிரிவு இயக்குநர் ஸ்டீவ் லிப்னர் (Steve Lipner) - (உண்மையிலேயே அப்படி ஒருவர் இருக்கிறார்) - பெயரில் ஒரு இமெயில் அனுப்பப்படுகிறது.

அதில், கணினியை வைரஸ் பாதிப்பிலிருந்து பாதுகாக்க, உடனடியாக இணைக்கப்பட்டுள்ள KB453396ENU.exe என்ற பைலை இன்ஸ்ரோல் செய்திடுமாறு அறிவுறுத்தப்படுகிறது. உண்மையிலேயே அந்த பைல்தான் வைரஸ்.

இந்த வைரஸ், விரைவில் நூற்றுக் கணக்கான கம்ப்யூட்டர்களுக்குப் பரவும் தன்மை உடையது. இதன் மூலம் botnet என்று அழைக்கப்படும் மோசமான தன்மை உடைய வைரஸின் ஒரு பகுதியாக இது செயல்படும்.

பின்னர், அந்த botnet, இணைய தளங்கள், பெரிய நிறுவனங்களின் சேவர்களில் பரவி தகவல்களைத் திருடும். பின்னர் இதே தகவல்கள் இந்த வைரஸை எழுதியவர்களால், குற்றவாளிகளுக்கு விற்பனை செய்யப்படும்.

இந்த வைரஸ் வரும் மின்னஞ்சலை உற்று நோக்கினால், அதில் பல விஷயங்கள் போலி என அறிந்து கொள்ளலாம். எடுத்துக் காட்டாக, மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் அப்டேட் பட்ச் (paton) பைல், ஒவ்வொரு இரண்டாவது செவ்வாய்க்கிழமைதான் வெளியிடப்படும்.

இந்த அஞ்சல் எந்த நாளிலும் உங்கள் மெயிலுக்கு வரலாம். மெயிலின் வாசகமும், ஒரு பெரிய நிறுவனத்தின் ஸ்டைலில் இருக்காது. ஆங்கிலத்தை இரண்டாவது மொழியாகக் கொண்டவனின் வாசகமாக இருக்கும்.

மெயிலின் ரிப்ளை முகவரியில் உள்ள மைக்ரோசொப்ட் என்ற சொல்லில் எழுத்துப் பிழை இருக்கும். எனவே இது போன்ற மெயில்களைப் பெறுகையில் கவனமாக இவற்றைப் பார்த்து எச்சரிக்கை கொள்ள வேண்டும்.



மதி கலர்ஸ்
பிறிண்டர்ஸ்
உங்கள் இல்லங்களில் நடைபெற இருக்கும்
மங்களகரமான நிகழ்வுகளுக்கு....
திருமண அழைப்பிதழ்
காட்சியறை
இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 300ற்கு மேற்பட்ட பல வர்ண
புத்தம் புதிய டிசைன்களுடன் மலிந்த விலையில்
பிறிண்டிங் வசதியுடன் பெற்றுக்கொள்ளலாம்.
MATHI COLOURS
PRINTERS
WEDDING CARD SHOW ROOM
15/2, முருகேசர் லேன், நல்லூர்.
T.P: 021 2229285, 077 7222524
e-mail: mathicolours@gmail.com
web : www.mathicolours.com

15-547.
B-32.40
15-6
3.60

# பொது இடங்களில் உள்ள கணினிகளை பயன்படுத்துபவரா நீங்கள்?

# உங்கள் தகவல்கள் திருடப்படலாம்!

பலரும் பயன்படுத்தும் பொதுவான இடங்களில் உள்ள கணினிகளைப் பயன்படுத்துபவரா நீங்கள்? அப்படியென்றால் உங்கள் தகவல்களின் பாதுகாப்புக் குறித்து மிக மிக அவதானமாக இருக்கவேண்டியது அவசியம். உங்களது தகவல் பாதுகாப்பு தொடர்பாக நீங்கள் முக்கியமாகக் கவனிக்க வேண்டிய சில விடயங்களை இங்கே தருகிறோம்.

இணையத்தளங்களைப் பயன்படுத்துவதற்கோ அல்லது உங்கள் மின்னஞ்சலைப் பார்வையிடுவதற்கோ உறுப்பினர் பெயர் (User Name) மற்றும் கடவுச்சொற்களைக் (Pass word) கொடுத்திருப்பீர்கள். உங்கள் வேலைகள் முடிந்ததும் அந்த இணையப்பக்கத்தில் இருக்கும் 'log out' கட்டளையைப் பயன்படுத்தி நீங்கள் வெளியேறிக்கொள்ளலாம்.

சில இணையப்பக்கங்களில் Automatic login, Keep me signed in போன்ற ஒரு தெரிவுக்கான பகுதியை நீங்கள் அங்கு உள்நுழையும் போது காட்டி நிற்கும். இந்தக் கட்டளைகளை தெரிவு செய்வீர்களேயானால் உங்கள் உறுப்பினர் பெயர் மற்றும் கடவுச்சொல் போன்றன அந்தக் கணினியில் பதியப்பட்டுவிடும். இது இன்னுமொருமுறை இந்த பக்கத்தினை நீங்கள் திறக்கும்போது உங்களிடம் உறுப்பினர் பெயர் மற்றும் கடவுச் சொல்லினைக் கேட்டு உங்களைச் சிரமப்படுத்தாமல் இருப்பதற்கான ஒரு வசதியாகும்.

ஆனால் பலரும் பயன்படுத்தும் கணினிகளில் நீங்கள் இதனைத் தெரிவுசெய்தால் உங்களின் பின்னர் அந்தக் கணினியைப் பயன்படுத்தும் எவரும் உங்கள் பெயர் மற்றும் கடவுச் சொற்களோடு உங்கள் மின்னஞ்சலுக்கோ அல்லது நீங்கள் உள்நுழைந்த இணையப் பக்கங்களுக்கோ செல்ல வழி ஏற்படுத்திக்கொடுத்துவிடும்.

எனவே, இந்த விடயத்தில் மிக அவதானமாக இருக்க வேண்டியது அவசியம்.

அத்தோடு பலருடைய பாவனையில் இருக்கும் கணினி ஒன்றில் உங்களது வேலைகளை முடித்துவிட்டுச் செல்லும் போது அந்தக் கணினியில் உங்கள் முக்கியமான தகவல்களை சேமித்துவிட்டுச் செல்லாதீர்கள். குறிப்பாக உங்களைப் பற்றிய தனிப்பட்ட விபரங்களையோ அல்லது உங்கள் நிறுவனம் மற்றும் வேலைகள் தொடர்பாக நீங்கள் இணையத்தின் மூலம் தரவிறக்கம் செய்து கொண்ட தகவல் கோப்புக்களையோ பொதுக் கணினிகளில் சேமித்துவைத்தால் அது உங்களைப்பற்றிய தனிப்பட்ட தகவல்களைப் பிறர் திருடிக் கொள்வதற்கு ஏதுவாகிவிடும். எனவே எமது தகவல்களைப் பிறர் அறிவதற்கோ அல்லது திருடுவதற்கோ நாமே வழிமுறைகளை வகுத்துக்கொடுத்துவிடாமல் அவதானமாய் இருப்பது அவசியம்.

பொதுக் கணினிகளில் நீங்கள் இணையத்தளங்களைப் பார்வையிட்டு முடிந்தபின்னர் அந்த இணையத்தளங்களின் முகவரிகள், அவைகளால் உங்களுக்கு வழங்கப்பட்ட தகவல்கள், அந்த இணையத் தளங்களுக்கு நீங்கள் கொடுத்த தகவல்கள் போன்றவற்றை அழித்துவிடுவது உங்களது தகவல் பாதுகாப்பை மேலும் உறுதி செய்யும்.

இதற்கு நீங்கள் History பகுதிக்கு சென்று அவற்றை அழித்துவிடுவது சிறந்தது. அத்தோடு Delete Files> Delete Cookies போன்றவற்றையும் மேற்கொள்வது சாலச்சிறந்தது.



இணைய உலாவிகளில் (Internet browsers) கடவுச் சொற்களைச் சேமிப்பதற்கான கட்டளைகள் கொடுக்கப்பட்டிருக்கும். அவ்வகையான உலாவிகளில் உங்கள் உறுப்பினர் பெயர், கடவுச்சொல் என்பவை சேமிக்கப்படவில்லை என்பதை உறுதி செய்துகொள்ளுங்கள்.


தற்போது பொதுவாக அனைத்து இணைய உலாவிகளிலுமே உங்கள் வேலை முடிந்ததும் பார்வையிட்ட பக்கங்கள், பெயர், நுழைவுச் சொல், தகவல்கள் என்று அனைத்தையும் நீக்கிவிடக்கூடிய மேம்படுத்தல்கள் வந்துவிட்டன. எனவே அவற்றைப் பயன்படுத்தி பாதுகாப்பாக அனைத்தையும் அழித்துவிடலாம்.

பொது இடங்களில் உள்ள கணினிகளில் இணையத்தில் கடனட்டைப் பாவனை, இணையம் மூலமாகக் கட்டணங்களைச் செலுத்துதல், வங்கிக் கணக்குகளைச் செயற்படுத்துதல், என எந்தவித பணப் பரிமாற்றச் செயற்பாடுகளையும் செய்யாதீர்கள். நீங்கள் பொது இடங்களில் பயன்படுத்தும் கணினிகளில் உங்கள் நடவடிக்கைகளையும் தரவுகளையும் சேமித்து வைக்கக்கூடிய மென்பொருட்கள் நிறுவப்பட்டிருக்கலாம்; ஒளிப்பதிவுக் கருவிகள் மூலம் உங்களது கணினித் திரை பதிவுசெய்யப்பட்டுக்கொண்டிருக்கலாம். இவை இணையக் குற்றங்களைத் தடுப்பதற்காக நிறுவப்பட்டிருந்தாலும்கூட அவை உங்களது தனிப்பட்ட தகவல் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலானவை என்பதை மனதில் வைத்துக்கொள்ளுங்கள்.

எனவே பொது இடங்களில் உள்ள கணினிகளைப் பயன்படுத்தும்போது கூடிய அவதானத்துடன் செயற்படுவது உங்களது தகவல் பாதுகாப்பை உறுதிப்படுத்தும்.


எமது தயாரிப்புகள்
* பிரியாணி வகைகள்
* கொத்துவகைகள்
* பீசா
* சூப் வகைகள்
* Indian Sweet வகைகள்
அனைத்தையும்
ஒரே இடத்தில்
பெற்றுக்கொள்ளலாம்
Royal Restaurant
211, Kasthuriyar Road,
Jaffna. T.P. : 0771751495

# STUDY IN UK







லண்டனில் உயர்கல்வி கற்பது தொடர்பான இலவச ஆலோசனைகளுடன் IELTS இன்றி ஒரே நாளில் அனுமதிகள் பெற்றுத்தரப்படும்.

1) UKBA Highly Trusted College
2) IELTS தேவையில்லை
3) 4 வருட visa உத்தரவாதம்
4) 20 மணித்தியாலம் வேலை செய்யும் வசதி
5) அனைத்து கட்டணங்களும் After Visa
6) மறைமுக கட்டணங்கள் எதுவும் இல்லை
7) ஒரு மாதத்தில் பயணம்

**APPLY NOW!!!**

March/April Intake ற்கான அனுமதிகள் தற்போது ஏற்றுக்கொள்ளப்படுவதுடன் பல வருடம் அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகளின் உதவியுடன் உங்களது விசா தேவைகள் பூர்த்தி செய்யப்படும்.

தலைநகரில் அதி கூடுதலான விசாக்களை பெற்றுக்கொடுத்துவரும் எமது நிறுவனத்துடன் நீங்களும் இணையுங்கள்.

**உங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்!!!!**

CALL: 0117 55 55 11
0117 55 55 14
0217 53 83 95

**O/L தகமை போதுமானது**

EXPONET
Overseas Consultants
(Group of Exponet (Pvt) Ltd.)

Head Office:
379-1/2, Galle Road, Col-06

Jaffna Branch:
102 2/2, Navalar Road, Jaffna.

Fax: 0117 55 55 17
E-Mail: exponetpvt@yahoo.com